கல்கி

KALKI 13.3.2005 ரூ.6.00




உழைக்கும் பெண்கள் சிறப்பிதழ்



மிஸ்டர் க்ளீன்!

– ரஜினியின் ஆலோசகர் எழுதுகிறார்


WORLD GOLD COUNCIL
gold
R Y M கல்யாண மண்டபத்தில்
டிசம்பர் 6ஆம் தேதியன்று
நடைபெற இருக்கும்
ப்ரீதி - சுரேஷ்
திருமண வரவேற்புக்கு வந்திருந்து மணமக்களை
வாழ்த்துமாறு தங்களை அன்புடன் அழைக்கிறோம்.
தயவு செய்து மணமகளின் தன் நிகரில்லா
தங்க பிலிக்ரி நெக்லசை கண் இமைக்காமல்
பார்ப்பதை தவிர்க்கவும்.
rubecon
முகூர்த்த கலெக்ஷன்
PRINCE JEWELLERY
Only At Chennai:
CATHEDRAL ROAD Tel: 2811 7720
PANAGAL PARK Tel: 2434 6783
SPENCER PLAZA Tel: 2849 5817
• Showrooms open on Sundays
• Valet parking available
• www.princejewellery.com

ஆசிரியர் பக்கம்

வீடு பேறு!

நுழைந்ததும் செருப்புச் சிதறல்
வரவேற்பறையில் வாரத்துத் தூசி
மேஜையில் காலையின் காப்பிக் கோப்பை
சொட்டிச் சொதசொதக்கும் குளியலறைக் குழாய்
கம்ப்யூட்டர் உறை கட்டாயமாய்த் தரையில்
மூன்று நாட்களாய் முணுமுணுக்கும் குழல் விளக்கு
முடிந்து போன மாத்திரைத்தாள்கள் மூலையில்
- மனசுக்குப் பிடிக்காதவை முறைத்துப் பார்க்கும்
கான்க்ரீட் குப்பைத் தொட்டி...

இருப்பதனைத்தும் இல்லாததாய்க் கருதி
முகத்தில் மட்டும் அணியும் புன்னகை
அம்மாவைத் தோழியாய் அறிவுறுத்தும் மகனுக்கு
மாதொரு பாகனாய் மகிழ்வான் கொழுநன்
'அப்பாடி வந்துட்டா' - அகலாமல் தொலைக்காட்சி
கவ்வித் தொடரும் தீவிரக் கண்கள்

சேலையைத் தூக்கிச் செருகி
மனச்சோர்வும் மண்டும் அழுக்கும்
சேர்த்துப் பெருக்கித் தள்ளி
திரி நிமிண்டி தீபமேற்றித் தொழுகிறாள்:

"வீடு பேறு கிடக்கட்டும் தேவி...
வீடென்ற பெயர் பொருந்த முதலில் வரம் தா!"



“வாயைக் கிளறாதீங்க!”

இளங்கோவன் அதிரடி!

தமது அதிரடிப் பேட்டிகளாலும், பேச்சுக்களாலும் தமிழக அரசியலின் மையப் புள்ளியாகியிருக்கிறார் மத்திய அமைச்சர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன். .''அவர் மீது



நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று கூட்டணிக் கட்சியான தி.மு.க கண்டிப்பாகக் கூறி விட்டது. எனவே காங்கிரஸ் மேலிடத்தால் இளங்கோவன் பலிகடா ஆக்கப்படுவார் என்ற பேச்சு பரவலாக இருக்கிறது. இதற்கிடையில் சோனியாவிடம் ராஜினாமா கடிதத்தைக் கொடுத்து விட்டதாகவும் செய்திகள் வருகின்றன. இந்தச் சூழலில் இளங்கோவனிடம் பேசினோம்.

நீங்கள் கலைஞரைத் தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசியது உண்மையா?

"தமிழக அரசியல் தலைவர்களில் மிகவும் மூத்த தலைவர் கலைஞர். அறுபத்தைந்து ஆண்டுக் காலமாக பொது வாழ்க்கையில் உள்ளவர். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரை வழிகாட்டிகளாக ஏற்றவர். அவர் மீது நான் மிக்க மரியாதை வைத்திருக்கிறேன். என்னுடைய அரசியல் வாழ்க்கையில், பல சவால்களை அரசியல்ரீதியாக எதிர் கொண்டிருக்கிறேனே தவிர, யாரையும் தனிப்பட்ட முறையில் விமர்சித்து தரம் தாழ்ந்து பேசியதில்லை. பாரம்பரியமிக்க மரபில் வந்த நான், அது போல என்றைக்கும் செய்ய மாட்டேன். எனவே, காங்கிரஸ் மாவட்டத் தலைவர்கள், நிர்வாகிகள் கூட்டத்தில் நான் பேசாதவற்றை, பேசியதாகத் தவறான தகவல் தி.மு.க.விடம் சொல்லப்பட்டிருக்கிறது. கூட்டணிக் கட்சித் தலைவரான கலைஞரை நான் தவறாகப் பேசவில்லை. அது என் நோக்கமுமல்ல. இது தவிர நாற்பத்தைந்தாண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற, என் தந்தை சம்பந்தமான சம்பவத்தைப் பற்றியும் நான் பேசவில்லை. என் பேச்சு தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருப்பின் அல்லது திரித்துச் சொல்லப்பட்டிருப்பின் அது என் துரதிர்ஷ்டமே!"

உட்கட்சிக் கூட்டத்தில் நீங்கள் பேசியதாகச் சொல்லப்படுவது தி.மு.க தலைமைக்கு டேப் செய்யப்பட்டு கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதே...?

"அப்படியிருப்பின் அதைச் செய்த காங்கிரஸ் பிரமுகர், தமது துரோகச் செயலுக்காக மேலிட நடவடிக்கைக்கு ஆளாக நேரிடும்."

ஒரு கூட்டணிக் கட்சியில் உள்ள அமைச்சர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மற்றொரு கூட்டணிக் கட்சி தீர்மானம் போடுவது சரியா?

"என் வாயைக் கிளறாதீர்கள். கூட்டணிக் கட்சியின் செயல்பாடுகளைப் பற்றி விமர்சிக்கக் கூடாது. ஆனால் ஒரு கட்சியின் உட்கட்சிக் கூட்டத்தில் சொல்லப்பட்டதாகக் கூறப்படும் சில கருத்துகளை, மற்றொரு கட்சி - அதுவும் கூட்டணிக் கட்சி - விமர்சிப்பது எந்த விதத்தில் சரி என்று தெரியவில்லை."

மத்திய அரசைப் போன்று மாநிலத்திலும் கூட்டணி ஆட்சி வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளீர்களா?

"தமிழக காங்கிரஸாரின் உள்ளக் குமுறல்களை, எண்ண ஓட்டங்களையே நான் இந்த விஷயத்தில் பிரதிபலித்தேன். மற்றபடி, கூட்டணி, கூட்டணி

ஆட்சி போன்றவற்றைப் பற்றியெல்லாம், தேர்தல் சமயத்தில் சோனியா அம்மா அவர்களே முடிவு செய்வார்கள்."

அ.இ.அ.தி.மு.க.வுடன் நீங்கள் ரகசிய உடன்பாடு செய்துகொண்டு விட்டதாகவும், அதன் விளைவாகவே தி.மு.க.வைச் சங்கடப்படுத்தும் விதத்தில் பேசுவதாகவும் சொல்லப்படுகிறதே?

"அதீத கற்பனை. கடந்த ஆறேழு வருடங்களில் நடந்த சம்பவங்களை நினைத்துப் பாருங்கள். ஜெயலலிதாவை என்னை விடக் கடுமையாக விமர்சித்த அரசியல் தலைவர் உண்டா? அதற்காக என் மீது எத்தனை வழக்குகள்? அதையெல்லாம் தாண்டித்தான் என் பாதையைக் கடந்து வந்திருக்கிறேன். பிரிந்து போன காங்கிரஸ்காரர்களை மீண்டும் காங்கிரஸ் பேரியக்கத்தில் ஒன்று சேர்த்து, அ.இ.அ.தி.மு.க.வுக்கு எதிராக, பலமான கூட்டணியை அமைத்து, பாராளுமன்றத் தேர்தலில் அதை வீழ்த்தியதில் எனக்கும் ஒரு பங்கு இருப்பதை யாரும் மறுக்க மாட்டார்கள்."

நீங்கள் சோனியா காந்தியிடம் ராஜினாமா கடிதத்தைக் கொடுத்து விட்டதாக, பத்திரிகைச் செய்திகள் வருகின்றனவே...?

"இது எங்கள் உட்கட்சி விவகாரம். இங்கே அதைப் பற்றிப் பேச வேண்டிய அவசியம் ஏதும் வரவில்லை."

கூட்டணி ஆட்சி என்ற கருத்தோட்டத்தில் இன்னும் உறுதியாக இருக்கிறீர்களே?

"சமீபத்திய நிகழ்ச்சிகளின் முத்தாய்ப்பாக, தமிழகமெங்கும் பல இடங்களில் காங்கிரஸ் தொண்டர்கள் 'காமராஜ் ஆட்சி லட்சியம்; கூட்டணி ஆட்சி நிச்சயம்' என்று போஸ்டர்கள் ஒட்டியிருப்பதையே உங்கள் கேள்விக்குப் பதிலாக வைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்."

- ப்ரியன்

லேட்டஸ்ட் நியூஸ்!

மார்ச் 1, 2 தேதிகளில் இளங்கோவன் நமக்கு அளித்த பேட்டி இது. இந்த இதழ் அச்சேறும் நேரத்தில் அவரும், தி.மு.க. தலைவர் கருணாநிதியும் சமரசமாகிவிட்டார்கள்! அரசியலில் என்னதான் நடக்காது!



கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் : கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ், 47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் : சீதா ரவி

ஆசிரியர் குழு : அனுராதா சேகர், ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு : எஸ். ஸ்டீஃபன், பி.ஆர். ராஜன்

தொலைபேசி : 22345622, 23, 24

தொலைநகல் : 044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு : kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு : subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு : info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யுஎஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

'ஒருவழியாக அரசியல் கட்சி தொடங்குவது உறுதி' என்று அறிவித்து விட்டார் விஜயகாந்த். "ஐம்பது வருடங்களாக வோட்டுப்போட்டு ஏமாந்து விட்டீர்கள். இனி நீங்கள் ஏமாறக் கூடாது. திருவண்ணாமலையில் ஏற்றப்படும் மகா தீபம் எவ்வாறு புனிதமானதோ, அதைப் போன்று இனி புரட்சி தீபம் ஏற்றப்படும். (கவனிக்க! விஜயகாந்த் மன்றக் கொடியின் நடுவே ஒளிர்வது புரட்சி தீபம்தான்) அரசியலில் கால் வைத்து விட்டேன். அதிலிருந்து இனி பின்வாங்க மாட்டேன். மாநாடு வைத்து விரைவில் அறிவிப்பேன்" – திருவண்ணாமலையை அடுத்து ஆரணியில் தமது ரசிகர் மன்றக் கொடியை ஏற்றி வைத்து, இப்படி அதிரடியாக முழங்கியிருக்கிறார் விஜயகாந்த். கையோடு 2006 சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடுவது உறுதி. யாருடன் கூட்டணி என்பதை பின்னர் அறிவிப்பேன் என்பதையும் ரசிகர்களுக்குச் சொல்லி, அவர்களை உற்சாக வெள்ளத்தில் நீச்சலடிக்க வைத்திருக்கிறார் "அ.தி.மு.க. கூட்டணியை வலுப்படுத்தவே எங்கள் கேப்டன் கட்சி தொடங்குகிறார்" என ரசிகர் மன்ற நிர்வாகிகள் வட்டாரத்திலிருந்து நம்பத் தகுந்த செய்திகள் காதில் விழுகின்றன.

அம்மாவை வலுப்படுத்த விஜயகாந்த் புதுக் கட்சி?

இது நிஜம்தானா என்று உளவறிந்து வர, ஒரு ரவுண்ட் வந்த போது, ''விஜயகாந்தை இப்போது அம்மாவின் அடிப்பொடித் தொண்டர் போல மாற்றி விட்டார்கள். அம்மா சொல்லுக்கு அவரிடம் எதிர்ப்பேச்சு கிடையாது. அவரை அற்புதமாக மூளைச் சலவை செய்தவர்கள், ராதாரவியும், எஸ்.எஸ்.சந்திரனும்'' என்று அடித்துச் சொல்கின்றன, அ.தி.மு.க. வட்டாரத்தின் கட்சி அலுவலகப் பட்சிகள்.

இதை உறுதி செய்வது போல, "முதலில் நடிகர் சங்கத் தேர்தலில் இந்த முறை போட்டியிடுவதில்லை என்று முடிவெடுத்து ஒதுங்கியிருந்த விஜயகாந்த், கடைசி நேரத்தில் தலைவர் பதவியில் போட்டியிட்டார்'' என்கிறார் ஒரு மூத்த நடிகர் சங்க நிர்வாகி. "இந்த முறை சரத்குமாரை தலைவர் பதவிக்கு நிறுத்துவதென்று நடிகர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் முடிவு செய்த நிலையில், அலறியடித்து விஜயகாந்தை உசுப்பிவிட்டவர்கள் ராதாரவியும் எஸ்.எஸ். சந்திரனும்தான். ''சரத்குமார் நடிகர் சங்கத்துக்குத் தலைவராகிவிட்டால், 2006ல் தி.மு.கவின் கை ஓங்குவதற்கு வாய்ப்புக் கொடுத்தது போல் ஆகிவிடும். இந்த ஒருமுறை மட்டும் நீங்கள் தலைவர் பதவிக்குப் போட்டியிடுங்கள். இது அம்மாவின் கட்டளை" என்று விஜயகாந்துக்கு இவர்கள் நெருக்கடி கொடுத்ததாகச் சொல்கிறார்கள். இது உண்மையோ என்று எண்ணும் விதமாக, நடிகர் சங்கத் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர், பதவியேற்பு விழாவை அ.தி.மு.க. கட்சி விழா போலவே நடத்தி விட்டார்கள். அந்த விழாவில் எஸ்.எஸ். சந்திரனும், ராதாரவியும் அப்பட்டமாக அ.தி.மு.கவை முன்னிறுத்தி அரசியல் பேசி, சரத்குமார் வயிற்றில் புளியைக் கரைத்து விட்டார்கள். அந்த விழாவில் கடைசியாகப் பேசிய விஜயகாந்த், சரத்குமாரை சமாதானப்படுத்தும் விதமாக,

• சரத்குமார்







• ராதாரவி

"நடிகர் சங்கத்துக்கு அடுத்த தலைவர் சரத்குமார்" என்று அதிரடியாக அறிவிக்க, 'பாவம்! வோட்டுப்போட நாம் இருக்கிறோம் என்பதைக் கூட மனதில் கொள்ளாமல் இப்படிப் பேசுகிறாரே!' என்று சங்க உறுப்பினர்கள் அத்தனை பேரும் வேடிக்கை பார்த்தார்கள்.

இன்னொரு பக்கம் சுனாமி பாதித்த பகுதிகளைப் பார்வையிடச் சென்ற விஜயகாந்த், "சுனாமி நிவாரணப் பணிகளை அரசும், அதிகாரிகளும் திறம்படச் செய்கிறார்கள். நானே நேரில் பார்த்தேன்" என்று அ.தி.மு.க அமைச்சர் அளவுக்கு ஆதரவாகப் பேசிவைத்தது அம்மாவுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்க, விஜயகாந்தை தொலைபேசியில் கூப்பிட்டு நன்றி தெரிவித்தாராம் ஜெ!

"தலைவர் திரையுலகில் காலடி பதித்து இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவடைந்த விழாவை, மாபெரும் மாநில மன்ற மாநாடாக மதுரையில் கொண்டாட கடந்த ஆண்டே திட்டமிட்டிருந்தார். அந்த விழாவில் கட்சியை அறிவித்து விடுவது என்றும் முடிவோடு இருந்தார். ஆனால் அம்மாதான் பொறுமையாக இருக்கும்படி அட்வைஸ் பண்ணினார்" என்கிறார் மாநகர மன்ற நிர்வாகிகளில் ஒருவர். ஜனநாயக நாட்டில் எல்லோரும் கட்சி ஆரம்பிக்கலாம். சரி! விஜயகாந்த் போன்ற பெரிய நடிகர்கள், ரசிகர் மன்றங்களை மட்டும் நம்பி கட்சி தொடங்கினால் போணியாகுமா? மூத்த அரசியல் பத்திரிகையாளர் ஒருவர் என்ன சொல்கிறார் பாருங்கள்...

"2004 நாடாளுமன்றத் தேர்தலில் ரஜினிக்கு ஏற்பட்ட நிலைதான் ஏற்படும்"

"எம்.ஜி.ஆர். கட்சி ஆரம்பித்த கால கட்டத்தில், சினிமா மட்டும்தான் மக்களுக்கு மிகப்பெரிய ஊடகமாக இருந்தது. அதில் கூறப்படும் கருத்துக் களை மக்கள் அப்படியே நம்பினார்கள்; கண்மூடித்தனமாக நம்பிக்கை வைத் தார்கள். இன்று சினிமாவை வெறும் பொழுதுபோக்கு சாதனமாக மட்டுமே பார்க்கும் விழிப்புணர்வு வந்துவிட்டது. ரசிகர் மன்றங்களில் விசிலடிச்சான் குஞ்சுகள் தான் அதிகம் இருக்கிறார்கள். இவர்களிடம் வாக்கு வங்கி என்பதெல் லாம் சொற்பம். அப்படியே இருந்தாலும், சினிமா ரசிகர்கள் பல்வேறு அரசியல் கட்சிகளில் உறுப்பினர்களாக இருக் கிறார்கள்" என்கிறார். இதே கருத்தை வேறுமாதிரிச் சொல்கிறார் தி.மு.க. அமைப்புச் செயலாளர் டி.கே.எஸ். இளங்கோவன்.



• எஸ்.எஸ். சந்திரன்

"எம்.ஜி.ஆர் வெற்றிகரமான கதா நாயகனாக ஜெயித்த 'மந்திரிகுமாரி' காலகட்டத்திலேயே தி.மு.கவில் சேர்ந்து விட்டார். சினிமாவையும் அரசியலை யும் திறம்பட பேலன்ஸ் செய்து தம்மை ஸ்திரப்படுத்திக் கொண்டார். இன்னும் சொல்வதென்றால், தி.மு.கவின் கொள் கைகளையும், சின்னத்தையும் கூட சினிமா வழியே பிரசாரம் செய்து வெற்றி கண்டவர். அந்த அளவு அவருக்கு மக்களிடையே செல்வாக்கு இருந்தது. எம்.ஜி.ஆரைத் தவிர திரையுலகிலிருந்து நேரடியாக அரசி யலில் நுழைந்து வெற்றி பெற்றவர்கள் வேறு யாருமில்லை. அவர் ஒரு வரலாற்றுப் பதிவு மட்டுமல்ல வர லாற்றுப் பாடமும் கூட" என்கிறார்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தலைவர்களின் பெயரைச் சொல்லித் தான் கட்சி அரசியலில் பலரும் காலை ஊன்றியிருக்கிறார்கள். விஜயகாந்த் எந்தத் தலைவரையும் தமது வழி காட்டியாகக் குறிப்பிடாமல், தனியே அரசியலில் களம் காண நினைக்கிறார். இது தவறான முன்னுதாரணம் என்பது, ஓய்வுபெற்ற திராவிட அரசியல் பிரமுகரின் கருத்தாக இருக் கிறது. "எப்படியோ, எதிர்வரும் ஏப்ரலில் விஜயகாந்த் கட்சியை அறிவிக்கப்போவது உறுதி என்று செய்திகள் வெளியாகி வரும் நிலையில், அவர் அரசியல் கட்சியை தொடங்கி விட்டால் நடிகர் சங்கம் இரண்டாக உடைந்து விடுவதும் உறுதி! 2006ல் அ.தி.மு.க கூட்டணியை அவரது கட்சி ஆதரித்தாலோ அல்லது தொகுதிப் பங்கீட்டில் அதிர்ஷ்டமடித்து போட்டியிட் டாலோ, 2004 நாடாளுமன்றத் தேர்தலில் ரஜினிக்கு ஏற்பட்ட நிலைதான் ஏற்படும்" என்கிறார் மற்றொரு மூத்த அரசியல் பார் வையாளர்.

"கட்சி தொடங்கிய பிறகு இனி சினிமாவில் நடிக்க மாட்டேன். மக்களைச் சந்திப்பேன் என்று நடிப் பதை நிறுத்திக் கொண்டு களத்தில் நேரடியாக இறங்கினால், மக்கள் ஒருக்கால் அவரை நம்பக்கூடும்" என்று நெத்தியடியாக கருத்துச் சொல்கிறார்கள் விஜயகாந்த் அரசியலுக்கு வருவதை விரும்பும் அவரது ரசிகர்கள்.

- கட்டு


உ
குருநாதர் சரணம்
'சில்க் காட்டன்' என்றாலே
ப்ரசாந்தி
ப்ரசாந்தியின் "KALYANA PARISU COLLECTION"
விவாஹம், வைபோகம், Nithyaam Collections!!
PRASANTHI, 16, 6th Cross Street, C.I.T. Colony, Mylapore, Chennai - 4. Near Chettiar Hall, Alwarpet. Ph. : 24991859 / 24997636 Sunday Holiday
PRASANTHI's PARIPURNA 52, 4th Main, 17th Cross, Malleswaram Bangalore. Ph. : 23341632 Tuesday Holiday
Ugadi Sale @ Indra Nagar March 10, 11, 12 - Time : 9 to 9
ECA Cultural Association, No.8, 100 Ft. Road, Indra Nagar (Near Horizon Public School), Bangalore - 8
Ugadi Sale @ Jaya Nagar March 24, 25, 26, 27th
10% DISCOUNT ON SILK COTTONS
Master & Visa Cards Accepted


ஆஹா! நெய் வாசம் மூக்கைத் துளைக்குதே!
செண்பகம் பிராண்ட் நெய் தாங்க!!
செண்பகம் பிராண்ட் அசல் நெய்
"சுவையான சமையல் என்றென்றும் செண்பகம் பிராண்ட் நெய்யில்"
தற்போது 15Kg, 5L, 2L, 1L, ½L டின்களிலும், கேன்களிலும் மற்றும் 200ml, 100 ml, 50 ml, பவுச் பேக்கிலும் கிடைக்கிறது.
SRI DHANALAKSHMI & CO.
SENBAGAM BRAND GHEE MANUFACTURER,
18, M.G Pudur, I street,
TIRUPPUR - 641 604
Phone : 0421 - 2213557, Cell: 94433 56808

“நாங்களும் மனிதர்கள்தான்!”

“உழைக்கும் பெண்கள் சிறப்பித ழுக்காக எங்களையும் ஒரு பொருட்டா மதிச்சு வந்திங்களே, இதைவிடப் பெரு மையும் பாராட்டும் வேறென்ன வேணும்” என்று டான்ஸ் மாஸ்டர் கல்யாண் குழுவிலிருக்கும் க்ரூப் டான் ஸர்கள் நாம் சென்றிருந்தபோது நெகிழ்ந்து போய்க் கூறியதன் பின்னணியை, அப்பொழுது நம்மால் சுலபமாக அறிய முடியவில்லை.

“க்ரூப் டான்ஸர்கள்தானே இவர் கள்” என்று வார்த்தைகளாலும் கண் களாலும் ஏளனப் பார்வை பார்க்கும் அதே சமூகத்தின் பொழுதுபோக்கிற்காக, பெண்மையின் கோட்பாடுகளை ஷாட் முடியும் வரை கழற்றி வைக்கும் இவர் களுக்கு, குடும்பச் சூழல்களாலும், பரம்பரை பரம்பரையாய் சினிமாவே தொழில் என்றாகிவிட்டதாலும், இத்துறையில் நுழைவதும் அதிலேயே நீடிப்பதும் கட்டாயமாகி விடுகிறது.

நடிகைகள் போல் இவர்கள் யாரும் ஆக்சிடெண்டாக சினிமாவுக்குள் நுழை வதில்லை. “தாத்தா, பாட்டி, அப்பா, அம்மாவிலிருந்து, எங்க சொந்தமே சினிமாவுலதான் இருந்தது. அதனால



எனக்கும் வேறு தொழிலுக்கு போகப் பிடிக் கலை. அப் பாவுக்கு ஒருமுறை ஹார்ட் ஆபரேஷன் பண்ணும்போது ஏற்





பட்ட பண நெருக்கடியாலதான் சின்ன வயசுலேயே டான்ஸ் ஆட வந்துட்டேன். இல்லாட்டி நல்லாப் படிச்சு, யார் கண்டா, நானும் ஒரு சாப்ட்வேர் இன்ஜினீயராகியிருப்பேன்'' என்கிறார் விஜி. 'சான்யோரீட்டா' பாடலில் முதல் வரிசையில், நட்ட நடுவில் நின்று ஆடியதுதான் இவரது வாழ்வின் உச்சகட்ட சந்தோஷமாம்.

''குடும்பத்துல எல்லோரும் பிரிஞ்சுட்டாங்க. அம்மாவைப் பார்த்துக்க யாருமே இல்லை. நடிகையாகலாமேன்னுதான் ஃபீல்டுக்குள்ள வந்தேன். அப்புறம் டான்ஸே போதும்னு முடிவு பண்ணி, இப்போ அம்மாவை நான்தான் காப்பாத்தறேன்'' என்ற சிந்து போல், எந்த டான்ஸருக்கும் சினிமாவில் ஹீரோயினாவதில் விருப்பமில்லை. கேட்டால், 'ஒரு ஹீரோயினால் எங்களைப்போல் தொடர்ந்து பத்துப் பதினைந்து வருடங்கள் நிலைக்க முடியுமா?''என்கிறார்கள்.

சினிமாவின் இன்றைய தேதியில், க்ரூப் டான்ஸ் இல்லாத பாடலுக்கு ரசிகர்கள் ஆர்வம் காட்டாமல் எழுந்து போய் விடுகிறார்கள். இப்படி சினிமாவிற்கு அத்தியாவசியத் தேவையாய், ரசிகர்களின் பொழுதுபோக்காகி இருக்கும் இவர்களுக்கு, சமூகம் அளிக்கும் மரியாதை? ''ரசிகர்கள் ரசிக்கறதாலதான் எங்களை க்ளாமரா ட்ரஸ் பண்ணச் சொல்லி ஆட விடறாங்க. ஆனா நாங்க வாடகைக்கு வீடு கேட்கப் போனா அசிங்கமா பேசுவாங்க. ஆனா அவங்க வீட்டு டி.வியில நாங்க ஆடின பாட்டுதான் ஓடிட்டிருக்கும்'' என்று சிரித்தார் ஹர்ஷினி.

திருமணம் இவர்களது அடுத்த தலைவலி. ''சினிமாக்காரின்னு தெரிஞ்சா, இஷ்டத்துக்கு வரதட்சணை கேட்கறாங்க. இல்லாட்டி எங்களைக் கல்யாணம் பண்ணிக்க வர்றவங்ககிட்ட தப்புத் தப்பாப் பேசி, கல்யாணத்தையே நிறுத்



–குமுறும்

க்ரூப் டான்ஸர்கள்



டான்ஸர்ஸ்தான். ஆனா ஒரு நாளும் பாய் ஃப்ரண்ட்ஸோட டிஸ்கொத்தே போகமாட்டோம். ஆனா இதே டிஸ்கொத்தேவுக்கு பொண்ணுங்க வெளிப்படையா போட்டுட்டு வர்ற அசிங்கமான ட்ரெஸ்ஸை யாரும் கண்டுக்கறதில்லை. ஏன்னா அவங்க பணக்காரங்க'' என்று குமுறியவர்களுக்கு, அவுட்டோர் ஷூட்டிங் ஸ்பாட்டில் ஏற்படும் அவமானங்கள் ஏராளமாம். ''ஸ்டுடியோவை விட்டு அவுட்டோர்ல ஷூட்டிங் நடக்கும்போது, ஏண்டா இந்த தொழிலுக்கு வந்தோம்னு மனசால கதறியழுவோம். ஏன்னா, அத்தனை பேர் முன்னாடி பசங்க அசிங்க அசிங்கமா கிண்டலடிப்பாங்க. லாட்ஜுல தங்கும்போது க்ரூப் டான்ஸர்ஸ்னு தெரிஞ்சிக்கிட்டு, சும்மா கதவைத் தட்டுவாங்க'' என்று உடைந்த குரலில் சொன்னபோது, பலரது கண்களில் கண்ணீர். சட்டென்று 'உங்கள் மனம் கவர்ந்த டான்ஸர் யார்?' என்று நாம் பேச்சை மாற்ற,

திடறாங்க. முன்னேயாவது க்ரூப் டான்ஸர்ஸ்குள்ளேயே லவ் பண்ணி கல்யாணம் பண்ணிக்குவோம். இப்போ அதுவும் இல்லாததால, பலபேர் முப்பது வயசையும் தாண்டி கல்யாணம் ஆகாம குடும்பச் சூழலுக்காக, தொடர்ந்து டான்ஸ் பண்ணிட்டு இருக்காங்க''என்று ரேகா கூறியபோது, அனைவருமே இதை ஆமோதித்தனர்.

சரி, சினிமாவிலாவது இவர்களுக்கு மதிப்பு இருக்கிறதா?

''இங்க வெள்ளைத் தோலுக்குத்தான் மரியாதை. மும்பைல 'சி' க்ளாஸ் மாடல்ஸா, ஜூனியர் ஆர்டிஸ்டா இருப்பாங்க. டான்ஸர் யூனியன் கார்டு கூட இருக்காது. அவங்க டான்ஸ் ஆட வந்தா, ஸ்டார் ஓட்டல்ல வசதியான ரூமென்ன, போக, வர ஃப்ளைட் டிக்கெட் என்ன, கேட்கற சாப்பாடென்னன்னு ராஜ மரியாதை கொடுத்து, ஒரு நாளைக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாயும் கொடுத்தனுப்புவாங்க. அவங்களை விட பிரமாதமா டான்ஸ் ஆடி, அதே அளவு குறைந்த அளவு ட்ரெஸ் போடற எங்களுக்கு சொன்ன சம்பளத்தைக் கூட ஒழுங்கா தரமாட்டாங்க'' என்று வெடித்தார் உஷா.

''ஆமா, நாங்க மட்டும்தான் க்ளாமரா ட்ரெஸ் பண்றமா?'' என்று விறுவிறுவெனப் பேச ஆரம்பித்தார் விஜி. ''ஷூட்டிங் ஸ்பாட்லதான் நாங்க க்ளாமரா டான்ஸ் பண்றமே தவிர, வீட்லயும், பொது இடங்களிலேயும் சேலை, சுடிதார் உடுத்தி கண்ணியமாத்தான் இருப்போம். ஏன், நாங்க

''ஆயிரம் பேரைச் சொல்லலாம். ஆனா ரெண்டு கால்ல ஆடற எங்களுக்கே ஏராளமான உடல் உபாதைகள் வரும்போது, தன்னம்பிக்கையோட ஒத்தக் கால்ல ஆடி 'டான்ஸர்' படத்துல அசத்தின குட்டிதான் எங்க ஃபேவரைட்'' என்றனர் கோரஸாக.

இறுதியாக ஒரே மூவ்மெண்டில் அனைவரும் விடுத்த வேண்டுகோள்... ''எல்லோரும் எங்களை ஸ்கிரீன்ல பார்த்து எடை போடறாங்களே தவிர, எங்களுக்கும் மனசு, உணர்ச்சி இருக்குன்னு யாரும் புரிஞ்சுக்கறதில்லை. வீட்ல குடும்பத்தோட சந்தோஷத்துக்காகவும், தியேட்டர்ல உங்க சந்தோஷத்துக்காகவும் உழைக்கிற எங்களையும் மனிதர்களாக பாவிக்கலாமே?''

- ச.ந.கண்ணன்

படங்கள் : ஸ்ரீஹரி

விசிலடிச்சு சிரிங்க!



''என்னங்க... டீவி பார்த்துக் கொண்டிருந்ததால குக்கரில் வந்த 'விசில்' சத்தத்தைக் கவனிக்கலை... ஆமா, எத்தனை விசில் வந்ததுங்க...?''

''இப்ப வந்தது ரெண்டு விசில்... இந்த மாசம் பூரா 64 விசில்... கல்யாணம் ஆனதிலிருந்து 7421 விசில்...!''

- நாமக்கல் பாலு

''மணி பன்னிரண்டு ஆகப் போகுது... இப்ப எங்கேய்யா போய்க்கிட்டிருக்கே?''

''குடிப்பழக்கத்தை விடுறது எப்படின்னு இன்னும் கொஞ்ச நேரத்துல ஒரு சொற்பொழிவு இருக்கு... அதைக் கேக்கத்தான் போய்க்கிட்டிருக்கேன்...'

''என்னய்யா கதை வுடறே...? ராத்திரி பன்னிரண்டு மணிக்கு மேலே யாருய்யா 'லெக்சர்' குடுப்பாங்க...?''

''என் மனைவியும், மாமியாரும்தான்.''

- பாண்டு





''உனக்கு டைரி எழுதற பழக்கம் இருக்கா?''

''வேற வேலை இல்லே, அதை எவன் தினமும் எழுதிக்கிட்டு இருப்பான்!''

''தேங்க்ஸ், அப்ப ராமு உனக்குக் கொடுக்கச் சொன்ன 'டைரி'யை நானே எடுத்துக்கறேன்!

- வெ. சீதாராமன்

''ஏம்ப்பா... சுண்டல் நல்லாவே இல்லையே?''

''என்ன இப்படிச் சொல்றீங்க? நேத்து நல்லா இருக்குன்னு நீங்க சாப்பிட்ட அதே சுண்டல்தான் சார், இது!''

- கிருஷ்ணரத்னம்



மிஸ்டர் க்ளீன்!

– ரஜினியின் ஆலோசகர் எழுதுகிறார்

கல்கி 20.2.05 இதழில் இடம்பெற்ற 'ரஜினியைச் சீண்டலாமா?' என்ற கட்டுரை குறித்து...

ரஜினிகாந்த் திரைத்துறையில் அடியெடுத்து வைத்த நாள் முதலாக, அவரது வரி விஷயங்களுக்கு ஆலோசகராக இயங்கி வருகிறேன். கணக்கு வழக்குகளை மிகவும் கச்சிதமாக வைத்துக்கொள்ளும் ரஜினிகாந்த், அவற்றை வருமான வரித்துறைக்குச் சமர்ப்பிப்பதிலும் அதே கவனமும் கச்சிதமும் கடைப்பிடித்து வருகிறார். அவரது வருமானம், வரி தொடர்பான ஆவணங்களில் இதுவரை எந்தக் குறையும் காணப்பட்டதில்லை.

சில ஆவணங்கள் அகப்பட்டதன் அடிப்படையில்தான், அவரது இல்லத்திலோ, அலுவலகத்திலோ ஆய்வு நடத்தப்பட்டது என்று கூறுவது தவறு. வருமான வரித்துறையின் நடவடிக்கைக்கு எந்த அரசியல் பின்னணியும் கிடையாது.

வருமான வரித்துறைக்கு ஆய்வு நடத்த முழு உரிமை உண்டு. அதன்படி அத்துறை மிகக் கண்ணியமாகச் செயல்பட்டு, ரஜினிகாந்த்தின் முழு ஒத்துழைப்பையும் பெற்றது. அவர்களால் எவ்வித சீரியஸான கோளாறுகளும் கண்டுபிடிக்கப்படவில்லை. ரஜினிகாந்த் எப்போதும் போல் 'மிஸ்டர் க்ளீன்' ஆகவே நீடிக்கிறார்.

- சென்னை - 14,

ஆர். சீதாராமன்
(வழக்குரைஞர்)





உழைப்புக்கு வரி;
வேலையில்லாதோருக்குத் தீர்வை!

கம்யூனிஸ்டுகள் 'செக்' வைத்திருப்பதால் பல காரியங்களை ப. சிதம்பரத்தால் செய்ய முடியாது இருக்கலாம் என்பது இந்த பட்ஜெட்டைப் பார்க்கிறபோது புரிகிறது. ஆனால், இரண்டு விஷயங்கள் நமக்குச் சுத்தமாகப் புரியவில்லை.

1) இந்த பட்ஜெட், வேலை வாய்ப்புப் பெருக்கத்துக்கும், தனி நபர் வருமான உயர்வுக்கும் எவ்வாறு உதவப் போகிறது என்பது புரியவில்லை.

2) பத்தாயிரம் ரூபாய் அல்லது அதற்கு அதிகமாக வங்கியிலிருந்து எடுக்கிறபோது, அதற்கு வரி செலுத்தும் அளவுக்கு அப்பாவி இந்தியன் என்ன பாவம் செய்தான் என்பதும் புரியவில்லை.

வருமான வரிச் சீர்திருத்தம், சுங்கத் தீர்வை சமன்பாடு ஆகியவற்றுக்கு இந்த பட்ஜெட் வழிகோலியிருப்பதாக, ப. சிதம்பரம் சொல்கிறார்.


ஆனால், கூட்டிக் கழித்துப் பார்த்தால், வரி செலுத்துவோருக்கு ஆதாயம் மிகக் குறைவு; தொழில் - வர்த்தக உற்பத்தி இனங்களை வாங்கப் போகும் நுகர்வோருக்கும் ஆதாயம் அதிகம் இல்லை.

உதாரணமாக, வருமான வரி செலுத்துவதற்கான குறைந்தபட்ச வருமானம் உயர்த்தப்பட்டிருந்தாலும், ஸ்டாண்டர்ட் டிடக்ஷன் எனப்படும் நிரந்தரக் கழிவு சலுகை நீக்கப்பட்டுவிட்டது.


மாதச் சம்பளம் வாங்குவோர், தங்கள் பணி நிமித்தம் சில செலவுகளைத் தனிப்பட்ட முறையில் ஏற்க வேண்டியிருக்கிறது.



கல்கி



2005 மார்ச் 13
தாரண மாசி 29
மலர் : 63
இதழ் : 33



தொழில் முனைவோர் அல்லது தொழிலதிபர்கள் இத்தகைய செலவுகளை, செலவுக் கணக்காக எழுதிவிடலாம்; ஆனால் தனி நபர்கள் அவ்வாறு செய்ய முடியாது என்பதால்தான், நிரந்தரக் கழிவு என்ற சலுகை மாதச் சம்பளக்காரர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. இதனைச் சுமார் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு அறிமுகப்படுத்தியவர் அப்போதைய நிதி அமைச்சர் ஒய்.பி. சவான்.

ப. சிதம்பரம், இந்த நியாயமான சலுகையை ஒரே போடாகப் போட்டு நீக்கிவிட்டிருப்பது, மற்ற வருமான வரிச் சீர்த்திருத்தங்கள் தனி நபருக்கு தரக்கூடிய பலனைப் பறித்துவிட்டது.

கம்பெனிகளுக்கான வரியிலும் இதே ரீதியில்தான் செயல்பட்டிருக்கிறார் நிதியமைச்சர். கம்பெனிகளுக்கான வருமான வரியை 35 சதவிகிதத்திலிருந்து முப்பது சதவிகிதமாகக் குறைத்துவிட்டு, உபரி வரியை (சர்சார்ஜ்) ஐந்திலிருந்து பத்து சதவிகிதமாக உயர்த்திவிட்டார்!


நடுத்தர வர்க்கத்தினருக்கு உதவும் மார்க்கமாக தேயிலை, கவரிங் நகைகள் போன்றவற்றின் விலை குறைய வழி செய்துள்ளார்; பெட்ரோல், டீசல் தீர்வைகளைக் குறைத்துள்ளார். ஆனால் 88, 80 எல் ஆகிய பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்டு வந்த வருமான வரி விலக்குச் சலுகையை நீக்கிவிட்டார்.

முதுகில் பெரிய பொதியை ஏற்றிவிட்டு ஒரே ஒரு வைக்கோல் குச்சியை எடுத்துப் போட்டு விட்டால், துவண்டு உட்கார்ந்த ஒட்டகம் சந்தோஷப்பட்டு எழுந்து நடக்கும் என்பார்கள்.

இந்தியப் பொருளாதாரம் அவ்வாறு எழுந்து முன்னேறும் என்று ப. சிதம்பரமும், பிரதமரும் நினைப்பார்களேயானால், அது பகற் கனவு. தொழில்துறை இந்த பட்ஜெட்டை வரவேற்பதைக் கண்டு அவர்கள் மகிழ்ந்து விட இயலாது. முக்கியமாக, இந்த பட்ஜெட்டில் உற்பத்திக்கு உதவாத செலவினங்களுக்கான ஒதுக்கீடு மிக அதிகமாக இருப்பதைக் கவனிக்க வேண்டும்.

கல்விக்கான திட்ட ஒதுக்கீடு அதிகரித்திருப்பதை வரவேற்கலாம். ஆனால், கல்வித் திட்டங்கள் தோற்றுள்ளதை, பிரதமரே சுட்டிக் காட்டியிருப்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

பாதுகாப்புச் செலவினங்களுக்கு 9,000 கோடி கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது. கிராமப்புற வேலை வாய்ப்புக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை, நிரந்தர வேலை வாய்ப்புகளை உருவாக்கப்



போவதில்லை. தாற்காலிகமாக விவசாயம் மற்றும் மராமத்து சார்ந்த பணிகளைத்தான் கிராம மக்களுக்கு வழங்கப் போகிறது.

இவையெல்லாமே வருவாயைப் பெற்றுத் தராத செலவினங்கள். அரசு செலவினங்களோ குறையப் போவதேயில்லை.

ஆனால், மறுபுறமாக வரி மற்றும் இதர வருவாய் சேகரிப்பு, இவ்வரசு எதிர்பார்த்த அளவுக்கு இல்லை என்பதுடன், வருகிற வருமானமும் பெரும்பாலும் சர்வீஸ் செக்டார் எனப்படும் சேவைப் பிரிவு மூலமாகத்தான் வருகிறது. இதனால்தான் மேலும் பல புதிய சேவைத் தொழில்களுக்கு சேவை வரி விதித்துள்ளார் நிதி அமைச்சர்.

இவற்றிலிருந்து நாம் பெறக்கூடிய கணிப்பு என்னவெனில், தற்போதைய பொருளாதார முன்னேற்றமானது, கணிசமான உற்பத்திப் பெருக்கம் காரணமாக விளைந்தது அல்ல. உற்பத்திப் பெருக்கம் இன்றி, பணப் புழக்கம் மட்டும் அதிகரிப்பது ஆரோக்கியமான பொருளாதாரம் அல்ல.

சமூக நலத் திட்டங்களையும், கல்வி, பாதுகாப்புக்கான ஒதுக்கீடு அதிகரிப்பையும் வரவேற்கத்தான் வேண்டும். ஆனால், உற்பத்தி பெருகவும், பங்கு மார்க்கெட்டில் சராசரிக் குடிமகன் முதலீடு செய்து லாபமும் பெருமிதமும் காணவும் இந்த பட்ஜெட் வழிவகை செய்யவில்லை.

நமது பிரதமரோ பொருளாதார நிபுணர், நிதியமைச்சரோ வர்த்தகத் துறை அமைச்சராகப் பணியாற்றிய அனுபவசாலி. ஆனால் பிரதமரின் சிறப்பு நோக்கோ, சிதம்பரத்தின் அனுபவ அறிவோ இந்த பட்ஜெட்டில் பிரதிபலிக்கவில்லை.

இந்த அறிஞர்கள் சேர்ந்து, பத்தாயிரம் ரூபாயை வங்கிக் கணக்கிலிருந்து எடுக்க வரி விதித்து, சராசரிக் குடிமகனை தண்டிப்பதுதான் புரிந்துகொள்ள முடியாத புதிர்! இந்த வரியினால் கறுப்புப்பணம் புழக்கம் தடை செய்யப்படும் என்ற எதிர்பார்ப்பு எங்கிருந்து வந்தது? கறுப்புப் பணத்தை யார் வங்கியில் போடுவார்கள்? உழைத்துச் சம்பாதித்த பணம்தான் வங்கிக் கணக்குக்குப் போகும். இனி அந்த உழைப்புக்கும் தனி வரி விதிக்க வேண்டியதுதான் பாக்கி; அப்படியே, வேலையில்லாதவர்களுக்கும் ஒரு அன்எம்ப்ளாய்மெண்ட் வரி விதித்து வசூலிக்க வேண்டியதுதான்!



அய்யோ!

சமீபத்தில் வெளியான அந்தச் செய்தி திடுக்கிட வைத்தது... தான் குளிப்பதைப் பார்த்துவிட்ட சில பள்ளி மாணவர்கள், அது குறித்து கேலி செய்து பேசவே, அவமானம் தாங்காமல் சிறுமி மீனா தீக்குளித்துவிட்டாள்! மீனா எட்டாம் வகுப்பு. கேலி செய்த மாணவர்கள் ஏழாம் வகுப்பு! இந்தச் சம்பவம் குறித்து மனோதத்துவ நிபுணர் டாக்டர் ருத்ரனிடம் பேசினோம்.

"இன்னும் குழந்தைப் பருவத்தை முழுவதுமாகக் கடந்ததாகக் கூற முடியாத, பதின்மூன்று வயதுச் சிறுமியின் இந்தத் தற்கொலைக்கு, அவமானம் மட்டுமே காரணம் என்று கூறிவிட முடியாது. மனதுக்கு எது மிகப் பெரிய அவமானமாகப் படுகிறதோ, அதுவே விபரீத விரக்தியை உருவாக்கும். இந்த விரக்தி குளித்ததைப் பார்த்துவிட்டதை அறிந்ததாலும் வரலாம், சாக்லெட் வாங்கக் கையில் காசு இல்லாததாலும் வரலாம். இப்படிப்பட்ட பலவீனமான மனம் ஆணுக்கும் இருக்கலாம், பெண்ணுக்கும் இருக்கலாம்'' என்றவரிடம் 'குளியலறைக்கு மேற்கூரை இல்லை என்றொரு தகவலும் வந்துள்ளதே... ஆக இந்தத் தற்கொலையில் வறுமையின் பங்கும் இருக்கிறதா?' என்றதற்கு,

''வறுமை, பிரச்னைகளைப் பெரியதாக்கிக் காட்டும் அதே நேரம், எதிர்கொள்ளும் வலிமையையும் ஏற்படுத்தும். தற்கொலை என்பது மனத்தின் தடுமாற்றம். அதில் பொருளாதாரம் முக்கிய காரணி இல்லை'' என்றார் ருத்ரன்.



• ருத்ரன்

'சம்பந்தப்பட்ட சிறுவர்கள் இத்தகைய தகாத செயல்களில் ஈடுபட, உளவியல் ரீதியாக என்ன காரணம் இருக்கலாம்?'

"ஒளிந்திருந்து மற்றவரது அங்கங்களைப் பார்ப்பது வக்கிரம் மட்டுமல்ல, நாகரிக முதிர்ச்சி இல்லாத சமூக நிலையைக் காட்டுகிறது. இப்படியொரு மோசமான மனோநிலை வளர்வதற்குக் காரணம், இந்த 'ரசனையை' நேரடியாகவும், மறைமுகமாகவும் ஊட்டும் ஊடகங்கள்தான். இந்த விஷயத்தில் ஊடகங்கள் (மீடியா) மிகுந்த பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டும். இதில் பெற்றோரின் பங்கும் அளப்பரியது. ஆண் - பெண் சகஜமாய் இருப்பதற்கான இலகுவான சூழலை பெற்றோர் உருவாக்க வேண்டும். அந்தரங்க கௌரவத்தை ஒரு பழக்கமாகவே ஆக்கிக் கொடுக்க வேண்டும். தவறுகள் திருத்தப்படலாம் என்ற தைரியம் ஊட்டப்பட வேண்டும். முக்கியமாக அன்பைப் பயிற்றுவிக்க வேண்டும். ஏனெனில் அன்பு கொல்லாது, பிறரை மட்டுமல்ல... தன்னையும்கூட.''

'இவ்வளவும் நடந்து முடிந்த பின்னர், சம்பந்தப்பட்ட சிறுவர்களின் வாழ்க்கை என்னவாகும்... அவர்களின் வாழ்க்கை வீணாகாதவாறு மீட்டெடுப்பது எப்படி...?'

"சட்டப்படி சீர்திருத்தப் பள்ளியில் சேர்க்கப்பட வேண்டும்... அதன்படியே செய்திருக்கிறார்கள். அதைவிட, அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் தீவிரமாக மனவியல் வழிகாட்டுதல் இருந்தால் நல்லது'' என்றார் ருத்ரன்.

- இரா. முத்துக்குமார்



திராட்சை – நேரடி விஷம்!

–பசுமைப் போராளி பகீர் பேட்டி

பளபளவென்று விடிந்து கொண்டிருக்கும் அதிகாலை. வற்றிக்கிடக்கும் காவிரியை ஒட்டிய திருச்சி விவசாய கிராமம் அது. வளர்ந்து செழித்து பழுத்துக் கிடக்கும் நெல்வயலின் அறுவடையைத் தொடங்கி வைக்கிறார் முப்பத்திரண்டு வயது ரேவதி! அருகில் அவரது குரு, இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார். அந்நேரம் ரேவதி சார்ந்திருக்கும் தமிழின வாழ்வியல் இயக்கத்தின் அலுவலக ஊழியர், கையில் ஒரு கடிதத்தோடு அங்கே தேடி வருகிறார். ஜெர்மனியில் நடக்கவிருக்கும் இயற்கை விவசாய மாநாட்டுக்கு, இந்தியப் பிரதிநிதியாக ரேவதியை அழைக்கும் அதிகாரபூர்வ அழைப்பு. ஆனால் அங்கேயே அதை மறுக்கும் ரேவதி. "அதே தேதிகளில் நெல்லை வள்ளியூரில் அடுத்த முகாம். எனக்கு என் நாடு, என் விவசாயிகள்தான் முக்கியம்" என்றபடி அடுத்த இயற்கை விவசாய வயலை நோக்கி நடக்கிறார். ரேவதிக்கு சொந்த ஊர் கோவை. இந்திய வரைபடமெங்கும் தனது போலியோ பாதங்கள், புரட்சிச் சுவடுகள் பதிக்க வேண்டும் என்கிற உறுதியோடு கணவர், பிள்ளையைப் பிரிந்து வயல் வெளிகளில் திரிகிறார் இந்தப் பசுமைப் போராளி. 2010க்குள் தமிழகத்தின் விஷ விவசாய முறையை இயற்கை விவசாயமாக மாற்ற வேண்டும் என்ற நம்மாழ்வாரின் லட்சியத்தைத் தூக்கிப் பிடித்திருக்கும் இவர், தூக்கத்தைத் தொலைத்துவிட்ட ஒரு நிஜப் போராளி - அவருடன் ஓர் அர்த்தமுள்ள பேட்டி.

விவசாயத் துறையில் பணியாற்ற உங்களுக்கு ஈடுபாடு வந்ததெப்படி?

"உண்மையில் சொல்லப் போனால் எனக்கும் விவசாயத்துக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லைதான். என் அப்பா ஓர் ஆசிரியர். என்னையும், என் தங்கையையும் அவரைப் போலவே ஆசிரியராக்கி விட்டார். கோவை பி.எஸ்.ஜி. கன்னிகா குருகுலம் மேல்நிலைப் பள்ளியில்தான் ஆசிரியராக இருந்தோம். அப்போது கோவை பறவைகள் மற்றும் இயற்கை வரலாற்று ஆய்வு மையத்துடன் தொடர்பு ஏற்பட்டது. ஆயிரம் பறவைகளில், தொள்ளாயிரம் பறவைகள் தாங்கள் சாப்பிடும் உணவில் உள்ள விஷத்தன்மையினால்தான் சாகின்றன என்ற ஆய்வின் உண்மை எனக்குப் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது. மனிதர்களின் உணவிலும் இந்த விஷத்தன்மை இருக்கத்தானே செய்யும் என்ற கேள்வி எனக்குள் எழுந்தது. இதைப் பற்றி அறிய விவசாயிகளைச் சென்று

பார்த்தபோதுதான், விவசாயிகள் தங்களுக்குரிய விளைச்சலில் மட்டும் பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்தாமல், மார்க்கெட்டுக்குப் போகும் பயிர்களில், மகசூலுக்காக உரம், பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்தும் அதிர்ச்சியான உண்மை தெரிய வந்தது. அதைத் தொடர்ந்துதான் இது குறித்த ஆய்வில் தீவிரமாக களம் இறங்கினேன்."

நம்மாழ்வாரை எப்போது சந்தித்தீர்கள்?

"பூச்சிக்கொல்லி மருந்துகள், கெமிக்கல் உரங்கள் இல்லாமல், இயற்கை உரம் மூலமாக மட்டுமே சில பகுதிகளில் விவசாயம் செய்வதாகக் கேள்விப்பட்டு, அங்கு சென்றேன். அப்போதுதான் அது ஓர் இயக்கமாகவே நடந்து கொண்டிருப்பதை அறிந்தேன். இயற்கை விவசாயம் பற்றி, எங்கள் பள்ளியில் ஒரு கூட்டம் நடத்தி, அதில் விவசாயிகளைப் பேச வைக்க வேண்டும் என்று விரும்பினேன். ஆனால், இயற்கை வளம் பற்றி நாங்கள் பேசுவதை விட, எங்களையெல்லாம் வழிநடத்துபவர் பேசினால் நன்றாக இருக்கும் என்று சொல்லி, நம்மாழ்வாரை அறிமுகப்படுத்தினர். நம்பிக்கை சுடர் விடும் விழிகள் அனுபவம் சொல்லும் தாடி, தாய்மை கனியும் புன்னகை, மண்வாசனை கமழும் தமிழ் என, ஓர் உண்மையான பெரியவரைச் சந்தித்த உணர்வு.

இலக்கு தெரிகிறது; பாதை தெரியவில்லை என்ற குழப்பத்தில் இருந்த எனக்கு, நம்மாழ்வாரின் சந்திப்பு புதிய வாசலைத் திறந்து வைத்தது."

இயல்பான வாழ்க்கையிலிருந்து விலகி, முற்றிலும் சமூகம் சார்ந்த வாழ்க்கைக்கு ஒரு பெண்ணான உங்களை எந்த அளவுக்கு உங்கள் குடும்பம் அனுமதித்தது?



"முதலில் என் பெற்றோருக்கே இதில் விருப்பம் இல்லை. ஒரு பெண், காடு வயல் என்று சுற்றித் திரிவதில் தயக்கம் இருந்தது. மேலும், அடிப்படையில் நான் ஒரு போலியோ நோயாளி. 40%தான் குணமாகி இருக்கிறது. நீண்ட தூரம் நடப்பது சிரமம். இதனால் என் அம்மாவுக்கும், அப்பாவுக்கும் முதலில் ரொம்ப பயமாக இருந்தது. ஆனால் பயிர்களைப் போலவே பச்சை மனம் மாறாதிருந்த கிராமத்து விவசாயப் பெருமக்களின் பரிவும், பாசாங்கற்ற அன்பும், என் பெற்றோரிடத்தில் நம்பிக்கையை ஏற்படுத்திவிட்டது. என் கணவர் இந்தியக் கப்பல் படையில் இருந்தவர். அதிலிருந்து ரிடையர்டு ஆகி, உடனடியாக வேறு ஏதோ ஒரு வேலைக்குச் சென்றிருக்க முடியும். மிகப்பெரிய விவசாய நாடு என்று சொல்லப்படும் இந்தியாவை, உண்மையிலேயே விவசாய நாடாக மாற்ற வேண்டும் என்றால், எனக்கு உண்மையான சமூக அக்கறையுள்ள நூறு இளைஞர்கள் கிடைத்தால் போதும் என்று விவேகானந்தரைப் போலவே நம்மாழ்வாரும் அடிக்கடி கூறுவார். கப்பல் படையிலிருந்து வெளியில் வந்த என் கணவரை, 'ஏன் அந்த நூறு இளைஞர்களில் நீங்கள் முதல் இளைஞராக இருக்கக் கூடாது?' என்று கேட்டேன். மிக உற்சாகத்துடன் அதற்கு ஒப்புக்கொண்டார். இன்று வீடு, அலுவலக நிர்வாகம் என்று எல்லாமே அவர்தான் பார்த்துக் கொள்கிறார். எனவே குடும்பம் என்பது எனக்கு உதவியாகவும், உற்சாகமாகவும் இருக்கிறதே தவிர, ஒரு சின்ன இடையீடுகூட அதனால் எனக்கில்லை."

இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்துவதால், நமது மண் இவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் சொல்லும்போது, கிராமத்து மக்கள் ஏற்றுக் கொள்கிறார்களா?

"நம் நாட்டிலேயே அதிகம் ஏமாற்றப்பட்டிருப்பவர்கள் கிராமத்து மக்கள்தாம். ஆண்டாண்டு காலமாக பேச்சுக்களையும், ஆடம்பரமான கூட்டங்களையும் நம்பி ஏமாந்த காயம் இன்னும் அவர்களுக்குள் ஆறாத ரணமாக இருக்கிறது.



* நம்மாழ்வாருடன் ரேவதி...

முதலில் எங்களுடைய நோக்கத்தை, அவர்களுடைய வட்டார வழக்கிலேயே பேசி, அவர்களுக்குப் புரிய வைக்கிறோம்."

இயற்கை விவசாயத்தின் நோக்கம்தான் என்ன?

"திராட்சைப் பழத்தை விரும்பிச் சாப்பிடாதவர்கள் யாருமில்லை. ஆனால் இன்றைக்கு நாம் சாப்பிடும் திராட்சை, நேரடியான விஷம்... உடனே கொல்லாது. கொஞ்சம் கொஞ்சமாய்க் கொல்லும். இந்தப் பழத்தின் விளைச்சலுக்காக விதைப்பதிலிருந்தே இதன் மீது அடிக்கப்படும் பூச்சிக்கொல்லி மருந்து, இதனுடன் இரண்டறக் கலந்துவிடும். எப்படிக் கழுவினாலும், சுத்தப்படுத்தினாலும் இதில் உள்ள விஷத்தன்மை போகாது என்பது ஆய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இது ஓர் உதாரணம் மட்டுமே. நம்மில் பலரும் பூச்சி அரித்த கீரைகளை சுத்தமானதில்லை என்று ஒதுக்கித் தள்ளி விடுகிறோம். ஆனால் அவைதான், விஷத்தன்மை இல்லாதவை. விஷத்தன்மை உள்ளவற்றைப் பூச்சிகள் அரிக்காது. பூச்சிகள் தின்று உயிர் வாழுகிறது என்றால் அவற்றில் விஷம் இல்லை என்று அர்த்தம். பூச்சிகளுக்குள்ளதுதான் நமக்கும். இப்போது புரிகிறதா? நாம் சராசரியாக ஒவ்வொரு நாளும் எவ்வளவு விஷத்தை விலை கொடுத்து வாங்குகிறோம் என்று. இதற்கு எதிராகத்தான் நாங்கள் இப்போது போராடி வருகிறோம். நம்மாழ்வார் இதற்கொரு தெளிவான பாதையை வகுத்திருக்கிறார். எங்கோ இருக்கும் வல்லரசுகளுக்காகவும், பன்னாட்டு முதலாளிகளுக்காகவும், நமது மக்கள் தலையில் இந்த இரசாயன உரங்களை நமது அரசுகளே கட்டுகின்றன.

இந்த இரசாயன உரத்தைப் பயன்படுத்தாமல், அந்தக் காலம் போல இயற்கை உரத்தைப் பயன்படுத்தும் விழிப்புணர்வை நமது விவசாயிகள் பெற வேண்டும். அதற்கானதுதான் எங்கள் போராட்டம். நாங்கள் பேசுவது விஞ்ஞான ரீதியான பயோ - டெக்னாலஜி. இதை மறுப்பவர்கள் இந்த மண்ணுக்கும் மக்களுக்கும் விரோதமானவர்கள்."

ஒரு தீவிர பசுமைப் போராளியாக உங்கள் வாழ்வின் திசையைத் தீர்மானித்துக்கொண்ட நீங்கள், ஒரு தாயாக, மனைவியாக உங்கள் பிள்ளையையும், கணவரையும் பிரிந்திருக்கிறோம் என்று ஏங்கியதுண்டா?

"மகனைக் குளிப்பாட்டுவது முதல் பள்ளிக்கு அனுப்புவது வரை கணவர்தான். மாதக் கணக்கில் கிராமங்களில் தங்கிவிடும்போது, தொலைபேசி வழியே அவனிடம் பேசுவேன். பல கிராமங்களில் அந்த வசதியும் இல்லாதபோது, மனம் கொஞ்சம் ஏங்கும். என்றாலும் எதற்கும் ஒரு விலை உண்டு தானே! இருந்தாலும் இதையொரு இழப்பாக நான் கருதவில்லை. ஏனென்றால், அதற்குப் பதிலாக நாம் 2010ல் பெறப் போவது ஒரு புதிய தேசமாயிற்றே!"

நம்பிக்கையோடு சொல்லும் ரேவதியின் மீது மீடியாவின் வெளிச்சம் இன்னும் படவில்லை என்பதுதான் அழுத்தும் சோகம்."

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

மருதவேலின் மனம் வேகமாக அடித்துக் கொண்டது. கோபமாக வீட்டுக்கு வந்தவன், புத்தகப் பையை உள்ளே வீசினான்.

"ஏண்டா ராசா...! இம்புட்டுக் கோபம்?" என்றாள் அம்மா அருக்காணி.

"எல்லாரும் என்னை சப்பாணி... சப்பாணின்னு கூப்பிடுறாங்க



ஆத்தா. இனிமே நா ஸ்கூலுக்குப் போக மாட்டேன்... ஆமா..." என்றவன், ஓவென்று அழ ஆரம்பித்தான்.

பிறந்தபோதே மருதவேலுக்கு இடது கால் சூம்பி இருந்தது. அருக்காணியால் தாங்க முடியவில்லை. அழுதாள்... கதறினாள். ஒரு கட்டத்தில் 'ஆண்டவனால் நமக்கு வாய்க்கப்பெற்றது இதுதான்' என்று சமாதானமானாள். மருதவேலுவுக்குப் பிறகு இன்னொரு குழந்தை அவள் வயிற்றில் ஜனிக்கவே இல்லை.

"சப்பாணின்னா... இன்னா... ஆத்தா?" - அழுதுகொண்டே கேட்ட மருதவேலின் கேள்வியில் தடுமாறிப் போனாள் அருக்காணி.

"அது... வந்து... ராசா.... ஆண்டவன் எங்களை எல்லாம் நிதானமா படைச்சுப்புட்டான்... உன்னையெல்லாம் அவசரமா படைச்சுப்புட்டான்..."

"என்ன மட்டும் ஏன் ஆத்தா அவசரமா படைச்சாரு?"

பதில் சொல்லத் தெரியாமல் ஒரு நிமிடம் விழித்தவள், "அப்... அப்போ... ஆண்டவன் ஏதோ அவசர வேலையா பொறப்பட்டுட்டு இருந்தாரு... அதனாலதான்..." என்றாள்.

"ஓஹோ!"

"ஆனா ஆண்டவன் எங்களைவிட உன்னை மாதிரி இருக்கற ஊனம், குருடு, இவங்க மேல ரொம்ப அன்பா...பாசமா... இருப்பாரு. அதிகமா கருணை காட்டுவாரு..."

"நெசமாவா... ஆத்தா?"

"ஆமா மருதவேலு...! நீங்கள்லாம் அவருக்கு செல்லப் பிள்ளைங்க.

உங்கள அவருக்கு ரொம்பப் பிடிக்கும்!"

விஜயாலயன்

"ஹைய்யா! ஆண்டவன் எங்க மேல தான் பாசமா இருப்பாரு. நாங்கதான் அவருக்கு செல்லப்பிள்ளை. எங்களத்தான் அவருக்கு ரொம்பப் புடிக்கும்..." - ஒரு காலை விந்தி விந்தி இழுத்துக்கொண்டே, சந்தோஷமாய் வெளியில் ஓடினான் மருதவேலு. அவனைப் பார்த்த அருக்காணிக்கு கண்ணீர்தான் வந்தது.

தோப்பில் மாங்காய் அடித்துக் கொண்டிருந்த மருதுவை "ம்மே..!" என்ற சத்தம் திரும்பிப் பார்க்க வைத்தது.

தூரத்தில் ஆட்டுக் குட்டியொன்று முள் வேலிக்குள் மாட்டிக் கொண்டு தவித்தது. ஓடிப்போய் ஆட்டை விடுவிக்க, விடுதலை பெற்ற சந்தோஷத்தில் அது துள்ளித் துள்ளி, சிறிது தூரம் ஓடி அப்படியே நின்று விட்டது. இனி எங்கே போவது என்பது போல் விழித்தது. அதனை நெருங்கிய மருதவேலு, "உனக்கு யாருமே இல்லையா? சரி வா... எங்க வூட்டுக்குப் போலாம்..." என்று அதை வீட்டுக்கு இழுத்துக் கொண்டு வந்தான்.

எதிர்ப்பட்ட அருக்காணியிடம், "வேலில சிக்கிட்டு இருந்தது ஆத்தா... அநாதை போல இருக்கு. அதான் கூட்டிட்டு வந்தேன்..." என்றான்.

"ஆட்டுக்குச் சொந்தக்காரங்க யாராவது வந்து மல்லுக்கு நிக்கப் போறாங்க... மருதவேலு...?"

"வந்தா... பாத்துக்கலாம் ஆத்தா..."

ஆடு வந்து இரண்டு மாதம் ஓடிப் போக, மருதவேலிடம் ரொம்பவும் ஒட்டிக் கொண்டது. ஒரு நாள் ஆட்டின் சொந்தக்காரர்கள் தேடி வந்து விட்டனர்.

"இந்த ஆட்டை எங்க குலதெய்வம் கருவண்ணராயருக்கு நேர்ந்து விட்டுருக்கோம். இது காணாமப் போனதுனால ஏதாவது தெய்வ குத்தம் ஏற்படுமோன்னு பயந்துட்டு இருந்தோம். இதப் பார்த்த பிறகுதான் மனசுக்கு கொஞ்சம் ஆறுதலா இருக்கு. ரெண்டு மாசமா நீங்க இந்த ஆட்டை வளத்திருக்கீங்க... அதுக்கு நூறோ... இருநூறோ கொடுத்துடறோம். ஆட்டை அவுத்து விடுங்க."

"அய்யா... எம்புள்ள ரெண்டு மாசம் ஆசையா வளர்த்துட்டான். திடீர்னு கூட்டிட்டுப் போனா ஏங்கிடுவான். நாளைக்கு வேணா வந்து புடிச்சிட்டுப் போங்கய்யா" - அருக்காணி நா தழுதழுக்கக் கேட்கவும், சரியென்று மறுநாள் வருவதாய்க் கூறி கிளம்பினார்கள் வந்தவர்கள்.

மூன்று கால் ஆட்டுக்குட்டி!

விக்கி விக்கி அழுத மருதவேலை சமாதானப் படுத்தினாள்.

"இது அவங்களோட ஆடு ராசா... புடிச்சுட்டுத்தான் போவாங்க. உனக்கு வேற ஆட்டுக்குட்டி வாங்கித்தர்றேன்...?"

"வேண்டாம் போ... ஆத்தா. எனக்கு இதுதான் வேணும்?"

இரவு அவன் சாப்பிடவில்லை. விடிய விடிய அழுது கொண்டே இருந்தான்.


விடிந்ததும் எழுந்து ஆட்டைத் தேடினான். காணவில்லை.

"ஆத்தா...! ஆ...த்...தா ஆஆ...டு எங்கே?" கூப்பாடு போட்டான்.

"மேயறதுக்கு அவுத்து விட்டேன்... மேயப் போயிருக்கு..."

அந்த நேரம் அவன் சிநேகிதன் சிவா ஓடி வந்தான்.

"டேய் மருதவேலு! உன்ற ஆடு கெணத்து மேட்ல தழை தின்னுட்டு இருக்கறப்ப... கால் தவறி மொட்டக் கெணத்துல விழுந்திருச்சு..."



மொட்டக் கெணத்துல விழுந்து... ஒரு கால் ஒடிஞ்சு போச்சுங்க...

"அண்ணே... ஊனமாகிப்போன ஆட்டை குலதெய்வத்துக்கு வெட்டக் கூடாதண்ணே... பெரிய தெய்வக் குத்த மாயிடும்..." என்றான் வந்தவர்களில் ஒருவன்.

சற்று நேரம் யோசித்தவர்கள், "இத பாரும்மா... ஊனமான ஆடு சாமிக்குப் பிடிக்காது. அதனால இதை நீங்களே வெச்சுக்குங்க... நாங்க வர்றோம்..." என்றபடி திரும்பி நடந்தனர்.

எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த மருதமுத்து.

"ஆத்தா! அன்னைக்கு நீ பொய்தானே சொன்னே?" என்றான்.

"எ...எ... என்ன பொய் சொன்னேன்?"

"ஜட்ஜ் வீட்டில் சம்பந்தம் பேசப் போனியே, என்ன சொன்னாங்க?"

"முடிவை அடுத்த மாசத்துக்கு தள்ளி வச்சிருக்காங்க."

- ஆர். மணிமேகலை

மருதவேலு விந்தி விந்தி ஓட, அருக்காணியும் அவன் பின்னால் ஓடினாள். ஆட்டைத் தூக்கி, கிணற்று மேட்டில் போட்டிருந்தார்கள். அது எழ முடியாமல் கத்தியது.

"கெணத்துக்குள்ளே விழுந்ததுல ஆட்டோட முன்னங்கால் ஒண்ணு ஒடிஞ்சு போச்சு அருக்காணியக்கா."

வைத்தியர் வீட்டுக்கு ஓடினார்கள். அழுதுகொண்டே அம்மாவின் பின்னால் ஓடினான் மருதவேலு.

மறுநாள். ஆட்டின் உரிமையாளர்கள் கதவைத் தட்டினார்கள்.

கதவைத் திறந்த அருக்காணியிடம்,

"ரெண்டு மாசம் ஆட்டைப் பார்த்துக்கிட்டதுக்கு இருநூறு ரூபா வாங்கிக்கம்மா... நாங்க ஆட்டைப் புடிச்சுட்டுப் போறோம்" என்று கொட்டடிக்குச் சென்றவர்கள், மூன்று காலோடு ஆட்டைப் பார்த்ததும் அப்படியே நின்று விட்டார்கள்.

"என்னம்மா ஆச்சு?"

"மேவு திங்கப் போன ஆடு... தவறி

"என்னை மாதிரி இருக்கற ஊனம்... குருடு... இவங்க மேல சாமி ரொம்ப அன்பா, பாசமா இருப்பாரு. எங்களை அவுருக்கு ரொம்பப் புடிக்கும்னு சொன்னியில்ல?"

"ஆ...ஆமா...!"

"அது பொய்தானே! சாமிக்கு எங்களைப் புடிக்காது. அதனாலதான் எங்களை இப்படிப் படைச்சிட்டாரு..."

அருக்காணிக்கு கண்களில் நீர் பொங்கிக் கொண்டு வந்தது. மருதமுத்து தொடர்ந்து பேசினான்...

"ஆனா... ஒரு விதத்துல சாமி ரொம்ப நல்லவருதான்... கால் ஊனமா இருந்ததனாலதானே அவுங்க ஆட்டை புடிச்சுட்டுப் போகல?"

"கால் நல்லா இருந்திருந்தா கூட்டிப் போயி வெட்டி இருப்பாங்க... சாமிதானே ஆட்டைக் காப்பாத்தி இருக்காரு... அப்ப சாமி ரொம்ப நல்லவருதானே!"

நெஞ்சுக்குள்ளிருந்து அழுகை வெடித்துக் கொண்டு வர... மருதவேலுவை மார்போடு அணைத்து அழ ஆரம்பித்தாள் அருக்காணி. ○



தனியாக வாழ்வது பிரச்னைதான்!

—பிருந்தா!

பிருந்தா - இன்றைய டீவி நடிகைகளில் இளம் சீனியர் இவர்தான். 'ஆனந்தம்' சீரியலில் அழகான வில்லியாய் நடித்து, அனைத்து வீடுகளிலுமுள்ள கண்ணீர்க்கரசிகளின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்பவரை ஓர் ஆனந்தமான வேளையில் சந்தித்தோம்.

டீ.வியில் நீண்ட நாட்களாக நடித்து வருகிறீர்களே?

91ல் குடும்ப நண்பர் எஸ்.வி.சேகரின் நாடகமான 'நம் குடும்பம்' சீரியல்ல சும்மா நடிக்க தொடங்கினேன். அதைப் பார்த்து கிரேஸி மோகனோட 'நில் கவனி கிரேஸி'க்காகக் கூப்பிட்டார். அவ்வளவுதான், வாழ்க்கை திசை மாறிடுச்சு. ஆனா நடு நடுவுல ப்ரேக் எடுத்து நடிச்சதால, மத்த ஆர்டிஸ்ட் அளவுக்கு நான் பேர் புகழ் அடையாமல் இருக்கலாம்.

" 'ஆனந்தம்'ல உங்களைப் பார்த்தா யாருக்கும் ஆனந்தம் வரலையே?"

"எனக்குக்கூட அந்த கேரக்டரைப் பற்றி முதல்ல சொன்னபோது "நானா இந்த கேரக்டர்ல'ன்னு ஆச்சர்யப் பட்டேன். சாஃப்டான லுக் உள்ளவங்க, வில்லியா பண்ணா வித்தியாசமா இருக்கும்னு டைரக்டர் சொன்னதால செஞ்சேன். சமீபத்துல கால்ல அடிபட்டு ஆஸ்பிடல் போனப்போ ஒருத்தர் என்கிட்ட வந்து, "எப்படியெல்லாம் கொடுமைப்படுத்தறே, அந்தப் பாவம்தான் இது''ன்னு சபிச்சுட்டுப் போனாரு. எனக்கு நல்லா சிரிப்பு வந்தது. இப்படிப் பார்த்தா நம்பியார், பிரகாஷ் ராஜ் எல்லாம் ஹாஸ்பிட்டல்லயே பழியாக் கிடக்கணும்."

டீ.வி சீரியல்கள் பெண்களுக்கு அவசியமா?

"இங்க பாருங்க, சீரியல்கள் வர்றதுக்கு முன்னாடி மட்டும் நம்ம பெண்கள் உபயோகமாவா நேரத்தை செலவழிச்சாங்க. கிடையாதே. ஆனா யாரும் சீரியல்களுக்கு அடிமையாவது தப்புதான். நம்ம சீரியல்களிலும் காலை 11 மணியிலிருந்து ஒரு பெண் நைட் 11 மணி வரைக்கும், ஆண்களை எதிர்த்து, பாவம், போராடிட்டே இருக்கா. இதெல்லாம் தவிர்த்து காமெடி சீரியல்கள் கொண்டு வரலாம்.

தனியாக வாழ்க்கையை எப்படிக் கழிக்க முடிகிறது?

''ஆறு வருடங்களுக்கு முன்பே கணவரிடமிருந்து டைவர்ஸ் வாங்கிட்டேன். அப்பா அம்மாவும் இறந்து விட்டார்கள். எனக்கு என் மகனும் அவனுக்கு நானும்தான் உலகம். தனியாக வாழ்வதால் பிரச்னைகள் வரத்தான் செய்கின்றன. அதையெல்லாம் எதிர்கொண்டாலும், எமோஷனலாகி சென்டிமென்டாக ஃபீல் ஆவதைத் தவிர்க்க முடியலை."

- நீலாவள்ளி

படம் : **ஸ்ரீஹரி**



ரைட்டா? தப்பா?

தமிழ்ச் சூழலில் தோன்றும் பெண் இயக்குனர்கள் ஒரு போதும் தடம் மாறியதில்லை. இப்போது ஆர். புவனா. காலந் தோறும் பெண்மையை வர்த்தகக் காட்சிப் பொருளாக்கி வரும் ஆண்கள், தங்கள் இறுக்கமான பாதுகாப்பில் வைத்திருக்கும் 'சினிமா இயக்கம்' எனும் இரும்புக் கோட்டைக்குள் நுழைவதே பெண்களுக்கு இங்கே பெரும் சவால். அதிலும் பெண்கள் விஷயத்தில் ஆண் வர்க்கத்தின் சர்ச்சைக்குரிய அணுகுமுறைகளை கூர்மையாகவும், அதே நேரம் துணிச்சலாகவும் விமர்சித்தல் என்பது அபூர்வம். அதை அலட்டல் இல்லாமல் சாதித்திருக்கிறார் பத்திரிகையாளராக இருந்து இயக்குனராகியிருக்கும் இவர்.

ஈவ் டீசிங் கொடுமையால் பாதிக்கப்படுகிறார்கள் நான்கு பள்ளி மாணவிகள். படிப்பில் சாதிக்கும் ஓர் அப்பாவி மாணவனை குற்றவாளி என்கிறது சாட்சிகளை மட்டுமே நம்பும் கூட்டம். ஆனால் அவனும் ஒரு காரணமே தவிர, உண்மையில் அவன் நிரபராதி. நிஜக்குற்றவாளிகளான அவனது நண்பர்கள், நீதிமன்றத்தில் மௌனம் சாதித்துவிட்டதில் அதிர்ந்து போகும் நிரபராதி மாணவன், தண்டனையிலிருந்து தப்பிக்க முடிந்ததா என்பதை சினிமாத்தனமோ, ஜிகினா வேலையோ இல்லாத டாக்குமெண்டரி தன்மையோடு காட்சிப்படுத்தியிருக்கிறார் இயக்குனர்.

குற்றம் சார்ந்த உண்மைச் சம்பவங்களுக்கு திரைக்கதை அமைக்கும்போது, நல்ல மனித உணர்வுகளுக்கு பெரிய வறட்சி ஏற்படும். ரைட்டா தப்பாவில் அந்த தவறு நிகழாதது பெரிய ஆறுதல். அம்மா, தங்கை, காதல், நட்பு, குறிப்பாக கூடாநட்பு என உறவுகளின் பின்னணியில் சம்பவங்களைக் கட்டமைத்து, மெல்ல மெல்ல கதையை டேக்ஆஃப் செய்திருக்கும் திறமைக்கு உலக மகளிர் தினத்தில் ஒரு 'சபாஷ்'.

சிறையிலிருக்கும் தம்மைக் காண வரும் தங்கையின் தலைமுடி கலைந்திருப்பதைப் பார்க்கும் அண்ணன், "ஏம்மா! இப்படியிருக்கே?" என்று கேட்க, "வழியிலே சில பசங்க முடியைப் பிடிச்சு இழுத்துட்டு, உங்க அண்ணன் பண்ணினதைவிட இது ஒண்ணும் பெரிசில்லேன்னு சொல்றாங்க! இதெல்லாம் எனக்குப் பழகிப் போச்சுண்ணா! நீ தைரியமா இரு!" என்று சொல்லும் காட்சி உட்பட, கண்ணீர் முட்டி உடையும் தருணங்கள் படத்தில் நிறைய. இளமைத் துள்ளலோடு, ஓர் எரியும் பிரச்னையை இளைஞர்கள் ரசிக்கும் விதமாக எடுத்திருப்பதால், ரைட்டா? தப்பா?வுக்கு ஓகே, ரைட்! என்று தைரியமாக டிக் அடிக்கலாம்.

- விஷுவல்தாசன்

தமிழ்நாட்டின் முன்னணி சண்டைக் கோழிகளான கலைஞர்-ஜெயலலிதா, அஜித்-விஜய், விவேக்-வடிவேலு எல்லோரும் ஒரே இடத்தில் சந்தித்துக் கொண்டால்...! ('எதுக்கு சந்திக்கிறாங்க'ன்னு யோசிக்காம, சந்திச்சுக்கிட்டா எப்படி பேசிக்குவாங்கன்னு பார்ப்போம்!)

விவேக்: *(ஓர் அறைக்குள் நுழைகிறார்)* ஆ... என்னடா இது? அம்மா, 'கண்ணம்மா', ஜி, திருப்பாச்ஜி எல்லாம் ஒரே இடத்துலயா? தமிழ்நாடுதானா இது? *(அதிர்ச்சியாகிறார்.)*

வடிவேலு: *(அதே அறைக்குள் நுழைகிறார்)* ஆங்...அய்யோ...அய்யோ! கலைஞரு பெரிப்பா, புரட்சி ஆத்தா, விசய் தம்பி, அசித் தம்பி... திருவிழாக் கணக்கா இருக்கு. *(விவேக்கைப் பார்த்து நக்கலாக)*... ஆமா... இது யாரு? திருவிழாவுல காணாமப்போன மாதிரி...

விவேக்: ஹே...மேன்? கில்லி அடிச்சா விஜய்! சொல்லி அடிப்பான் விவேக்! வெயிட் அன் ஸீ!

வடிவேலு: பாப்போம்! பாப்போம்! ஆமா, எப்பவுமே 'ஓவரா' பேசுறவங்களாம் அமைதியா அப்புராணியாட்டம் இருக்கிக? குண்டக்க மண்டக்க எதை யாவது பேசுங்க! பொழுது போவும்ல!

விஜய்: இல்லீங்கண்ணா! பெரிய வங்க, *(அஜித்தை ஓரக்கண்ணால் பார்த்து)* வயசானவங்க இருக்கிற இடத்துல, சின்னப் பையன் நான் பேசுனா மரியாதை இல்லீங்கண்ணா!

அஜித்: *(ஆவேசமாகி)* ஏய்ய்ய்.... என ரத்தம். என்கிட்ட 'அட்டகாசம்' பண்ண யாருக்கும் தகுதி... தகுதி... தகுதி இல்ல... ஏய்ய்ய்...

விவேக்: ஹலோ பிரதர்! அடிக்கடி 'ஏய்'னு கத்தாதீங்க. அப்புறம் சரத்குமார் வந்துடுவாரு. பின்னால 'அர்ஜுனா... அர்ஜுனா'ன்னு நமீதா அம்புவிட வந்திரும்! கலைஞர் ஐயா... எனக்கொரு சந்தேகம்... 'கண்ணம்மா'ல 'கண்'ணுன்னா கண்ணழகி மீனா... 'அம்மா'ன்னா யாரு?

வடிவேலு: ஆஹா... ஆரம்பிச்சுட் டான்யா!

கலைஞர்: என்னிடமே நக்கலாகப் பேசுகிறாயா... தமிழ் மொழியில் 'அம்மா' என்பதன் உன்னதமான அர்த்தத்தைக் கெடுத்து வைத்திருக்கிறார்கள். இம் மண்ணின் மைந்தர்கள் அதை மாற்ற வேண்டும்.

அம்மா: ஹூம்! வர வர தமிழ் நாட்டில் எல்லோரும் என்னைவிட அதிகம் பேசுகிறார்கள். இதை அடக்க ஒரு சட்டம் கொண்டு வரப் போறேன்.



அம்மா Vs

விவேக்: அய்யகோ! வேண்டாம்மா, வேண்டாம். கம்யூனிஸ்ட்காரங்க கூட 'அருவாளை' பத்தி அவ்ளோ பேசியிருக்க மாட்டாங்க. ஆனா 'திருப்பாச்சி'ல அருவா அருள் உரையே கொடுப்பாரு நம்ம விஜய்! 'அது'ன்னு ஒரு வார்த்தை சொல்றதுக்கு முன்னாடி 'அரைக்கிலோ' வசனம் பேசுவாரு நம்ம அஜித்! *(வடிவேலுவைப் பார்த்து)* இங்க பாருங்க. ஃபீல்டுக்குள்ள வர்றப்போ, இரண்டரை செ.மீ. இருந்த வாய், பேசிப்

பேசியே ஏழரை செ.மீ. ஆயிட்டுது. பேசக் கூடாதுன்னு சொன்னா, நாங்க என்னம்மா பண்ணுவோம்? நாங்க படத்துல என்ன 'அறிக்கையா' வுட முடியும்?

விஜய்: கரெக்ட்ண்ணா! 'லவ்' சீன்ல கூட 'ஜிவ்'வுன்னு பஞ்ச் டயலாக் பேசியே பழகிடுச்சுங்கோ!

அஜீத்: ஆமா... வர வர ஷாலினி கிட்ட கூட மென்மையா, ரொமான்டிக்கா என்னால



கண்ணம்மா!

பேச முடியல! என்னா... மனசுல ஆவேசம்... வெறி... வேணும்! எனக்கு நம்பர் ஒன் நாற்காலி வேணும்!

வடிவேலு: *(மனதிற்குள்)* ஆஹா... சின்னப்புள்ளத்தனமால்ல இருக்கு! அம்மா முன்னாடியே நாக்காலி கேக்குறாக!

விஜய்: ஹூம்! மக்கள் மனசுல எனக்கு நாற்காலி போட்டிருக் காங்கண்ணா! ஆனா சிலருக்கு நாற்காலியில்ல... இடமே காலி!

விவேக்: ஆஹா... 'பஞ்ச்'சர் பாண்டியனுங்க ஆரம்பிச்சுட்டாங்க.

அம்மா: *(கோபமாக)* அதிகம் பேசுகிறீர்கள். இந்த அறையிலேயே என் நாற்காலியைத் தவிர, மற்ற நாற்காலிகளெல்லாம் தேவையில்லாமல் இருக்கின்றன.

கலைஞர்: ஹா ஹா ஹா! நாற்காலி... நாப்பதும் காலி!

அம்மா: ஃப்ராட் வோட்டர்ஸ்! யு ஹேவ் நோ ரைட்ஸ் டு டாக்!

வடிவேலு: *(நிலைமை சீரியஸாவதைப் பார்த்து)* ஆங்... இருக்கட்டுங்கம்மா! நீங்க காமெடி சீனெல்லாம் பாப்பீகளா? என் காமெடியைப் பாத்திருக்கீகளா?

அம்மா: நோ டைம். பட், டெய்லி அறிவாலய காமெடி அறிக்கையை படிச்சு சிரிப்பேன்!

விவேக்: *(மனதிற்குள்)* ஆமா! அவரு சிட்டிபாபு, இவங்க அர்ச்சனா, இவங்க பண்ற 'காமெடி டைமை'த்தான் தமிழ் நாடே ரசிக்குதே! *(திடீரென்று அம்மா வெளியேறுகிறார்)* ஆஹா... சிறுதாவூர் பங்களாவுக்குக் கிளம்பிட்டாங்க போல! அதான் சொல்லிக்காம போறாங்க!

கலைஞர்: வெள்ளித்திரை கண்மணிகளே! 'கழக அழகன்'னு ஒரு படம் எடுக்கப் போகிறேன். வீரம் நிறைந்த அற்புதமான கதாபாத்திரம். நீங்கள்...

அஜீத்: *(சுதாரித்துக் கொண்டு)* இல்லீங்க ஐயா, எனக்கு தமில் வர்ராது. நான் தனி ஆளு இல்ல. நீங்க இதோ இந்த 'தமிலனை' நடிக்க வைய்ங்க! *(எஸ்கேப் ஆகிறார்).*

விஜய்: அதுங்க... வந்துங்க... சச்சின்ங்க... சவுரவ்ங்க... ஆளை விடுங்கோ! *(ஓடுகிறார்)*

வடிவேலு: என்ன இது! அவனவன் ஓடுறாங்க! இப்ப என்ன பெரிசாக் கேட்டுப்புட்டாரு? ராசா...நீங்க கவலைப் படாதீக... நான் இருக்கேன்...

(இப்பொழுது கலைஞர் எஸ்கேப் ஆகிறார்)

விவேக்: வடி வடிவேலு, வடிவேலு! என்னிக்கும் நிமிராது நாய்வாலு!

(இடம் ரணகளமாகிறது)

- **முகில்**

கனம் (வேதம்) சொல்கிறபோது கவனிக்க வேண்டும். நமகம் என்ற வேத பாகம் விசேஷமானது. நான்காம் காண்டத்தில் அமைந்திருக்கும்படியான நமகத்தை, கனம் சொல்கிறபோது உச்சாரணம் செய்யக் கேட்க ரொம்ப ஆச்சர்யமாக இருக்கும்.

18



'நம: நம:' என்ற சப்தம் திரும்பத் திரும்ப வரும். 'நம:' சப்தமானது பகவானுக்கு அவ்வளவு சந்தோஷத்தை ஏற்படுத்துகிறது என்பதால், வேதமே நம: நம: என்று பல தடவை சொல்கிறது. இதைக் கேட்கிற போது, - கனம் சொல்வதைக் கேட்கிறபோது - நமக்கு அர்த்தத்தளவில் புரியாவிட்டாலும், வாயளவில் சொல்லக் கேட்கவே ஆனந்தமாக இருக்கிறது. கேட்டுக் கொண்டேயிருக்க மாட்டோமா என்றுகூடத் தோன்றுகிறது.

நைரோவ்யஞ்சன ஸ்மரிதம் என்று பெயர் இந்த பாகத்துக்கு. ருத்ராபிஷேகம் பண்ணுகிறபோது சொல்லக்கூடிய மந்திரம் இது. அப்படிப்பட்ட ஏற்றமுடைய இந்த மந்திர பாகமானது, நம: என்பதைச் சரணாகதி மந்திரமாகச் சொல்கிறது.

ம என்றால் எனக்கு, என்னுடையது.


ந என்றால் இல்லை.

இல்லை என்னுடையது; இல்லை எனக்கு! நம: என்று சொல்கிற போது என்ன பொருள் என்று பார்க்க வேண்டும்.

'ஓம் விச்வாய நம:
ஓம் விச்வஸ்யை நம:
ஓம் விஷ்ணவே நம:
ஓம் வஷட்காராய நம:'

ஏழாம் பாகம்

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்



என்று சஹஸ்ரநாமத்திலே ஒவ்வொரு நாமாவாகச் சொல்லி அர்ச்சனை பண்ணுகிறோமே... 'நம: நம:' என்றால் என்ன பொருள் இங்கே...?

'நமஸ்காரம்', 'வணங்குகிறேன்' என்பது சாமானிய மான அர்த்தம். ஆனால், அதற்கு உண்மையான உயர்ந்த பொருள் என்னவென்றால், 'எனக்கு இல்லை - இல்லை என்னுடையது' என்று அர்த்தம்.

சாமானியமாக உலக வழக்கிலே நாம் எப்படிச் சொல்வோம்?

"இந்த கடியாரம் உம்முடையதுதானா?" என்று ஒருத்தர் கேட்டால்; "என்னுடையது இல்லை" என்றுதான் பதில் வரும். 'இல்லை' என்பது பின்னால் வரும்; என்னுடையது என்பதைத்தான் முன்னால் சொல்கிறோம்.

ஆனால், பகவானை உத்தேசித்துச் சொல்கிறபோது, நம: என்கிறபோது, இவை அனைத்தும், உன்னுடையது என்கிறபோது, 'இல்லை என்னுடையது' என்றுதான் வரும். திருப்பித்தான் சொல்ல வேண்டும்.

ஏன் அப்படி...?

முதலில் சொல்கிறபோது 'இல்'லை என்ற வார்த்தையை ஒருத்தர் சொல்கிறார். 'என்னுடையது' என்று ஆரம் பித்துச் சொன்னால், அப்புறம் 'இல்லை' என்று சொல்ல மனம் வருமோ வராதோ... சொல்கிறாரோ இல்லையோ... என்றுதான், எந்தவித சந்தேகத்துக்கும் இடமில்லாமல் முதலிலேயே 'இல்லை' என்று சொல்ல வைத்து விடுகிறது வேத பாகம்.

எல்லாமே அவன் பொருட்டு என்பதை, பூரணமான அக்னியின் பொருட்டு என்பதை உணர்த்துகிறது நம:

அப்படிப்பட்ட அக்னியின் பொருட்டு வழங்கி அக்னியின் ஸம்பந்தத்தோடு இருக்க வேண்டும் என்கிறது சாஸ்திரம். நித்யம் அக்னி பூஜை பண்ண வேண்டும். பிரம்மச்சாரியாக இருந்தால்

குறையொன்றுமில்லை

ஸமிதா தானம் பண்ண வேண்டும். ஸந்தியாவந்தனம் மட்டும் பண்ணினால் போதாது. - இது சாஸ்திரம் விதித்துள்ளது. இந்த ஸமிதா தானமானது, பிரம்மச்சாரிக்கு பிரம்ம தேஜஸை அளிக்கிறது.

ம்ருத்யு தேவதை போய் பிரும்மாவைக் கேட்டதாம் - 'நான் யாரைப் பிடித்துக் கொள்வது?' என்று கேட்டதாம்! 'எனக்கு இடமே இல்லையே...?' என்றதாம்.

அதற்கு பிரும்மா சொன்னது:

"எந்த பிரம்மச்சாரி ஸமிதா தானம் பண்ணவில்லையோ,

அவனைப் போய்ப் பிடித்துக் கொள்!"

ஆகவே பிரம்மச்சாரி நித்யமே ஸமிதா தானம் பண்ண வேண்டும். உபநயனத்தன்று கற்றுத் தரப்படுவதை நித்யம் பண்ண வேண்டும். பிரும்ம தேஜஸுக்காகப் பண்ண வேண்டும் என்பதோடு, பிற்காலத்தில் அவன் கல்யாணம் பண்ணிக் கொண்டு சந்தோஷத்தை அடைவதற்குரிய மந்திரங்களெல்லாம், ஸமிதா தானத்தில் சொல்லப்படுகின்றன. அதை நித்யம் பண்ணினால்தான் நல்ல வாழ்க்கை, நல்ல பெண் அவனுக்கு அமைவாள். நல்ல இல்லற வாழ்க்கை, நல்ல கிரஹஸ்தாசிரமம் அவனுக்கு அமையும். ஆகவே நித்யம் இரண்டு வேளை ஸமிதா தானம் பண்ண வேண்டும்.

சிரத்தையாக, பக்தியோடு ஸமிதா தானம் பண்ணக்கூடிய குழந்தைகளை விசேஷமாகக் கொண்டாட வேண்டும். அவர்கள் பிரும்ம தேஜஸோடு விளங்குகிறார்கள்.

இவ்வாறு நித்யம் அக்னிஹோத்ரம் பண்ணுகிறவர்கள் கையிலே அக்னி இருக்கிறது என்பார்கள்.

ஒருத்தருக்குச் சந்தேகம் வந்தது.

"வெறுமே நீங்கள் சொன்னால் ஆயிற்றா? எங்கே இருக்கிறது அக்னி?" என்றார்.

அவருக்குப் பதில் சொன்ன முக்கூர் ஸ்ரீமத் அழகிய சிங்கர் (அஹோபில மடம் நாற்பத்து நாலாவது பட்டத்தில் எழுந்தருளியிருந்தவர்) தமது பூர்வாசிரமத்திலே உபன்யாசம் பண்ணிக் கொண்டிருந்த போது சந்தேகம் கேட்டவரிடம் சொன்னார்:

"உம்ம வீடு பக்கத்திலே இருக்கிறதா?" என்றார்.

"இருக்கிறது."

"வீட்டுக்குப் போய் ஒரு தீப்பெட்டி எடுத்துக் கொண்டு வாரும்..."

உடனே அவர் போய் தீப்பெட்டியை எடுத்துக் கொண்டு வந்தார்.

"இதிலே அக்னி இருக்கிறதா?" என்று கேட்டார் அழகிய சிங்கர்.

"இருக்கிறது."

"அக்னியைக் காட்டேன்" என்றதும்



லண்டனில் கட்டைப் பஞ்சாயத்து!

லண்டன் நகரில் பாடல் காட்சிகளை மட்டுமே படம் பிடித்து வந்த கோலிவுட், ஒரு மாறுதலுக்காக ஒரு முழுப் படத்தையும் லண்டனில் எடுத்துத் திரும்பியிருக்கிறது. சுந்தர்.சி இயக்கத்தில், பிரசாந்த் நடிக்கும் அந்தப் படத்தின் பெயரும் 'லண்டன்'தான். லண்டனில் என்ன விசேஷம்? "நாங்கள் படப்பிடிப்பு நடத்தியபோது அங்கே இலையுதிர் காலம். இலைகள் எல்லாம் பழுப்பு நிறத்தில் பார்க்கவே ரம்மியமாக இருக்கும். இந்த சீசனில் படப்பிடிப்பு நடத்த, பல ஹாலிவுட் இயக்குனர்கள் மாதக்கணக்கில் வந்து காத்திருந்தனர். எங்களுக்கோ இயற்கையாகவே அமைந்துவிட்டது. லொக்கேஷனில் ஹாலிவுட் படக்குழுக்களோடு தினசரி சண்டைதான். எங்கே லண்டன் போலீசார் பேக்-அப் சொல்லி விடுவார்களோ என்று தினசரி திக்திக்! ஆனால் நார்வே தூதுக் குழுவினர் போல அலுத்துக் கொள்ளாமல், அடிக்கடி கட்டைப் பஞ்சாயத்து செய்து வைத்ததை மறக்க முடியாது" என்கிறார் இயக்குனர். லண்டனில் ஆலமரப் பஞ்சாயத்துக் காட்சி ஏதாவது இருக்குமோ?

- ஸ்ரீ

படம் உதவி: மௌனம் ரவி

இவர் தீக்குச்சியை எடுத்துக் காட்டினார்:

"அக்னியைக் காட்டு என்றதும் உம்மால் காட்ட முடிந்ததா? குச்சியைக் கிழித்த பிறகுதானே காட்ட முடிந்தது? அப்புறம்தானே அக்னி உண்டாயிற்று? அதே மாதிரிதான் - அக்னிஹோத்ரம் செய்பவன் கையில் உள்ள அக்னி - 'காட்டு' என்றால், அதைக் காட்ட முடியாது. ஆனால் சக்தியாக அது உள்ளே இருக்கிறது..." என்றார்.

ஆகவேதான் நித்யம் கிருஹத்திலே ஹோமம், ஒளபாஸனை, அக்னி ஸந்தானாதிகளெல்லாம் பண்ண வேண்டும் என்றது.

சிராத்தம் பண்ணுகிறபோது, 'அனேக கால சாயங்கால ஆஹுதீனாம்' என்று அனேக காலமாக சாயங்காலத்திலே பண்ணாமல் விட்ட ஆஹுதி கர்மாக்களுக்கு, சர்வ பிராயச்சித்தமாகப் பண்ணுவதுண்டு. 'இன்றைய தினம் அதற்கெல்லாம் சேர்த்து இரண்ய தானம் பண்ணுகிறேன்' என்று பிராயச் சித்தத்தைப் பண்ணிவிட்டு, அன்றைய கர்மாவைப் பண்ண வேண்டும்.

ஆகையினாலே, ஆஹுதி, அக்னிஹோத்ரமெல்லாம் நித்யமே பண்ண வேண்டிய கர்மாக்கள். ஆகவே அக்னி சம்பந்தத்தோடு நித்யம் இருக்க வேண்டும்.

அக்னியிலிருந்து தீர்த்தமானது தோன்றியது. அக்னிக்கு மூன்று குணங்கள் என்றால், தீர்த்தத்துக்கு நான்கு.

தீர்த்தத்தினால்தான் உலகிலே சர்வ க்ஷேமமும் ஏற்படுகிறது. சுத்தியானது தீர்த்தத்தால்தான் ஏற்படுகிறது. ஒரு சின்ன கும்பத்திலே தீர்த்தத்தை வைத்து 'ஆஹாஹயாமி' 'ஆவாஹயாமி' என்று வெறுமே மந்திரத்தைச் சொல்லிக் கொண்டிருந்தால் எப்படியிருக்கிறது? நன்றாயிருக்கிறதா? - இப்படி சந்தேகம் ஒருத்தருக்கு வந்தது.

'ஒரு செம்பு தீர்த்தத்திலே இத்தனை தேவதைகள் வந்து உட்கார முடியுமா? நாம் உட்கார வேண்டுமென்றாலே இவ்வளவு இடம் வேண்டியிருக்கிறதே...! இத்தனை தேவதைகளை ஒரு சொம்பு தீர்த்தத்தில் 'வந்து உட்காருங்கள்' என்றால் எப்படி ஆகும்...?' என்று கேள்வி!

இதை நன்றாக கவனிக்க வேண்டும்.



"என் மாமனார் என்கூட இருந்தாருன்னா நான் ரொம்ப சந்தோஷமா இருப்பேன்."

"என் அப்படி?"

"சமையல் வேலையை ரெண்டு பேரும் சரிசமமா பங்கு போட்டுச் செய்வோம்." - ஆர். தங்கராஜ்

வேதம் சொல்கிறது:

ஆவாஹனம் என்கிற கர்மாவை நாம் பண்ணுகிறோமேயொழிய, தேவதைகளெல்லாம் ஆவாஹிதர்களாக ஏற்கெனவே கலசத்திலே வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அதை உணர்த்துவதற்காகத்தான் நாம் ஆவாஹன மந்திரம் சொல்கிறோமேயொழிய, நாம் சொல்வதால் அவர்கள் வந்து உட்காருவதில்லை! நாம் ஆவாஹனம் பண்ணாமலே ஒரு சொட்டுத் தீர்த்தத்திலும் அவர்கள் சான்னித்தியமாய் இருக்கிறார்கள்; ஒரு உத்திரிணி தீர்த்தத்திலும் இருக்கிறார்கள்; சமுத்திரத்திலும் அந்த தேவதைகளே இருக்கிறார்கள்.

சமுப்ரோச பந்து: என்கிறது வேதம். யார் நமக்கு பந்து என்றால், அந்த தீர்த்தம்தான் நமக்கு பந்து.

அந்த எம்பெருமானே ஸமுத்ர ரூபியாக இருப்பதனாலே, அந்த திருப்பாற்கடல் பகவத் ஸ்வரூபமான காரணத்தினாலே, பகவானே தீர்த்த ரூபியாக இருக்கிறான்.

சப்த, ரூப, ஸ்பரிச, ரஸம் என்ற நான்கு குணங்கள் விசேஷமாக தீர்த்தத்துக்கு உண்டு.

இந்த தீர்த்தத்திலிருந்து ப்ருத்வியானது - பூமியானது தோன்றிற்று. தீர்த்தத்திலிருந்து உண்டான பூமிக்கு இன்னொரு குணம் அதிகமாக இருக்கிறது.

சர்வ சுகந்தங்களுக்கும் இருப்பிடமாக இருக்கிறான் பூமாதா. (வளரும்)



நம்பிக்கையே பலம்!

'**வா**ழ்க்கையில் பின்னடைவுகள் வந்தால் சோர்ந்து போய் உட்காராமல் சமாளிப்பது எப்படி?' என்று வீணைக் கலைஞர் ஜெயந்தி குமரேஷுக்கு நன்றாகத் தெரியும்.

"பாதகமான சூழ்நிலை - ஒரு டிஸ்அட்வான்டேஜ் ஆக இருக்கிற நிலைமையை, அட்வான்டேஜ் ஆக, சாதகமான சூழ்நிலையாக எடுத்துக் கொள்ள வேண்டும். புறப்படுகிற சமயத்தில் காரில் பெட்ரோல் இல்லை என்றால், ஒதுங்கி உட்கார்ந்து விடுகிறோமா என்ன? வேறு ஒரு வழியைச் சிந்தித்துக் கண்டு கொண்டு, போக வேண்டிய இடத்துக்குப் போய்ச் சேர்ந்து விடுகிறோமா இல்லையா? கடவுள் இதை நம் நல்லதுக்காகவே செய்திருக்கிறார் என்று பாஸிடிவ் ஆக எடுத்துக் கொண்டால், ஒரு நம்பிக்கை நமக்குள் பிறக்கிறது. அதுவே ஒரு பலத்தைக் கொடுக்கிறது!" என்கிறார் ஜெயந்தி.

வீணை மட்டும்தான் இவருக்கு வாசிக்கத் தெரியும் என்று நினைத்தால், ஏமாந்து போவீர்கள்!

சம்ஸ்கிருதத்தில் பாடல்கள் எழுதுவார். அவற்றுக்கு இசை அமைப்பார். நாட்டிய - நாடகத்தில் நடிக்கிற குழந்தைகளுக்குப் பயிற்சி கொடுப்பார். அலர்மேல்வள்ளியிடம் நடனம் பயின்றதால், கொஞ்சம் நடனமும் தெரியும்!

"என் குரு பத்மாவதி அனந்த கோபாலனின் சத்குரு சங்கீத வித்யாலயாவில் சுமார் 250 குழந்தைகளுக்கு வாய்ப்பாட்டு, வயலின், வீணை எல்லாம் சொல்லிக் கொடுக்கிறோம். ஒவ்வொரு ஆண்டு விழாவுக்கும் நாட்டிய நாடக நிகழ்ச்சிகள் நடத்தும்போது, இந்தக் குழந்தைகள்தாம் நடிக்கிறார்கள். இவர்களுக்கு நடிக்கவும், பாடவும் சொல்லிக் கொடுக்கையில், நாமும் நம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டியிருக்கிறது!" என்கிறார் 'வீணை' ஜெயந்தி.

வீணை வாசிப்பில் இருக்கும் பல 'பாணி'களை ஆராய்ந்து, அந்த உத்திகளை அறிந்து, பி.எச்டி. பட்டத்துக்காக, மைசூர் பல்கலைக் கழகத்துக்கு அளித்திருக்கிறார்.

"காரைக்குடி பாணி, தஞ்சாவூர் பாணி, மைசூர் பாணி என்று பல 'பாணி'கள் (வாசிக்கும் முறைகள்) இருக்கின்றன. காத்திர வீணையில் நம் குரலுக்குக் கிட்டத்தட்ட இணையான நாதம் கிடைக்கும். தனூர் வீணையில் வயலின் வாத்தியத்தின் ஒலி தெரியும்!" என்கிறார்.

விரைவிலேயே 'வீணை' ஜெயந்தி, டாக்டர் 'வீணை' ஜெயந்தி ஆகிவிடுவார். ('அட்வான்ஸ் கன்கிராட்ஸ்,' ஜெயந்தி!)

"என்னைப் பொறுத்தவரை, கடவுள்தான் என் உள் பலம். வேறு எதுவும் கிடையாது. காமாட்சி அம்மன், மகா பெரியவர், என் குடும்பம் என ஆதரவுக்கும் அணைப்புக்கும் இருக்கிறபோது, அந்த பலம் இன்னும் கூடி விடுகிறது. புயல்கள் வீசினாலும் தாங்கி நிற்க முடிகிறது!"

- **சாருகேசி**

படம்: **ராபே**

எல்லாம் தெரியும்!

அஜித்லால்



"ஜீன்ல இருந்து ஒரு ஜீவனை உருவாக்க ஆரம்பிச்சுட்டாங்க. யாருக்காச்சும் குழந்தை பிறந்தா நாம தாத்தா மாதிரி இருக்கா, இல்லே பாட்டி மாதிரி இருக்கான்னுதானே கேட்போம்... இனிமே அந்த மாதிரி எல்லாம் கிடையாது. நேரடியா தாத்தாவா, இல்லே பாட்டியான்னு கேக்க வேண்டியதுதான்."

சுவாமிநாதன் குளோனிங் குறித்து மகனுக்கு விளக்குவதைக் கேட்டதும் கோமதிக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

"என்ன இளிப்பு வேண்டிக்கிடக்கு? சின்ன வயசுலேயே நாலு விஷயம் தெரிஞ்சுக்கிட்டாதான், உலக அறிவோடு வளருவான். இல்லன்னா உன்ன மாதிரி மக்காத்தான் இருப்பான்" என்றவாறே அவர் அவளை இளக்காரமாகப் பார்க்க, கோமதி, "ஆமா... உங்களுக்குதான் எல்லாம் தெரியும்!" என்று சலித்துக் கொண்டாள்.

"இவனுக்குத் தெரியறதாவது உனக்குத் தெரியுமா? உகாண்டாவோட பிரசிடென்ட் யாருன்னு சொல்லு பார்ப்போம்."

அவள் வாய் திறக்கவில்லை.

"அதுதான் தெரியலை... சாக்கடல் எங்கே இருக்குன்னாவது சொல்லு."

பையன் வாயைப் பொத்திக்கொண்டு சிரித்தான். அடுத்த கேள்வியைக் கேட்க எத்தனித்தவரை வாசலில் நிழலாடிய உருவம் ஈர்க்க, வெளியே சென்று பார்த்தார். யாரோ ஒருவர் விலாசம் எழுதிய துண்டுச் சீட்டோடு நின்றிருந்தார்.

"சார், இங்கே வெங்கடேசன்னு..."

"அப்படி யாரும் இல்லையே..."

"ஒருவேளை பக்கத்து வீடுங்களா...?" வந்தவர் கேட்க, சுவாமிநாதன் உள்ளே எட்டிப் பார்த்துக் கேட்டார்... "கோமதி... பக்கத்து வீட்ல இருக்காரே... அவரு பேரென்ன?"

○

அருள்வாக்கு

ஸ்த்ரீயானவள் ஒழுங்காகப் பொறுப்பாக வீட்டு வேலைகளைப் பண்ணுவதென்றால் (சமைத்துப் போட்டு, குழந்தைகளைக் கவனித்து, புருஷனுக்குச் செய்ய வேண்டியவைகளைச் செய்வதென்றால்), அதற்கே நாள் பூராவும் ஆகிவிடும். குடும்பங்கள் சேர்ந்துதான் தேசம்; வீடுகள் சேர்ந்துதான் நாடு. ஆனதால் பொம்மனாட்டிகள் அவரவர் வீடுகளை வீடாக வைத்துக் கொள்வதற்கானவற்றைப் பண்ணினால் அதுவே நாட்டுப் பணி; உலகத் தொண்டுதான்; பரோபகாரம்தான். இதற்கு மிஞ்சிப் பொழுதும் சக்தியும் இருந்தால் பொதுப் பணிகளும் செய்யலாம். இவை ஸ்த்ரீ லக்ஷணத்துக்கு உரியதாக, 'பெண்மை' என்று ஒன்றை வார்த்தையாகவாவது இன்னமும் சொல்லிக் கொண்டிருக்கிறோமே, அதற்கு ஏற்றபடியான தொண்டுகளாக இருக்க வேண்டும். அதாவது அடக்கத்துடன் செய்வதாக இருக்க வேண்டும். தேஹ ச்ரமமும் அதிகம் இருக்கக் கூடாது. கோயில்களில் கட்டுக் கட்டாகக் கோலம் போடுவது; பஜனை - ஸந்தர்ப்பணை நடக்கிற இடத்தில் பெருக்கி, மெழுகி, பாத்திரம் தேய்த்து உபகாரம் பண்ணுவது; பிரஸவ ஆஸ்பத்திரி மாதிரியாக பெண்களுக்கு மட்டுமே உரிய இடங்களில் பிரஸாதங்கள் விநியோகம் பண்ணுவது; அநாதைக் குழந்தைகளைப் பராமரிக்கிற இடங்களுக்குப் போய், அதுகளுக்குப் புது வஸ்திரம், பக்ஷணம் கொடுத்து, ஏதோ கொஞ்சம் பஜனை, ஸ்தோத்திரம் சொல்லித் தருவது என்று இப்படிப்பட்ட பணிகளைப் பெண்கள் செய்யலாம்.




ஸமுதாயம் ஒன்றுபட வேண்டும் என்பதற்காகக் குளம் வெட்டுகிற வேலையில் மட்டும், அது கொஞ்சம் ச்ரமமானதாக இருந்தாலும்கூட, நானே பெண்களையும் ஈடுபடுத்தியிருக்கிறேன்.

இருந்தாலும், பொதுவாக "ச்ரமதான்" என்பதில் கடும் சரீர உழைப்புத் தேவைப்படுகிற தொண்டுகளைப் பெண்களிடம் காட்டாமல் புருஷர்களே பண்ணுவதுதான் உசிதம்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

புக்போஸ்ட்



சில பயணங்கள், சில அனுபவங்கள்
- சாருகேசி

நடை	: 16/20
தகவல்கள்	: 18/20
நகைச்சுவை	: 19/20
வர்ணனை	: 17/20
பயணத் தூண்டல்	: 18/20
மொத்தம்	: 88/100
போனஸ்	: யோகாவின் படங்கள்
தயாரிப்பு, அச்சு நேர்த்தி	: பாராட்டலாம்.


கங்கை புத்தக நிலையம், 23, தீனதயாளு தெரு,
தி.நகர், சென்னை: 17, விலை ரூ.40/-



வானம் என் அலமாரி
- குகை மா. புகழேந்தி

நடை	: 10/20
கவி நயம்	: 12/20
கற்பனை	: 12/20
தாக்கம்	: 14/20
வடிவம், அச்சு	: 18/20
மொத்தம்	: 66/100

குமரன் பதிப்பகம், 3, முத்துக்கிருஷ்ணன் தெரு,
தி.நகர், சென்னை - 17, விலை ரூ.40/-



கண் விழித்த கானகம்
- மலர்மன்னன்

நடை	: 19/20
பாத்திரப் படைப்பு	: 15/20
வர்ணனை	: 10/20
கள ஆய்வு	: 18/20
நாவல் இலக்கணம்	: 16/20
மொத்தம்	: 78/100

மலர்மன்னன் வெளியீடு,
1/2, பீட்டர்ஸ் சாலை அரசு ஊழியர் குடியிருப்பு,
சென்னை - 14, விலை: ரூ.100/-

- விஷ்வக்

மஞ்சரி வளர்ப்புத் தந்தையை அதட்டலாக வெறித்துப் பார்த்தாள்.

"என்ன கண்ணு, அப்படிப் பாக்கறே? நான் இப்பல்லாம் சிகரெட் பிடிக்கறதில்லை."

10



"பொய்."

"சத்தியமா எப்பவாவது ஒண்ணு" என்றார். லண்டன் போவதற்கு முன் பார்த்ததற்கு இளைத்திருந்தார். சோர்வாகத் தோன்றினார்.

"எப்பவாவது ஒண்ணு? பரமேஸ்வரன் சார்."

"தினம் இருபதிலிருந்து அஞ்சுக்கு வந்திருக்கார்."

"யோவ் சகுனி! உக்காருய்யா முதல்ல."

"அண்யா, எதுக்காக உங்களையே அழிச்சிக்க விரும்பறீங்க?"

அவர் கண்களில் முதலில் கோபம் தென்பட்டு சட்டென்று விலகியது. வேறு யாராவது அதைச் சொல்லியிருந்தால் 'நீ யார் இதை கேக்கறதுக்கு' என்று முகத்தில் அடித்திருப்பார்.

கேட்டது மஞ்சரி. செல்ல மகள். மூச்சுக் காரணி.

"ஆரம்பிச்சியா? நீ ஒருத்திதான் பாக்கி...! உண்மையைச் சொல்லட்டுமா? எனக்குப் பிடிச்சிருக்கு."


"பிசினஸ்ல ரிஸ்க் எடுக்காட்டா முன்னுக்கு வர முடியாது. அது போல லைஃப்லயும் ரிஸ்க் எடுக்கணும். நல்ல காபி குடிச்சிட்டு,

புதிய இளமைத் தொடர்

சுஜாதா



ஒரு சிகரெட் குடிக்கிறதில உள்ள சந்தோஷம் வேற எதிலயும் கிடையாது. இதுக்காக வாழ்நாள் குறைஞ்சாலும் பரவால்லை, காதில பூ வெச்சுக்கிட்டு ஜிஞ்சான் அடிச்சுக்கிட்டு, தொண்ணூறு வரை வாழுறதைவிட, நல்ல ஷாம்பேன், நல்ல சாப்பாடு..."



"பைத்தியம் மாதிரி பேசாதிங்க."

"மத்தவங்கன்னா இந்த வார்த்தைக்கு கன்னத்தில அறைஞ்சிருப்பேன்."

"அறைங்க." அவள் அவருக்கு எந்த விதத்திலும் பிடிவாதத்தில் சளைத்தவளல்ல, அதுதான் அவளிடம் பிடித்த விஷயம்.

"எனக்கு மரணத்தைப் பத்தி பயம் இல்லை கண்ணு! செத்துப் போறதைப் பத்தித்தான் பயம். பெட்பான் வச்சு, வெண்டிலேட்டர்ல வச்சு, கோமாவில போயி, பார்கவா மாதிரி செத்துப் போக நான் விரும்பலை."

"அய்யா, நானும் சிகரெட் ஊதிப் பார்த்தேன். இருமல்தான் வரது. அதுல என்னதான் இருக்கோ."

"நீ செய்தது பஃப்பிங். நான் செய்யறது ஸ்மோக்கிங்."

"அது என்ன கண்றாவியோ, நீங்க குழந்தை இல்லை. இதில் உள்ள எச்சரிக்கையெல்லாம் தெரிஞ்சவரு."

"என்ன ரொம்ப அறுக்கறே, பாலா உங்கிட்டே பேசினாரா?"

"பேசப் போறேன்."

"விஜியை கல்யாணம் பண்ணிக்கறியா? உயிரோட இருக்கேன். இந்த சரவணன் வேண்டாம், கிறுக்குத் தத்தாரி. அப்பனை அப்படியே கொண்டிருக்கான். பரமேஸ்வரன், அந்த மாலிகா பிளாக்மெய்ல் மேட்டர் சொல்லியிருக்கிறா? எல்லாம் நாடகம்."

உள்ளம் துறந்தவன்

"வேண்டாம் முதலாளி."

"பேச்சை மாத்தாதிங்க. இப்ப உங்க இதயம்தான் டாப்பிக்."

"பாரும்மா, எனக்கே என்ன உபாதைன்னு தெளிவா தெரியும். கார்டியோமையோபதி ஆர்ட்டீரியல் பிளாக். இ எஃப்ங்கறது பதினாலிலேயோ பதினஞ்சிலேயோ ஓடிக்கிட்டிருக்கு. மினிமம் நாப்பத்தஞ்சாவது இருக்கணும். எல்லாமே தெரியும்."

"பின்னே?"

"இன்னொரு விஷயமும் தெரியும். எனக்கு அதிக டைம் இல்லை."

அவரை நேராகப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, மஞ்சரியின் கன்னங்களில் கண்ணீர்த்துளிகள் திரண்டு உருண்டன. துடைத்துக்

கொள்ளாமல் அழுதாள்.

"எதுக்கு அழுவறே?"

"நீங்க போறப்ப என்னையும் கூட்டிப் போயிருங்க அண்யா" என்று டிஷ்யுவில் மூக்கு சிந்தினாள்.

"உத்தேசமே இல்லை. பாரு உலகத்திலேயே சிறந்த வைத்தியம் எனக்குக் கிடைக்குது. சிறந்த ஆஸ்பத்திரி, சிறந்த சர்ஜன், கார்டியாலஜிஸ்ட், எல்லாப் புண்ணாக்கும் கிடைக்குது. இதயம் என் ப்ரையாரிட்டி லிஸ்டில முதல் ஐட்டமா வரலை."

"முதல் ஐட்டம் என்ன?"

"இந்த யுரோ இஷ்யு. அப்புறம் விஜி - மஞ்சரி கல்யாணம். இதயம் அதுக்காக வெய்ட் பண்ணும், பண்ணணும். இதயத்தைக் காத்திருக்கச் சொல்லிருக்கேன். அப்பால, மவனே வாடா ஒண்டிக் கொண்டின்னு எல்லா ட்யூபையும் மாட்டிக்கத் தயாராவேன்" என்று சிரித்தார்.

"போர்டு ரூம்ல பத்துப் பேர் காத்திருக்காங்க. இரு வந்துர்றேன். இந்த அழகேசனோ, மகேசனோ அவனை ட்ரேஸ் பண்ணுங்க பரமு. மஞ்சுக் கொல்லை சொல்லிருச்சுல்ல."

"மஞ்சரி, நீ பாலாகிட்ட பேசிர்றியா?"

"இப்ப என்ன மணி இருக்கும் அங்கே"

"எப்ப வேணா கூப்பிடலாம்னு சொல்லிருக்கார்."

மூன்று டெலிபோன்களில் ஒன்று ஒலித்தது.

"நூறு ஆயுசு டாக்டர்."

"என் ஆயுசு கிடக்கட்டும். அவரை மினர்வால அட்மிட் பண்ணீங்களா?"

"இல்லை, மஞ்சரிகூட முதல்ல பேசுங்க... பாலா."

மஞ்சரி டெலிபோனை வாங்கி "மாமா எப்படி இருக்கீங்க?"

"பெரியவர் எப்படி இருக்கார் மஞ்சு?"

"போர்டு மீட்டிங்ல இருக்கார்"

"என்னது! படிச்சுப் படிச்சு சொன்னேன்"

"கேக்க மாட்டேங்கறாரு. நீங்க வந்தாத்தான்"

"நான்... பாரும்மா, பத்து சர்ஜரியை ரி ஷெட்யுல் பண்ணிட்டு வரணும். மஞ்சு, ஹி இஸ் வெரி வெரி ஸிக்"

"தெரியும் அவரே சொல்றார். நாப்பதுக்கு பதில் பதினஞ்சு ஆர்ட்டிரியல் ப்ளாக், எல்வி ஃபேங்க்ஷன்!"

"அதான் அவர்கிட்ட பிரச்னை. ஹார்ட்டை ஏதோ பிசினஸ் ப்ரபோசல் மாதிரி அலசிக்கிட்டிருக்கார். கடவுளே! இப்ப அவருக்கு ஏதாவதுன்னா கோயமுத்தூர்க்காரனும், பார்கவா மகனும் கம்பெனியை சாப்ட்டுருவாங்க."

"எப்ப வரீங்க?"

"அதுக்கு முன்னாடி அவரை எப்படியாவது மினர்வாவுக்கு கூட்டிட்டுப் போய், ஒரு ம்யுகா டெஸ்ட் எடுத்தே ஆகணும். வந்திருவேன். விஜியும் வருவான். முக்கியமாக உன்னைப் பார்க்க..."

"எனக்கு ஒண்ணுமே புரியலை மாமா."

"சிம்பிளா சொல்லட்டுமா?"

"வேண்டாம், பரமேஸ்வரன் சொல்லிட்டார்."

போனை வைத்தபோது, செக்யூரிட்டி அதிகாரி உள்ளே வந்து பரமேஸ்வரனுக்கு சலாம் போட்டு, மௌனமாக ஒரு

> "நான் பண்ணின தப்புக்கு ரெண்டு நாள் சாப்பாடு கிடையாதுன்னு என் மனைவி சொல்லிட்டா..."
>
> "அடடா...அப்புறம் என்ன ஆச்சு?"
>
> "ரெண்டு நாளாவது வாழ்க்கைல நிம்மதி கிடைச்சுதேன்னு ரொம்ப சந்தோஷமாயிடுச்சு!"
>
> - எம்.ஆர். மூர்த்தி

காகிதத்தைக் கொடுத்தார். அதில் 'அழகேசன்' என்று எழுதியிருந்தது.

"அய்யோ, இருக்கற தலைவலி போதாதா... இப்ப யாரையும் பார்க்க முடியாதுன்னு சொல்லிடுப்பா."

"இருங்க." மஞ்சரி இன்டர்காமில் ரிசப்ஷன் டெஸ்க்கை விளித்து, "அங்க அழகேசன்னு ஒருத்தர் காத்திருக்கார்..."

"மேல ஏறி வராருங்க."

"ஏன்யா அவரை விட்டே?"

"மேடமைத் தெரியும்னாருங்க."

"உன் தலை!" என்று சொல்லி முடிப்பதற்குள், அவன் தலை தெரிந்தது. "உள்ள வரலாமா? வந்துட்டேனில்லை... என் தலைக்கு என்ன? சார்தான்... ராகவேந்தரா, நைஸ் மீட்டிங் யூ சார், உங்க டாட்டரை."

மஞ்சரி "அழகி" என்று அதட்டி

"இவர் பரமேஸ்வரன்."

"நம்மப்பாவை மீட் பண்ணலாம்னு வந்தேன்."

"உனக்கென்ன பைத்தியமா? போய்டு போய்டு."

"எதுக்குத் துரத்தறே? லிஃப்ட்ல ஆயிரம் கேள்வி கேக்கறான். இது என்ன ஆபீசா? கோட்டையா?"



"அழகி, நான் சொல்றதை முதல்ல புரிஞ்சுக்க, மரமண்டை. எங்கப்பாவைச் சந்திக்க இது சந்தர்ப்பமே இல்லை."

"பின்ன எப்ப சந்திக்கிறது?"

"லேட்டர், மச் லேட்டர்."

"உன்னைப் பாக்காம இருக்க முடியலையே! போன தடவை பாத்தப்புறம் எனக்கு வயசாயிகிட்டே வருதே."

"சீரியஸா பேசக் கத்துக்க."

"என் சீரியஸ் பேச்சே இதுதானே."

இந்த உரையாடலை ஃபைல் பார்த்துக் கொண்டே பரமேஸ்வரன் கேட்டுக் கொண்டிருந்தார். அவர் முகம் இளகியிருந்தது. பார்த்த முதல் கணத்திலிருந்து அழகேசனை அவர் வெறுத்தார். மஞ்சரிக்காக வருத்தப்பட்டார். 'இப்படி ஒரு வெகுளியா!'

"வீட்டுக்கு வரட்டுமா?"

"அய்யோ, பலி விழும். போ முதல்ல."

"ஆயிரம் ரூபாதா போறேன்."

"எதுக்கு?"

"புஸ்தகம் வாங்கணும்."

"என்ன புஸ்தகம்?"

"கோல புஸ்தகம்! நான் வாங்கற புஸ்தகம் எல்லாம் உனக்குப் புரியாது. கிரெடிட் கார்டாவது கொடு"

அவள் தன் பையைப் பார்த்தாள். முப்பது ரூபாய்தான் இருந்தது. "இந்தா கிரெடிட் கார்டு."

"க்கும்" என்று கனைத்து "கார்டு கொடுக்க வேண்டாம்மா. கேஷியர்ட்ட சொல்றேன்" என்றார் பரமேஸ்வரன்.

அழகேசன் "போறதுக்கு முன்னாடி உங்க மூக்கு நுனியை ஒரு கடி கடிக்கலாமா?" என்றான்.

அவள் சங்கடமாக பரமேஸ்வரனைப் பார்த்தாள். "பை பை, பரமேச் மாமா. கல்யாணம் பத்தி மஞ்சரி பேசினாளா? முதலாளி காதில போட்டுடுங்கோ" என்றான். "வாங்க சொக்கலிங்கம்" என்று லிப்ட் ஆப்ரேட்டரை விசாரித்துக் கொண்டு சென்றான். பரமேஸ்வரனின் பார்வையை மஞ்சரி தவிர்த்தாள்.

"சொன்னேனா இல்லையா? அவனுக்குப் பணம்தாம்மா குறி. ரொம்ப எடம் கொடுத்து வச்சிருக்கே, நன்னாவே இல்லை."

"அய்யோ குழப்பாதிங்க, அவனை நீங்க உண்மையா சந்திச்சதே இல்லை."

பரமேஸ்வரன் கேஷியருக்கு போன் செய்து, "ரிசப்ஷன்ல அழகேசன்னு ஒரு பையன் காத்திருக்கான். பெட்டி கேஷ்லருந்து ஆயிரம் ரூபாய் எடுத்துக் கொடு, கிருஷ்ணசாமி" என்றார்.

அப்போது அவர் எதிரே நாகரத்தினம் உட்கார்ந்திருந்தார்.

ஆபீஸ் பாய் ராம்குமாரை விளித்து, "இந்தப் பணத்தை ரிசப்ஷன்ல அழகேசன்னு ஒரு பையன் காத்திருக்கானாம் கொடுத்துரு."

மாமனார் திரும்பி வந்த செய்தி நாகரத்தினத்துக்கு தெரிந்த உடனே ஃபிளைட் பிடித்து, சென்னைக்கு வந்துவிட்டார் மாமனாரைப் பார்ப்பதற்கு முன் கேஷியரிடம் ஒரு லட்சம் பணம் வாங்க வந்திருந்தார்.

"கிருஷ்ணசாமி, கீழதான் போறேன். எங்கிட்ட கொடுங்க, பேர் என்ன சொன்னீங்க?"

(தொடரும்)

தெம்புக்குப் படிங்க – 19



எப்படிப் போறது..?

அவர் ஒரு கல்லூரி மாணவர்.

ஒருநாள் செய்தித்தாளைப் புரட்டிக் கொண்டு இருந்தார். அப்போது அந்த விளம்பரம் கண்ணில்பட்டது.

பத்திரிகையில் மட்டுமல்ல... பல இடங்களிலும் சுவரொட்டிகள்... கல்லூரி வாசலில்கூட அந்த விளம்பரம் ஒட்டப்பட்டிருந்தது.

'பாராசூட் படைப்பிரிவில் சேருங்கள் இளைஞர்களே!' என்று அந்த விளம்பரம் மூலமாக இராணுவம் அழைப்பு விடுத்திருந்தது.

கல்லூரி வாசலில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டியில் இப்படி எழுதப்பட்டிருந்தது—

"மாணவர்களே! தயங்காமல் வாருங்கள்! பாராசூட் படைப்பிரிவில் சேருங்கள்!

இந்தச் சாலையைக் கடப்பதைவிட அது ஒன்றும் ஆபத்தான காரியம் அல்ல!

இந்தச் சாலையின் குறுக்கே நடந்து செல்வதுதான் பாராசூட்டுடன் குதிப்பதைவிட ஆபத்தான செயல்!

ஆகவே இளைஞர்களே! உடனே பயப்படாமல் நமது இராணுவத்தின் பாராசூட் படைப்பிரிவில் சேருங்கள்!"

அந்தக் கல்லூரி மாணவர் தினமும் கல்லூரிக்கு வருவார். வரும்போதெல்லாம் வாசலில் கொஞ்ச நேரம் தயங்கி நிற்பார். அந்தச் சுவரொட்டியைப் பார்ப்பார். கொஞ்ச நேரம் அதைப் பார்த்துக் கொண்டே இருப்பார். அப்புறம் யோசிப்பார். அதன் பிறகு போய் விடுவார்.

சில நாள்கள் தொடர்ந்து இப்படியே நடந்தது.

இதை அந்தக் கல்லூரியின் பேராசிரியர் ஒருவர் கவனித்தார்.

'இந்த இளைஞன் ஏன் இப்படி நிற்கிறான்? தினமும் அப்படி என்னதான் யோசிக்கிறான்?' அவருக்குச் சந்தேகம். உடனே அந்த மாணவரைக் கூப்பிட்டார்.

"தம்பி... இங்கே வா!"

அவர் வந்தார்.

"ஏம்ப்பா! தினமும் அதைப் பார்க்கிறாய்... அப்புறம் பேசாமல் போய் விடுகிறாய்...! விருப்பமிருந்தால் பாராசூட் படையில் சேர்வதுதானே...?"

அந்த இளைஞர் தயங்கியபடியே சொன்னார்...

"சார்! சேரலாம் என்றுதான் நினைக்கிறேன்... ஆனால் வீரர்களைத் தேர்வு செய்யும் அலுவலகம் இந்தச் சாலையின் எதிர்ப்புறத்தில் இருக்கிறது... சாலையைக் கடந்து எதிர்ப்புறம் செல்ல பயமாயிருக்கிறது!"

நண்பர்களே!

"தண்ணீரைக் கண்டால் எனக்குப் பயம்... ஆனால் நீச்சல் கற்றுக்கொள்ள ஆசை!" என்று யாராவது சொன்னால் அவரைப் பற்றி என்ன நினைப்பீர்கள்?

வாழ்க்கையில் நமக்கு எத்தனையோ பேர் துணையாக வரலாம். என்றாலும், முக்கியமான துணை ஒன்று உண்டு.

அதன் பெயர்... துணிச்சல்!

தென்கச்சி சுவாமிநாதன்

எதுவரை இருக்கும் வெண்மை
எதுவரை உஜாலா இருக்குமோ அதுவரை!





INSTA-WHITENING SYSTEM™

தண்ணீரிலுள்ள கடினமான கறை ஏற்படுத்தும் துகள்கள் காரணமாக துணிகளின் வெண்மை பழுப்பாகி விடுகிறது. உஜாலாவிலுள்ள இன்ஸ்டா-வைட்னிங் சிஸ்டம்™ மட்டுமே ஆண்டுக்கணக்கில் வெண்மை தொடர்ந்திருக்கச் செய்யும்.

வெண்மை தொடர்ந்து இருக்கும், ஆண்டாண்டுகளாய்

A product of Jyothy Laboratories Ltd.

Situations/JLL/UJALA/41/2004 Tam


ஸ்ரீமதி பவானி, பி.ஏ., பி.எல். என்றைய தினம் ஹைகோர்ட்டில் அட்வகேட்டாகப் பதிவு செய்யப்பட்டாளோ, அன்று முதல் ஹைகோர்ட்டு கட்டடமே ஒரு புதிய களையுடன் விளங்கிற்று. பிரம்மஹத்தி கூத்தாடிய வேலையற்ற வக்கீல்களின் முகத்திலே கூட ஒரு புதிய தேஜஸ் பிறந்தது. ஊமைக்கோட்டான் போல் இருந்த ஜட்ஜுகள் எல்லாம், கொஞ்சம் கலகலப்பாய்ப் பேச ஆரம்பித்தார்கள். தஸ்தாவேஜிக் கட்டுகளைப் பார்த்துப் பார்த்துப் பூத்துப்போன கோர்ட் குமாஸ்தாக்களின் கண்கள், ஒரு புதிய பிரகாசம் பெற்று அங்குமிங்கும் நோக்கி விழித்தன. அந்தக் கண்கள், குறுக்கே நெடுக்கே எங்கேயாவது ஸ்ரீமதி பவானி போகிறாளா என்றுதான் அப்படித் திருதிருவென்று விழித்தன என்று சொல்ல வேண்டியதில்லை.

இதற்கு முன்னாலும், ஐந்தாறு ஸ்திரீகள் ஹைகோர்ட்டில் அட்வகேட்டுகளாகப் பதிவானதுண்டு. அவர்களால் எல்லாம் இத்தகைய கிளர்ச்சி ஏற்பட்டதில்லை. அவர்கள் தங்களுடைய மேனியின் சௌந்தரியத்தையும், முகவசீகரத்தையும் பரீட்சையென்னும் பலிபீடத்தில் பலி கொடுத்துவிட்டு வந்தவர்கள். அவர்களில் சிலரைப் பார்க்கும்போது, சோளக் கொல்லைகளிலே காக்காய்களைப் பயமுறுத்துவதற்காக வைத்திருப்பார்களே, அந்த உருவங்கள் ஞாபகத்துக்கு வரும். ஆனால், பவானியோ இந்தச் சம்பிரதாயத்துக்கு முற்றும் மாறுபட்டவளாயிருந்தாள். அவள் ஹைகோர்ட் தாழ்வாரத்தில் நடந்து வருவதைப் பார்த்தால், யாரோ, தேவ கன்னிகை, தேவேந்திரனுடைய சபைக்குப் போக வேண்டியவள், வழி தவறி இங்கே வந்துவிட்டதாகவே தோன்றும். அஸ்தமன சூரியனது பொன்னிறக் கிரணங்களின் நிறம் அவளுடைய மேனி நிறம். தேவலோகச் சிற்பியினால் ஆக்கப்பட்ட ஸ்வர்ண விக்கிரகம் உயிர் பெற்று நடமாடுகிறதோ என்று ஒரு நிமிஷம் பிரமித்துப் போவார்கள், பவானியைத் திடீரென்று சந்திப்பவர்கள். அவள் தன்னுடைய முத்தான அழகிய பற்கள் சிறிது தோன்றும்படி புன்னகை புரிந்தால், அந்த இருளடைந்த ஹைகோர்ட்டு அறைகளில் பளிச்சென்று நிலவு வீசுவதுபோல் இருக்கும். அவளுடைய கண்களில் கூரிய வாள்கள் ஒளி வீசும். வயிர நெஞ்சு பெற்ற பெரிய பெரிய ஸீனியர் வக்கீல்களின் இருதயங்களைக்கூட, அந்த வாள் வீச்சு பிளந்து விடும்.



ஸ்ரீமதி பவானி கோர்ட்டுக்கு வர ஆரம்பித்ததிலிருந்து, பிரபல அட்வகேட்டுகளின் நடை உடை பாவனைகளில் எல்லாம் வித்தியாசம் ஏற்படத் தொடங்கியது. அட்வகேட் நீலமேக மய்யங்கார் தம்முடைய தலைப்பாகையின் சரிகைக் கரையை அரை அங்குலத்திலிருந்து முக்கால் அங்குலமாக மாற்றத் தீர்மானித்து விட்டார். வக்கீல் மதனகோபால சாஸ்திரி, இதற்கு முன்னால் அரை மணி நேரம் நிலைக் கண்ணாடியின் முன் நின்று நெற்றியில் கடுகளவு சாந்துப் பொட்டு இட்டுக் கொள்வது வழக்கம். இப்போது அவர் முக்கால் மணி நேரம் செலவழித்து.

புன்னகையும் புது



அரையேயரைக்கால் கடுகளவு சாந்துப் பொட்டு வைத்துக் கொண்டு வரத் தொடங்கினார்.

மொத்தத்தில் ஹைகோர்ட் வக்கீல்களில் பாதிப் பேர் பவானியினால் அரைப் பைத்தியமாயினார்கள்; பாக்கிப் பாதிப் பேரோ, முழுப் பைத்தியமாயினர். அவள் கோர்ட்டுக்கு வரும் வரையில் வக்கீல்கள் அநேகர் கோர்ட் தாழ்வாரத்தில், ஏதோ பிரமாதமான காரியம் உள்ளவர்களைப் போல் குறுக்கும் நெடுக்கும் போய்க் கொண்டிருப்பார்கள். அவள் வந்துவிட்ட பிறகோ, அவள் எந்த கோர்ட்டில் ஆஜராகிறாளோ, அங்கே போய்க் கூட்டம் போடுவார்கள்.

- 'பவானி பி.ஏ.பி.எல்.' நெடுங்கதையிலிருந்து....

நிலவும்!


அந்தநாள் ஞாபகம் 19

நான் பழனிச்சாமியைப் பலவாறாகத் தேற்றினேன்.

"உங்களுக்கு அடுத்து ஒரு படத்தில் நல்ல ரோல் நிச்சயம் தருகிறோம். கவலைப்படாதீங்க."

"இருந்தாலும் முதல் படத்தில் இப்படி ஏமாற்றமாயிடுச்சே."

அந்தப் பழனிச்சாமிதான் இன்று தமிழ்த் திரையுலகில் தனக்



கென ஓர் இடத்தைப் பெற்று 'தமிழ் சினிமா உலகின் மார்க்கண்டேயன்' என்ற செல்லப் பெயரைப் பெற்றுத் திகழும் சிவகுமார்.

பழனிச்சாமி என்ற அவரது பெயரை சிவகுமார் என்று மாற்றியதில் எனக்கும் பங்குண்டு. பழனிச்சாமி என்ற அவரது இயற்பெயர் முருகனைக் குறிக்கும். எங்கள் குலதெய்வமும் முருகன்தான். முருகன் பெயரை அடிப்படையாகக் கொண்ட அதேசமயம், சினிமாவுக்காகக் கொஞ்சம் மாடர்ன் பெயராக மாற்ற வேண்டும் என்று நானும் திருலோக்கும் விரும்பினோம். அப்பச்சி எங்களுக்கு முருகன் பெயரைத்தான் முருகன், குமரன், சரவணன், பாலசுப்பிரமணியன் என்று வைத்தார். அதேபோல எங்கள் சகோதரி மீனா வீரப்பனின் மகன் பெயர் சிவகுமார். அந்தப் பெயர் எனக்கு மாடர்னாகப் பட்டதால், அதையே பழனிச்சாமியின் திரையுலகப் பெயராகச் சூட்டினோம்.

இசையமைப்பாளர் கேவி மகாதேவன் எங்களுக்கு இசையமைத்த முதல் படம் 'காக்கும் கரங்கள்.'

திரையுலக நினைவுகள்

ஏவி.எம். சரவணன்




ஜெயலலிதாவின் ஆர்வம்!

அவர் பொதுவாக ட்யூனுக்குப் பாட்டெழுதி வாங்குவதைவிட, பாட்டை முதலில் எழுதி வாங்கிக்கொண்டு விடுவார். பிறகு நம்மையெல்லாம் அறையிலிருந்து போகச் சொல்லி விடுவார். ஒவ்வொரு பாட்டுக்கும் இரண்டு, மூன்று ட்யூன்களைப் போட்டு விட்டு, நம்மை அழைத்து வாசித்துக் காட்டுவார். அது அவரது வழக்கம்.

ட்யூன் என்ற சதுரத்தைப் போட்டு விட்டு, அதற்குள் வளைய வர வேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லாததால் மகாதேவன் அவர்களுக்குப் பாட்டெழுதுவது என்றால், கவிஞர்களுக்கு - குறிப்பாக கண்ணதாசனுக்கு மிகவும் பிடிக்கும்.

'காக்கும் கரங்கள்' - எதிர்பார்த்த அளவு வெற்றி அடையவில்லை. எஸ்.எஸ்.ஆர் எனக்கு நல்ல நண்பர் தான். ஆனாலும் அந்தப் படத்தில் டாக்டர் ரோல் அவருக்குப் பொருந்தி வரவில்லை. பொருந்தி வராது என்ற எண்ணம் எனக்கு உள்ளுக்குள் இருந்துகொண்டே இருந்தது. அந்த எண்ணம் சரியே என்பது பின்னர் நிரூபணமாயிற்று.





• 'மேஜர் சந்திரகாந்த்' ஜெயலலிதா, நாகேஷ்



• 'காக்கும் கரங்கள்' சிவகுமார், ரேவதி

கே. பாலசந்தர் மீது அப்பச்சிக்கு எப்போதுமே ஒரு மதிப்பு உண்டு. அவர் திரையுலகில் காலடி வைப்பதற்கு முன்பாக, தமிழ் நாடக உலகில் புதிய யுக்திகளோடு, தரமான சமூக நாடகங்களை அரங்கேற்றி பரபரப்பாகப் பேசப்பட்ட நாட்களிலேயே அவரது நாடகங்களை அப்பச்சி கண்டு மகிழ்ந்திருக்கிறார். திரையில் முதன்முதலாக கே.பி

'நீர்க்குமிழி' படத்தை இயக்கி, அது வெளியானதும் அப்படத்தைப் பார்த்த அப்பச்சி அவரைப் பாராட்டி கடிதம் ஒன்றை எழுதினார். பாலசந்தர் அதை ஃபிரேம் போட்டு இன்றும் பாதுகாத்து வருகிறார்.

அது மட்டுமல்ல... முழுநேர கலைப் பணியில் ஈடுபட, அலுவலகத்தில் நீண்ட நாட்கள் தமக்கு விடுமுறை கிடைக்காது என்று தெரிந்துவிட்ட நிலையில், 'வேலையை விட்டு விடலாமா?' என்று கேபி யோசனை கேட்டது அப்பச்சியிடம் தான். பாலசந்தருக்குள் இருந்த திறமையான கலைஞனை அடையாளம் கண்டு கொண்டு, 'உங்கள் திறமையில் உங்களுக்கே சந்தேகமென்றால், இதோ இப்போதே மூன்று படங்களுக்கு, மூன்றாண்டுகளுக்கு உங்களுடன் ஒப்பந்தம் போட நான் தயாராக இருக்கிறேன்' என்று அப்பச்சி தந்த ஊக்கமும், நம்பிக்கையும்தான், கேபி தமது அலுவலகப் பணியை ராஜினாமா செய்ய வைத்தன.

கேபியை வைத்து ஒரு படம் பண்ண வேண்டும் என்ற பேராவல் அப்பச்சிக்குள் இருந்தது.

'மேஜர் சந்திரகாந்த்' மூலம் அந்த ஆவல் நிறைவேறியது. படத்தை அவர் எடுத்திருந்த விதம், மாருதிராவின் ஒளிப்பதிவு எல்லாம் சேர்ந்து, படத்தை ஒரு வித்தியாசமான படமாக ஆக்கின. கேபி. அதில் வெளிப்படுத்தியிருந்த சில அசாதாரணமான டைரக்ஷன் யுக்திகள் பெரிதாகப் பேசப்பட்டன.

"நாம எடுத்த 'அந்த நாள்' படத்துக்குப் பிறகு எனக்கு ரொம்பவும் பிடிச்ச படம் இது" என்று குறிப்பிட்டு அப்பச்சி மகிழ்ச்சியடைந்த படம் 'மேஜர் சந்திரகாந்த்.' அவர் அப்படிக் குறிப்பிட்டது பற்றி பாலசந்தருக்கு ரொம்பப் பெருமை.

சிவாஜி - ஜெயலலிதா ஜோடி சேர்ந்து நடித்த படம் 'எங்க மாமா.' இந்தப் படத்தின் படப்பிடிப்பின்போது, ஜெயலலிதா தமது போர்ஷன் ஷூட்டிங் முடிந்ததும், கையில் ஏதாவது ஒரு ஆங்கிலப் புத்தகத்தை வைத்துப் படித்துக் கொண்டிருப்பார். யாருடனும் அனாவசியமாகப் பேசி நான் பார்த்ததில்லை. ஊர் வம்பு, அக்கப்போர் என்பதெல்லாம் அவரது அகராதியிலேயே கிடையாது. யாராவது போய் 'விஷ்' பண்ணினால் அவரும் 'விஷ்' பண்ணுவார்.

திருலோகசந்தரும் ஒரு புத்தகப் புழு. ஆகவே அவருக்கும், ஜெயலலிதாவுக்கும் இந்த 'ரீடிங்' விஷயத்தில் ஒத்துப் போனது.

தம்மிடமிருக்கும் புத்தகங்களைப் பற்றி அவர் ஜெயலலிதாவிடம் விளக்குவார். ஜெயலலிதாவும் அப்படியே. அறிவுபூர்வமான விஷயங்கள் பற்றி இருவரும் விவாதிப்பார்கள். உலகத் தலைவர்கள் பற்றிய நூல்களை ஜெயலலிதா ஆர்வமுடன் படித்து நான் பார்த்திருக்கிறேன்.

தமிழ்த் திரையுலகைச் சார்ந்தவர்களில் - குறிப்பாக நடிகைகளில் செல்வி ஜெயலலிதா அளவுக்குப் படிக்கும் பழக்கம் தீவிரமாக உள்ளவர்கள், அந்தக் காலகட்டத்தில் யாரேனும் இருந்தார்களா என்பது எனக்குச் சந்தேகமே.

அரசியல் தொடர்பான புத்தகங்களில் அவர் ஆர்வம் காட்டியதுண்டு.

ஆனால், அவர் பின்னால் மாநில முதலமைச்சராக வருவாரென, என்னால் அப்போது கணிக்க முடியவில்லை.

'குழந்தையும் தெய்வமும்' படத் தயாரிப்பின் பின்னணியில் பல சுவையான தகவல்கள் இருக்கின்றன.


இந்தக் கதை 'பேரன்ட் ட்ராப்' என்ற ஆங்கிலக் கதையின் அப்பட்டமான தழுவல் என்று நான் சொல்ல மாட்டேன். ஆனால், அந்தக் கதையைத் தழுவி எழுதப்பட்டது. 'பேரன்ட் ட்ராப்' ஆங்கிலப் படத்தை என் சகோதரர் குமரன் பார்த்துவிட்டு, 'நல்ல படம். நாம பண்ணலாம்' என்று யோசனை தெரிவித்தார். எங்

• 'குழந்தையும் தெய்வமும்' ஜமுனா, குட்டி பத்மினி



களையும் படம் பார்க்க வேண்டும் என்றார். நாங்கள் அந்தப் படத்தைப் பார்த்தோம். ஆனால் எங்களுக்கு அந்தக் கதையில் உடன்பாடு இல்லை. ஏனெனில் அந்தக் காலகட்டத்தில் விவாகரத்து சித்தாந்தத்தை தமிழ் ரசிகர்கள் அவ்வளவு எளிதாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று நாங்கள் கருதினோம். ஆனாலும் இந்தப் படத்தை எடுக்க வேண்டும் என்பதில் குமரன் மிகவும் உறுதியாக இருந்தார்.

ஜாவர் சீதாராமனைப் படம் பார்க்கச் சொல்லி 'இதை இன்டியனைஸ்' பண்ண முடியுமா என்று முயன்று பார்க்கச் சொன்னோம். எந்தக் கதையையும் இந்தியச் சமுதாயச் சூழலுக்கேற்ப அற்புதமாகத் திரைக்கதை அமைத்துத் தருவதில் ஜாவருக்கு இணையானவர்கள் யாருமில்லை என்பது என் கருத்து.



■ 'மேஜர் சந்திரகாந்த்' நாகேஷ், கே.பி...

ஜாவர் அந்தக் கதையை நமது சமுதாயச் சூழலுக்கு ஏற்றபடி மிக அழகாக மாற்றியமைத்தார்.

ஆங்கிலப் படத்தில் விவாகரத்து பெறும் காட்சி, மிகவும் முரட்டுத்தனமாக இருந்தது போல் பட்டது. அதை மிக மென்மையாக ஜாவர் மாற்றித் தந்தார். கிளைமாக்ஸ் காட்சியை சீகம்பட்டி ராஜகோபால் என்பவர் எங்களுக்கு எழுதிக் கொடுத்தார்.

கிளைமாக்ஸ் காட்சியை பழனியில் எடுத்தோம். குட்டி பத்மினி அந்தப் படத்தில் மிகச் சிறப்பாக நடித்து, தாய்மார்களின் ஏகோபித்த பாராட்டுகளை அள்ளிக் கொண்டார்.

'கோழி ஒரு கூட்டிலே' என்ற பாடல் அந்தப் படத்தில் மிகவும் பிரபலமாகிப் புகழ் பெற்றது.

'குழந்தையும் தெய்வமும்' படத்தை 'லேத்த மனசுலு' (பிஞ்சு மனம்) என்ற பெயரில் தெலுங்கில் எடுத்தோம். கிளைமாக்ஸ் காட்சியைத் திருப்பதியில் படமாக்கினோம்.

'லேத்த மனசுலு' படத்தில் ஒரு குறிப்பிடத்தக்க அம்சம், படம் முழுவதும் கறுப்பு வெள்ளையில். கிளைமாக்ஸ் மட்டும் கலரில்.

'குழந்தையும் தெய்வமும்' படத்தை ஹிந்தியில் எடுக்கும் எண்ணம் எங்களுக்கு முதலில் இல்லை.

நான் வேறு ஒரு பட விஷயமாக பம்பாய்க்குப் போயிருந்தேன். அப்போது பேரன்ட் ட்ராப் கதையைத் தழுவி யாரோ 'வாபஸ்' என்ற பெயரில் படம் எடுத்துக் கொண்டிருப்பதாக ஒரு தகவல் என் காதுகளில் விழுந்தது.

நானும் இதை ஒரு தகவலாகவே என் தந்தையிடம் தொலைபேசியில் சொன்னேன்.

"நீ உடனே சென்னை திரும்ப வேண்டாம். நாம உடனே அந்தப் படத்தை ஹிந்தியில் வேகமாக எடுத்து 'வாபஸ்' படத்துக்கு முன்னதாக ரிலீஸ் செய்ய வேண்டும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு வா" என்றார்.

நான் அதன்படியே பிஸ்வஜித், மாலா சின்ஹா போன்ற கலைஞர்களை ஒப்பந்தம் செய்துவிட்டு, எல்லா ஏற்பாடுகளையும் முடித்தேன்.

படம் வேகமாக வளர்ந்தது.

'தோ கல்யாண்' என்ற பெயரில் நாங்கள் ஹிந்தி 'குழந்தையும் தெய்வமும்' படத்தை, 1968ம் வருடம் மார்ச் மாதம் முதல் தேதி வெளியிட்டோம்.

படம் சூடு பிடித்தது. நல்ல ரெஸ்பான்ஸ். ஆனால் அந்த மகிழ்ச்சி எங்களுக்கு நீடிக்கவில்லை.

(தொடரும்)

“விஜயசாந்தி கொடுத்த

'வல்லமை தாராயோ
-இந்த மாநிலம் பயனுற
வாழ்வதற்கே'
- பாரதியார்

பாப் வெட்டிக்கொண்டு விண்கலங்களில் கல்பனா சாவ்லாக்கள் பயணிக்கும் காலமிது. தமிழ்நாடு காவல் துறை மட்டும் இதற்கு விதிவிலக்காகி விடுமா என்ன?

மகளிர் காவல் நிலையங்களையும், காவல் துறையையும் முதல்வர் ஜெயலலிதா முடுக்கிவிட்ட பிறகு கண்கூடாக வியத்தகு மாற்றங்கள். பேட்டை ரௌடிகளின் சட்டைக் காலரைப் பிடித்து 'பளார் பளார்' என வசவுகளோடு அறை கொடுக்கும் பெண் காவலர்களின் தைரியத்தை நேரிலும் செய்தித் தாள்களிலும் கண்ட பிறகு, அதே முறுக்கோடு இன்று இளம் பெண்கள் வீரம்மிகுந்த, ஓய்வில்லா பெண் காவலர் பணியில் சேர்வதற்கு, போட்டா போட்டி போடுகின்றனர். மாதரின் எழுச்சிக்காக பல கவிதைகள் புனைந்து கனவில் அதைக் கண்டுகளித்த முன்னோர்களின் ஆத்மாக்கள், ஆனந்தக் கண்ணீர் விடும் இதனைக் கண்டால்.

சென்னை செயின்ட் தாமஸ் மவுண்ட் எஸ்.பி. அலுவலகம். இளம் பெண்கள் மாநாடு போல், வந்து குவிந்திருந்தார்கள் (தனியாகவே) அத்தனை ஜான்சி ராணிகளும். கடினமான காவல் துறை பணிக்குத் தகுதியானவர்கள்தாமா என்று பரிசோதிக்க அனைவருக்கும் 400மீ ஓட்டம், லாங்க் ஜம்ப் என்று போட்டிகள் வைத்து தேர்வுகள் நடந்து கொண்டிருந்தன.

ஓடி முடித்த களைப்பில், வியர்வை சொட்டச் சொட்ட மரத்தடியில் அமர்ந்து ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த சசிரேகாவின் முன் ஒரு சல்யூட் வைத்தோம். "ஹலோ, இப்பத்தான் டெஸ்ட்டுக்கே வந்திருக்கேன்" என்று இயல்பாய் வெட்கப்பட்டவர், பி.ஏ. கார்ப்பரேட் செக்ரட்டரிஷிப் முடித்து, சென்னையிலுள்ள பிரபல கால் சென்டரில் பணிபுரிந்து கொண்டிருக்கிறார். "நான் நல்ல உயரம், ஐந்து அடி, எட்டு அங்குலம். ஸ்கூல்ல படிக்கும்போது என்.சி.சி.யில் இருந்ததால, தானா போலீஸ் துறை மேல காதல் வந்துருச்சு. என் உயரத்தைப் பார்த்து நிறையப் பேர் போலீஸ்



• செலக்ட் ஆவோமா?!



• ரெடி... ஒன், டூ, த்ரீ!

தைரியம்!”





• **போட்டிக்குத் தயார்!**

வேலையை ரெகமண்ட் பண்ணினாங்க. உயர் அதிகாரிகளுக்குக் கட்டுப்பட்டு நடந்தாலும் என்னோட தனித்துவத்தை நிச்சயம் நிரூபிப்பேன் பாருங்க'' என்று கட்டை விரல் உயர்த்தினார்.

அருகிலிருந்த ஆஷா, பி.ஏ. எகனாமிக்ஸ் கிராஜுவேட். ''மற்ற எல்லா வேலைகளையும் விட போலீஸ் ரொம்பப் பாதுகாப்பான வேலை. போலீஸ்னாலே சமூகத்துல 'டக்'னு மரியாதை கிடைக்கும். அத்தனை பேர் முன்னாடி கம்பீரமா நிற்கலாம். டிகிரி படிக்காம, சரியான



• நம்பிக்கையுடன்...

வேலையுமில்லாம இருக்குற பெண்களுக்கு, போலீஸ் வேலைதான் சரியான சாய்ஸ்" என்றார் மிரட்டும் விழிகளோடு.

தேர்வுக்காக வந்திருந்த பலரிடமும் பேச்சுக் கொடுத்ததில், அவர்களுக்கு கிரியா ஊக்கிகளாக இருந்தது மூன்று விஷயங்கள். 1. கிரண்பேடி மாதிரியான தைரியமான பெண்கள் ஊட்டிய உற்சாகம். 2. குடும்பத்தில், அக்கம் பக்கத்து வீடுகளில் எப்போதும் கம்பீரமாகத் தோற்றமளித்த போலீஸார் 3. நடிகை விஜயசாந்தி!

+2 முடித்து திருவேற்காட்டிலிருந்து வந்திருந்த அமலேஸ்வரிக்கு, ரிசல்ட் வந்த தினத்தன்றே திருமணம் ஆகியிருக்கிறது. "நடிகை விஜயசாந்தியோட படங்களைப் பார்த்துதான் எனக்கு தைரியம் வந்துச்சு. அதே மாதிரி என் கணவர் ரொம்ப ஊக்கம் கொடுத்தாரு. அவர் சொல்லித்தான் நான் செலக்ஷனுக்கே வந்தேன். இவ பொம்பளதானேன்னு யாரும் ஏளனமா நினைக்கக் கூடாது. பொறந்தா ஏதாவது சாதிக்கணும், நம்ம கிரண்பேடி மாதிரி" என்ற பொழுது, அவர் வார்த்தைகளில் பொங்கியது நம்பிக்கை.


இவரைப் போலவே பலரும் திருமணம் முடித்து, குழந்தைகள் பெற்ற பின்பும் செலக்ஷனுக்கு வந்திருந்தனர் (ஆர்வத்துடன் வந்திருந்த கர்ப்பிணிப் பெண்கள், அறிவுறுத்தலுக்குப் பிறகு திரும்ப அனுப்பப்பட்டனர்). பல்லாவரத்தைச் சேர்ந்த கோமதிக்கு மூன்று குழந்தைகள். "தயவு செஞ்சு நான் சொல்றதை அப்படியே போட்றீங்களா?" என்று மனம் உடைந்திருந்தாலும், வேகத்தோடு பேசினார். "என்னுடையது அரசியல் சார்ந்த குடும்பம்ங்கிறதால, எனக்கு தைரியம் நிறைய உண்டு. ஆனா கல்யாணம் என்னை அப்படியே மாத்திப் போட்டுடுச்சு. ஏனோ, நிறைய கொடுமை செஞ்சாங்க. ஆனாலும் ரத்தத்துல ஓடுதில்லையா தைரியம்... ஒரு நாள் ஆவேசமா போலீஸ்கிட்ட போய், என் வீட்டுக்காரர் மேல கேஸ் போட்டேன். அப்போதான் 'ஏம்மா நீ படிச்சிருக்கே, ஏன் போலீஸாகக் கூடாது'ன்னு போலீஸ் ஸ்டேஷன்ல அறிவுறுத்தின பிறகுதான், 'அட, போலீஸானா எந்தக் கஷ்டத்தையும் தைரியமா சந்திக்கலாமே'ன்னு இங்க வந்தேன்" என்றவர், சிறிது மௌனத்திற்குப் பிறகு, "திடீர்னு ஒரு நாள் என் மாமியார் வீட்ல ஒரு துயரச் சம்பவம் நடந்துச்சு. அப்புறம்தான் ஏதோ மன உறுத்தல்ல என் மாமியார் என்மேல அன்பு காண்பிக்க, நான் அவங்களோட மீண்டும் இணைஞ்சிட்டேன். ஆயிரந்தான் இருந்தாலும், கடைசி வரைக்கும் என்கூட இருக்கறவங்க அவங்கதானே? போலீஸ்ல சேர்ந்த பிறகு என் லட்சியமே, எந்தப் பொண்ணும் கஷ்டம் அனுபவிக்கக் கூடாதுங்கறதுதான்..." என்றார். உள்காயங்களால் மனம் ரணமாகும் போது கோமதி, இந்தப் பாட்டு வரிகளைத்தான் காதில் கேட்டு மன அமைதி கொள்வாராம்...

'ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறதே...
வாழ்வென்றால் போராடும் போர்க்களமே
ஒவ்வொரு விடியலுமே சொல்கிறதே...
இரவானால் பகலொன்று வந்திடுமே.'

- செந்தில்

படங்கள் : ஸ்ரீஹரி

செய்தித்தொகை



• என்.சி. ஸ்ரீதரன்



• மெர்வின்



• எம்.எஸ். உதயமூர்த்தி

திருமூலர் வழியில்...

புகழ் பெற்ற சுயமுன்னேற்றக் கட்டுரையாளரான எம்.எஸ். உதயமூர்த்தி, சென்னை வானொலியில் ஒரு மாதம் தொடர்ந்து நாள்தோறும் 'வாழ்க்கை வளம் பெற' என்ற தலைப்பில் ஐந்தைந்து நிமிடங்கள் பேசினார். அந்தப் பேச்செல்லாம் தொகுக்கப்பட்டு விரைவில் புத்தகமாக வரப் போகிறது. அது தவிர, தற்போது 'தன்னை அறியும் அறிவு' என்ற தலைப்பில் ஒரு நூல் எழுதி வருகிறார். திருமூலரின் சிந்தனை உள்படப் பல்வேறு கருத்தோட்டங்களை ஒப்புநோக்கி எழுதப்படும் மன ஆராய்ச்சி நூல் இது. இரு நூல்களையும் வெளியிடவிருப்பது, வழக்கம் போலவே அவரது நூல்களைத் தொடர்ந்து வெளியிடும் வானதி பதிப்பகம்.

தன்னாளுமைப் பயிலரங்கு...

கல்கி, துக்ளக் இதழ்களில் சுயமுன்னேற்றக் கட்டுரைகள் எழுதிப் புகழ் பெற்றவர் திருவள்ளூர் என்.சி. ஸ்ரீதரன், தன்னாளுமைப் பயிற்சி முகாம்கள் நடத்தும் இவர் ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளுக்குச் சென்று தன்னாளுமைக் கல்வி கற்றவர். அடிப்படையில் வழக்கறிஞர். கல்வியாளர். 'முயற்சி செய்தால் யாரும் எந்தச் சாதனையும் செய்யலாம்' என்பதை கின்னஸ் உதாரணங்களுடன் விடியோ க்ளிப்பிங் சகிதம் விளக்குவதே இவரது பயிலரங்கின் சிறப்பு. நேர நிர்வாகம் உள்படப் பல தலைப்புகளில் இவர் எழுதிய நூல்களை இவரே பதிப்பிக்கிறார். 'உங்கள் குழந்தையும் ஐன்ஸ்டீன் ஆகலாம்.' 'கனவு மெய்ப்பட வேண்டும்' ஆகிய இவரது புதிய புத்தகங்கள் விரைவில் வெளியாகவுள்ளன.

வாழ்வியல் பயிற்சி முகாம்...

வாழ்வியல் துறை எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர் மெர்வின். கூடவே டால்ஸ்டாய், ஜி.டி. நாயுடு, தாமஸ் ஆல்வா எடிசன் எனப் பலரது வாழ்க்கை வரலாறுகளையும் எழுதியுள்ளார். ஐம்பதுக்கும் மேலான நூல்கள் தமிழுக்கு இவரது பங்களிப்பு. பாரத வங்கி விருது, தமிழ்நாடு அரசு பரிசு எனப் பல பெருமைகள் பெற்றவர். 'உங்களால் வெற்றி பெற முடியும்!' (இது இவரது நூல் ஒன்றின் தலைப்பு) என்று தீர்மானமாகச் சொல்கிறார். கடந்த பத்தாண்டுகளாக வாழ்வியல் பயற்சி முகாம்கள் நடத்துகிறார். ஏராளமான இளைஞர்கள் இவரிடம் நேரடிப் பயிற்சி பெற்று வாழ்க்கையில் ஜெயித்து வருகிறார்கள்.

- திருப்பூர் கிருஷ்ணன்

‘கண்ணைக் கட்டி, காட்டில் விட்டாற் போலிருக்கிறது’ என்று சொல்வார்கள் இல்லையா?

சுகந்தாவுக்கு அதன் அர்த்தம் இப்பொழுதுதான் புரிந்தது.

“என்னது... நாம் எங்கே போறோம்? யாரிவன்... அய்யோ... பகவானே, இது என்ன சோதனை... தப்புப் பண்ணிட்டேனா...”

9



“இது... நம்ம பிரியாவோட கார் இல்லையா?”

“பின்னே... இவன் என்ன சொன்னான்... ‘ப்ரியா கிஷோர்’னு சொன்னாப்பல இருந்ததே... வாயில கூழாங்கல்லைப் போட்டுண்டுப் பேசறாப்பல... என்னமோ ‘வழவழ கொழ கொழ’ன்னான்... நம்பி, கார்லே ஏறிட்டேன்...”

“கார் கதவைத் திறந்துண்டு வெளில குதிச்சுடலாமா... எப்படி... கதவைக் கூட இவன்தான் திறக்கணும் போல இருக்கே... ‘பெல்ட்’டை வேறப் போட்டு, ‘ஸீட்’டோட கட்டிப் போட்டுட்டானே... கடங்காரன்...!”

சத்தியமாய் அவளுக்கு என்ன நடந்தது என்றே புரியவில்லை. ‘டலாஸ்’ நகரத்தின், விமான நிலைய வாசலில், தன்னை நிற்க வைத்துவிட்டு, காரை எடுத்து வருவதாகச் சொல்லி ப்ரியம்வதா போனது வரை, எல்லாமே ஒழுங்காகத்தானே நடந்தது?

வெளியே மானாவாரியாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்களையும், இடிசல், நெரிசல் இல்லாமல் ஒவ்வொரு காராய் வந்து போகும் அழகையும், அருகில் வந்ததுமே, தானாகவே ‘ஜீ பூம்பா-திறந்திடு ஸீஸே’ ஸ்டைலில் திறக்கும் கண்ணாடிக் கதவுகளையும், செக்கச் செவேலென்று வெள்ளை

கலகல தொடர்

அனுராதா ரமணன்

வெளேர் என்று தன்னைக் கடந்து போகும் மனிதர்களையும் - மஞ்சு விரட்டுத் திடலுக்கு வழி தவறி வந்து விட்ட மான் குட்டி போல - மிரண்டு போய்ப் பார்த்துக்கொண்டிருந்தவளின் எதிரில் -

ஓசையின்றி வந்து நின்றது அந்தப் பெரிய கார்... அதன் டிரைவர் ஸீட்டிலிருந்து படு ஸ்டைலாக இறங்கிய அமெரிக்க இளைஞன், சுகந்தாவைப் பார்த்து, இடுப்பை வளைத்து, தலையைச் சாய்த்து, வலது கையை மடக்கி, பணிவுடன் வணங்கினான்.

"வெல்கம் மாம்.."

சுகந்தா, அவஸ்தையாய்ச் சிரித்தாள். இந்த விமானப் பயணத்தில் அவள் கற்றுக் கொண்டிருந்த ஒரேயொரு உருப்படியான விஷயம் - யாரைப் பார்த்தாலும் இப்படிச் சிரிப்பது ஒன்றுதான்...

அந்த டிரைவர் இன்னும் என்னவோ கூறினான். இவளுக்கு ஒழுங்கான ஆங்கிலமே புரியாது... இது எங்கே புரியப் போகிறது.

ஆனாலும், அப்படி தன்னை ஒரேயடியாய் தற்குறியாய் காட்டிக் கொள்ளவும் கௌரவம் இடம் கொடுக்கவில்லை.

'இவன் யாரோ... என்னமோ... நமக்கு இங்கிலீஷ் தெரியாதுங்கறதை இவன்கிட்ட எதுக்குக் காட்டிக்கணும்? ஆச்சு... இதோ இப்ப ப்ரியா வந்துடுவா...!'

அவளது நினைப்பைப் புரிந்து கொண்டாற் போல - அவன், 'ப்ரியா ஷோர் இஸ் தேர் ஒன்லி...' இப்படி ஏதோ சொல்லி, கார்கள் நிற்கும் பக்கம் கையைக் காட்டினான்.

சுகந்தாவினால் அவனது உயரத்துக்கு எம்பிப் பார்க்க முடியவில்லை.

இதற்குள் அவன், 'மளமள'வெனப் பெட்டிகளைத் தூக்கி, காரின் பின் பகுதியில் வைத்தான்.



இண்டியா

சுகந்தா காரில் ஏறிக் கொள்வதற்கு வசதியாகக் கார்க் கதவைத் திறந்து விட்டு, 'ப்ளீஸ்...' என்று பழுப்புப் பற்கள் தெரியச் சிரித்து, மறுபடியும் பனைமர உடம்பை வளைத்து, பணிந்தான்.

"ஓஹோ... இவன் டிரைவர் போல இருக்கு..."

"மாமனார், மாமியாரைத் தேடிட்டுப் போன பொண்ணு, காரை மட்டும் இங்கே அனுப்பியிருக்கா போல. ஆமா, அங்கேயும் இங்கேயுமா எத்தனை நடை நடப்பா..."

அதற்கு மேல் யோசிக்கவில்லை சுகந்தா. பிருதிவிராஜனின் குதிரையில் 'விசுக்'கென ஏறி அமர்ந்த சம்யுக்தை போல -

அவன் அவசரமாய் ஏற, அவன் முன்னை விடவும் பணிவாய், கார்

ஸீட் பெல்ட்டை எடுத்து, இவளது இடுப்பில் மாட்டிச் செருக...

அடுத்த நிமிஷமே காரில் பாய்ந்து ஏறியவன், மின்னல் வேகத்தில் காரைச் செலுத்தினான்...

ஏதோ... பக்கத்தில்தான் எங்கேயோ ப்ரியா இருக்கிறாள். அவளும், அவளது மாமியார், மாமனாரும் இதோ, இப்பொழுது ஏறிக்கொள்வார்கள் என்கிற நினைப்போடும்...

சம்பந்தி அம்மாளைப் பார்த்தால், கை குவிப்பதா அல்லது கை குலுக்குவதா என்கிற குழப்பத்தோடும்...

இத்தனைக்கும் நடுவில் பரமேஸ்வரனின் அசரீரிக் குரல் வேறு...

'இந்தா சுகந்தா... தலப்பாக்காரன் கை குலுக்க கைய நீட்டுவான்... நீ நாசுக்கா, முன்னாலேயே கையக் குவிச்சுடுடீ... இங்கே ஒரு ஆத்மா உன்னைப் பத்தியே கவலைப் பட்டுண்டு இருக்குங்கறதை மறந்துடாதே...!'

– இப்படிக் கேட்க, சுகந்தா மெல்லிய பயத்தோடும், கார் நிற்கப் போகிற தருணத்துக்காகக் காத்திருக்க...

ஆனால் -

கார், இது எதையுமே லட்சியம் செய்யாமல் பறந்தது...

இது என்ன... ஏர்போர்ட்டைத் தாண்டியாச்சு... இல்லே, ஏர்போர்ட்டுக்குள்ளேயே இத்தனாம் பெரிய ரோடா...

ஓரிடத்தில் காரின் வேகம் குறைய, டிரைவர் ஸீட்டில் இருந்தவன், தன் கையிலிருந்த 'கார் பாஸ்'ஸைக் காட்ட... அதை வாங்கிக் கொண்ட 'டோல் கேட்' மனிதன் தலையசைக்க... அவ்வளவுதான். மீண்டும் வேகமெடுத்தது கார்...

சுகந்தா தவித்தாள்...

முதலில், 'அமெரிக்கன் ஒருவன், நம் குழந்தைக்கு டிரைவராக இருக்கிறான்... பேஷ் பேஷ்...' என்கிற பெருமிதம் ஏற்பட்டது என்னவோ உண்மை.

ஆனால் இப்பொழுதோ...

'இது ஏதோ வில்லங்கமான விவகாரம்' என்பது புரியத் தொடங்கி விட்டது.

'இது ப்ரியாவோட கார் இல்லே...'

'இவன் வேற யாரோ?'

'ஒரு வேளை, இவனும், இதே ப்ளைட்டுல வந்த, என்னை மாதிரி ஒருத்திய அழைச்சிட்டுப் போக வந்திருப்பானோ...!'

'நான்தான் அதுன்னு இவனும் தப்பாப் புரிஞ்சிண்டு, அழைச்சிட்டுப் போறானோ...!'

'ஹே... ஏழுமலையானே... மகாபிரபு... சமயபுரத்தாளே... வீட்டுக்குப் போனதும் மஞ்சத்துணியில் ஒரு ரூபா காசை முடிஞ்சு வைக்கிறேன்... இந்தியாவுக்குப் போனதும் அவர்கிட்ட சொல்லி, ஒரு நடை வந்துடறேன்... காப்பாத்து...'

அவன் ஒரு முறை, இவளைத் திரும்பிப் பார்த்தான்... புன்னகை செய்தான்.

சுகந்தாவின் விழிகளில் நீர் தளும்பியது.

"டோண்ட் ஒர்ரீ... ஃபீல் ஃப்ரீ..."

அவன் இன்னும் கூட என்னவோ சொன்னான். சுகந்தாவுக்குத்தான் ஒன்றும் புரியவில்லை.

ஆனால், ஆரம்பத்திலிருந்த அதிர்ச்சி இல்லை...

ஒன்று - அவன் ஆள் மாற்றி அழைத்துப் போகிறான்...

அல்லது - இப்பொழுது கூட, ப்ரியா அவளது மாமியார் மாமனார் ஒரு காரிலும், நாம் ஒரு காரிலுமாய் போய்க் கொண்டிருக்கிறோம்.

'தமிழ் தெரிந்த டிரைவராய் வைத்துக் கொள்ளாதோ இந்தப் பெண்...'

சுகந்தாவுக்கு ஒரு மாதிரியாகத் தலையைச் சுற்றுவது போலிருந்தது. நாக்கில் நீர் சுரந்தது.

'இது என்ன... மசக்கைக்காரி மாதிரி என்னமோ பண்ணறதே...'

அவள் தனக்குள் குழம்பினாள். தூக்கமுமில்லாத விழிப்புமில்லாத இரண்டும் கெட்டான் நிலை.

இதுதான் 'ஜெட்லாக்' என்பது அவளுக்குப் புரியவில்லை. இந்தியாவில் இருந்தால் இது நடுச்சாமமாயிற்றே...

அரை மயக்கத்தில் - அவள் காதருகே நெருப்புக் குச்சி சொல்வது போல -

"போனதும் போகாதுமா சமைக்கிறேன்; ஒழிக்கிறேன்னு கிளம்பிடாதீங்கோ மாமீ... நம்ம நேரமும், அவங்க நேரமும் பத்து, பதினொரு மணி நேரம் வித்தியாசப்படும்... அசந்து அசந்து வரும்... நன்னா ரெஸ்ட் எடுங்கோ..."


கூடவே கரகர குரலில் ராஜகோபாலன்...

ஆறு மாசம் நீங்க இல்லாம என்ன மாத்தான் ஓட்டப் போறாரோ பரமேஸ்வரன்..."

"குற்றவாளியான நீ, ஏதாவது சொல்ல விரும்புகிறாயா?"

"உங்க நெக்லஸ் ரொம்ப அழகா இருக்கும்மா!"

- எம்.ஆர்.மூர்த்தி



அவரை வெட்டியபடி பரமேஸ்வரன்..

'சுகந்தா.... இழுத்துப் போர்த்திண்டு தூங்கு... இந்தா, என்னோட தலைகாணியையும் வச்சுக்கோ... கழுத்து வலிக்கப் போறது...'

வாசலில் பால்காரன் மணியடித்தான்... ரேடியோவில் வெங்கடேச சுப்ரபாதம் ஒலித்தது. எங்கேயோ 'டக் டக்'கென காபி ஃபில்டர் தட்டும் சத்தம்; கீரைக்காரி பிரா குரல்... காதருகே 'சுகந்தா... சுகீ..' இப்படி வழக்கமாய் பரமேஸ்வரன் அவளை எழுப்பும் குழைவு...

அவள் எழுந்து பல் தேய்த்து, விளக்கேற்றி, சுவாமி படத்துக்கு நமஸ்காரம் செய்துவிட்டு... தூக்கக் கலக்கத்துடன் மனைவி காபி கலக்கும் அழகை, பக்கத்திலிருந்து ரசித்தபடியே பரமேஸ்வரன் ரீதிகௌளையில் முனகும் கீர்த்தனை...

"பரிபாலய... பரிபாலய..."

"ஐய்யே... போதுமே... மனசுக்குள்ள பெரிய்ய வித்வான்னுதான் நினைப்பு..."

"உன்னோட டிகிரி காபி கொடுக்கற தெம்புடீ சுகீ... ஏன், நன்னாப் பாடலையா... 'உன்னழகைக் காண இரு கண்கள் போதாதே...' பாகவதர் மாதிரி பாடவா..."

"போதும் போதும்..."

அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். கார், செல்லமாய் குலுங்கி நின்றது.

சுகந்தா பரபரப்பாய் விழித்துக் கொண்டாள். சுற்றும் முற்றும் பார்த்தாள்.

ஏதோ ஒரு பெரிய தோட்டத்துக்குள், ஒளிந்து கொண்டுள்ள ராட்சஸன் போல எதிரில் தெரிந்த பங்களாவைப் பார்த்தாள்...

அமெரிக்க டிரைவர், மறுபடியும் இடுப்பை வளைத்து வணங்கினான். கார் கதவைத் திறந்தான்...

"வெல்கம் மாம்!"

சுகந்தா தயங்கியபடி கேட்டாள்...

"அவங்க எல்லாம் எங்கே?"

"வாட்?"

"அவங்க... ஓ... தமிழ்லே பேசறேன்... மை கேர்ள்... ப்ரியா... டாட்டர்... மை... டாட்டர்..."

"எஸ்... ப்ளீஸ் கம்..."

அவன், அவளை வீட்டுக்குள் அழைத்துப் போனான்.

அங்கே-

ப்ரியா இல்லை. வெள்ளைக்காரப் பெண் ஒருத்தி, வயிற்றைச் சாய்த்துக் கொண்டு...

அவளும் - இவளைப் பார்த்து அதிர்ந்தாள்.

"ஹேய் ஸ்டீஃபன்... ஹூ இஸ் ஷீ...."

அவன் புன்னகை செய்தான். சுகந்தா பார்த்துக் கொண்டிருக்கும்போதே மனைவியின் உதட்டில் 'பச்'சென முத்தமிட்டான்.

'ராம ராம... என்ன கண்றாவி இது!'

சுகந்தா, கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

"உனக்காக, சிரமப்பட்டு நான் கொண்டு வந்திருக்கிற பரிசு இது... ஜேன்.... கத்தாதே... கலாட்டா செய்யாதே... எல்லாமே உன் பிரசவம் வரைக்கும்தான்..."

அவன் கெஞ்ச, ஜேனட் தலைமுடியைப் பிய்த்துக் கொண்டு கத்தினாள்.

"என்ன காரியம் செஞ்சிட்டே ஸ்டீஃபன்... அய்யோ... கடவுளே... ஆமா... இது யாரு.."

"உன் ஃபிரண்டோட மாம்.. இந்தியாவுல இருந்து இப்பத்தான்..."

"அவ தேடுவாளே..."

ஜேனட் டெலிபோன் பக்கம் போக, ஸ்டீஃபன் 'சட்'டென ரிவால்வரை எடுத்து, தன் நெற்றிப் பொட்டில் வைத்துக் கொண்டு கிறீச்சிட்டான்.

"நோ... சொல்லாதே... அப்புறம் நான் செத்துடுவேன்... இவங்களை எப்ப, எப்படிக் கொண்டு சேர்க்கறதுன்னு எனக்குத் தெரியும். பேசாம இரு..."

ஜேனட், அவனையே பார்த்தபடி 'பொத்'தென சோபாவில் விழ...


சுகந்தா, சமீபத்தில் வழி தவறி சென்னைக்கு வந்த ஆஸ்திரேலிய ஆந்தை மாதிரி, 'பரக்கப் பரக்க' விழித்தாள்.

(தொடரும்)

எங்க ஊர் பிள்ளையார்

'ஸ்ரீ கணநாதா, சிந்தூர வர்ணா' என்று விநாயகரைத் துதித்துப் பாடுகிறோமே! கணபதிக்கு செந்நிறமான மேனி ஏன் வந்தது தெரியுமா? அதற்கும் ஒரு புராணக் கதை உண்டு.

முன்னொரு கற்பத்தில் சத்தியலோகத்தில் பிரம்மதேவர் கொட்டாவி விட்டார். அக்கொட்டாவியிலிருந்து ஒருவன் பிறந்தான்... அப்போது மூவுலகங்களிலும் உதிர மழை பொழிந்தது. அவன் செம்பரத்தைப் பூவைப் போன்ற நிறத்தையும், பத்துத் தலைகளையும் உடைய அரக்கனாய் கர்ஜித்து நின்றான்.



"நான் உன் முகத்தில் தோன்றியதால் உனது மகனாகி விட்டேன். நான் வாழ ஓர் இடம் காட்டு" என்றான் பிரம்மனிடம்.

"நீ சிவப்பு நிறமுடையவனாக இருப்பதால், சிந்தூரன் என்று பெயர் பெறுவாய். உனக்குரிய இடத்தை நீயே தேடிக் கொள். நீ சினத்துடன் இரு கரங்களால் யாரைத் தழுவினாலும், அவர்கள் நீறாகி விடுவார்கள்" என்று வரம் கொடுத்துவிட்டார்.

"தந்தையே! உமது வரத்துக்கு நன்றி. அது பலிக்கின்றதா என்று பார்க்க விரும்புகிறேன். உம்மையே என் கரங்களால் தழுவுவேன்" என்று பாய்ந்து வந்தான். அஞ்சி ஓடிய பிரம்மதேவர், வைகுந்தத்துக்கு ஓடி திருமாலிடம் சரண் புகுந்தார்.

"திருமாலே! நீ என்னுடன் போருக்கு வா. இல்லையேல் உன்னையும் பிரம்மனையும் தழுவி நீறாக்கி விடுவேன்" என்று கர்ஜித்தான். நாராயணர் தமது கோபத்தை அடக்கிக்கொண்டு, "அப்பா... சிந்தூரா! நாங்கள் ரொம்ப சாதாரணமானவர்கள். உன் வீரத்துக்கும் தீரத்துக்கும் சிவபெருமான்தான் சரியானவர். அவருடன் போரிடு. உன் புகழ் ஓங்கும்" என்று சொல்லி அனுப்பினார்.

சிந்தூரனும் நிலம் அதிர கைலாயம் புறப்பட்டுச் சென்றான். அப்போது குழந்தை கணேசமூர்த்தி எதிரே வர, "ஏ... குட்டிப் பயலே! ஓடிப்போ... வீணாக எரிந்து போகாதே!" என்று வீர மொழி கூறினான்.

சிந்தூர நாயகன்!

விநாயகர் விஸ்வரூபம் எடுத்து, அப்படியே சிந்தூரனைப் பிடித்துக் குழைத்து, தமது மத்தகத்தில் பூசிக் கொண்டார். அமரர்கள் அலர் மழை பொழிய, அருள்மழை பொழிந்தார் விநாயகர். சிந்தூரன் சிவனடி சேர்ந்தான்.

சிந்தூரனைச் சிந்தூரமாகத் தரித்ததனால், 'சிந்தூர நாயக' னென்று போற்றித் துதிக்கப்படலானார்!


* ஆதி விநாயகர்

நரமுகக் கடவுள்!

இந்தியாவில் உள்ள ஏழு பித்ரு தலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது திலதர்ப் பணபுரி சொர்ணவல்லி உடனுறை முக்தீஸ்வரர் சிவாலயம். அதன் வாயிலை ஒட்டிச் சற்று வடபுறம் மேற்கு முகமாக ஒரு சிறு பிள்ளையார் கோயில். கருவறையில் சற்று உயரமான மேடை மீது, இடக்காலை மடக்கிச் சம்மணம் இட்டமர்ந்து, வலக் காலைத் தொங்கப் போட்ட நிலையில் காட்சி தரும் அந்த விநாயகருக்கு மனித முகம்!

நான்கு கரங்கள்... ஒன்றில் பாசம்; மற்றொன்றில் அங்குசம்; இடது கை தொடை மீது; வலக்கை அபயஹஸ்தம் போல். ஆனால் வலமாகச் சற்று சாய்ந்த ஆனந்த முத்திரை! சட்டென்று பார்த்தால், ஆலங்குடி குருவோ என்ற தவக்கோல அலங்காரத் தோற்றம்!

மனித முகம் கொண்டு, 'நரமுக கணபதி' என்ற திருநாமம் பெற்றிருந்தாலும், மக்கள் நெஞ்சில் இவர் பிரபலம் அடைந்திருப்பது என்னவோ, 'ஆதி விநாயகர்' என்ற பழம் பெயரில்தான்.

தான் நீராடும்போது, அவ்விடத்தின் காவலுக்காகப் பார்வதி தேவி பிடித்து வைத்து உயிரூட்டி நிறுத்தியிருந்த பிள்ளையார், சிவனையே யார் என்று அறியாமல், உள்ளே செல்ல அனுமதிக்காததால்,



● கன்னியாகுமரியில் இருக்கும் கேரளா புரத்திலுள்ள மரத்தடி விநாயகர், ஆவணி முதல் தை மாதம் வரை ஆறு மாதம் கறுப்பாகவும், மாசி முதல் ஆடி வரை ஆறு மாதம் வெண்மையாகவும் காட்சி தருகிறார்.

● கோவையில் ரச்சனாரி விநாயகர் கோயிலில் ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் ஒவ்வொரு வித அலங்காரம் விநாயகருக்குச் செய்யப்படுகிறது.

- அரிச்சந்திரன், சென்னை - 41

கோபமுற்ற சிவன், அப்பிள்ளையின் தலையைத் துண்டித்து விடுகிறார். விவரம் அறிந்த பார்வதி வெகுண்டது கண்டு, அவளைச் சமாதானப்படுத்த வேண்டி, கண் எதிரில் அப்போது தென்பட்ட யானைக் குட்டி ஒன்றின் தலையைக் கொய்து வரச் சொல்லி சிவன், பிள்ளையின் உடலோடு பொருத்தி விடுகிறார்.

அதுவரையில் மனித முகம் பெற்றிருந்த பிள்ளையார், 'கஜமுக கணபதி' ஆகிவிட்டார். அப்படி 'கஜமுகன்' ஆவதற்கு முன்பாக, அதாவது - ஆதியில் இருந்த மனித முகத்துடன் இந்த நரமுக கணபதி இருப்பதால், இவர் 'ஆதி விநாயகர்' என்றே அழைக்கப்படுகிறார். ஊரை அடையாளம் கூறும்போது யாரும் திலதர்ப்பணபுரி என்பதில்லை. 'ஆதிவிநாயகர் கோயில்' என்றே சொல்கின்றனர்.

- ஜி. ஜெயராமன், மன்னார்குடி

நிறம் மாறும் கணபதி!

● பாண்டிச்சேரியிலுள்ள மணக்குள விநாயகர் ஆறு முகங்களுடன் காணப்படுகிறார்.

● வேலூரில் உள்ள தேனாம்பாக்கத்தில் லிங்க உருவில் உள்ள விநாயகரைச் சுற்றி பத்துவித விநாயகர்கள் காட்சி தருகின்றனர்.

வாகனப் பிள்ளையார்!

பெங்களூர் மாநகரின் கப்பன் பூங்காவில் பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகிறார் வாகனப் பிள்ளையார். பூமி மட்டத்திலிருந்து சுமார் பத்தடி ஆழத்தில் அமர்ந்தபடி ஆசி வழங்கிடும் இப்பிள்ளையார் கோயில் அமைக்கப்பட்டு பல்லாண்டுகள் ஆகின்றன.

புதிதாக வாகனங்களை வாங்குபவர்கள், முதன் முதலாக பூஜை போட்டு ஓட்ட ஆரம்பிப்பது இந்தக் கோயிலில் இருந்துதான். பெங்களூரை விட்டு வெளியூர்ப் பயணத்திற்கு வாகனங்களைப் பயன்படுத்துவோர், இவ்விடம் வந்து பூஜை செய்து அனுமதி பெற்றுச் சென்றால், எந்த விதமான சிக்கலும் இல்லாமல் திரும்பி விடலாம் என்பது நம்பிக்கை.

இன்னுமொரு விசேஷம், இந்தக் கோயிலில் இந்துக்கள் மட்டுமே மேற்படி பூஜைகளைச் செய்வதில்லை. இப்பிள்ளையாரை நம்பி, விரும்பி, வேண்டி பூஜை செய்துகொள்வதில் கிறிஸ்துவர்கள், இஸ்லாமியர்கள் என பல மதத்தவர்களும் உண்டு என்பது மகிழ்ச்சியான செய்தி.

- ப. மூர்த்தி, பெங்களூர்-21


COTS WITH / WITHOUT STORAGE
More than 25 Models
SOFA SETS
More than 50 Models
ENTERTAINMENT SETS
More than 10 Models
WOODEN WARDROBES
More than 10 Models
Quality Furniture at Affordable Price Tags
Sathya
Furniture World
Since 1968
Lifetime Investment
One of India's Biggest Furniture Showroom
H.O : Mylapore
(20,000 sq.ft)
139, R H Road,
Next to Sanskrit College,
Ch-4. Ph : 24982930 / 31
Anna Nagar (West)
DABC Bldg.,
6, M T H Road, Padi,
Opp. TVS, Padi, Ch-50.
Ph : 52155929
Velachery
Paramount Park,
358, Velachery-Tambaram
Main Rd, Ch-42.
Ph : 52144929
Coimbatore
266, Mettupalayam Road,
Near Saibaba Temple
Bus Stop, Cbe - 43.
Ph : 2452929 / 30
STEEL ALMIRAHS
More than 50 Models
SOFA-CUM-BED
More than 10 Models
Also Available
Diwans
Recliner Chairs
Pooja Cabinets
Computer Tables/Chairs
& Office / Institutional
Furniture
SUNDAY OPEN
Exchange Option available for Old Furniture
Major Credit Cards accepted
DINING SETS
More than 50 Models
BEDROOM FURNITURE
More than 50 Models

நான்காவதாக ஒரு பெண்ணைப் 'பார்க்க' அண்ணாவுக்கு அலுப்பும் சலிப்புமாகயிருந்தது. 'பேசாமல் வடபழனி கோவிலிலேயே வைத்து பார்த்துவிடுவோம்' என்று அவன் ஒரு வாரம் முன்பே யோசனை சொல்லியிருந்தான். பழைமையில் ஒரு காலும், புதுமையில் ஒரு காலுமாய் இருந்த அம்மா யோசிக்காமல் சட்டென்று சம்மதம்



தெரிவித்ததை, அப்போது என்னால் கொஞ்சம் நம்பத்தான் முடியவில்லை.


அமெரிக்கன் 'கான்சலேட்' போகவென்று லீவெடுத்திருந்த அண்ணா, அம்மா அப்பாவுடன் முதலில் போய்விடுவதென்றும், நான் ஆபீஸிலிருந்து நேராகக் கோயிலுக்கு வருவதென்றும் ஏற்பாடு.

திவ்யாவிடம் சமாளித்துக் கொள்ளச் சொல்லிவிட்டு, ரகசியமாகக் கிளம்பிவிடவேண்டும் என்று நினைத்தபடியே பைக்கை உதைத்தேன். பின்சீட்டை ஒரு தட்டுத் தட்டிவிட்டு ஏறிக் கொண்டேன். அம்மாவைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் பின்சீட்டில் ஏற்றப் பிடித்ததேயில்லை. நண்பர்கள் முதலில் கேலி செய்து, பின் என் குணம் பழகிவிட, அதையும் விட்டுவிட்டிருந்தனர். என் அனுபவம் அம்மாவுக்கு மட்டும் தெரியுமென்றாலும், அது என்னுள் ஏற்படுத்திய நிரந்தரமான தாக்கமும், பயமும் மட்டும் அவளுக்குத் தெரியவே தெரியாது.

ஆபீஸில் நுழைந்தவனை, திவ்யாதான் 'ஹலோ' சொல்லி எதிர்கொண்டாள். 'சாயங்காலம் சீக்கிரமே கிளம்ப வேண்டும்' என்று என்னை முந்திக்கொண்டு பர்மிஷன் கேட்டாள். என் நிலையைச்

பின் சீட்

ஜெயந்தி சங்கர்



சொன்னதும், "வாட் எ கோயின்ஸிடென்ஸ்? என்னோட கஸினப் பொண்ணு பாக்கத்தான் கோயில்ல ஏற்பாடு செஞ்சிருக்காங்க. அது உங்கண்ணாதானா?" என்றாள்.

அண்ணாவின் பெயரைச் சொன்னதும், திவ்யாவின் யூகம் சரிதானென்று உறுதியானது. அவளின் பெரியம்மா பெண் தானாம்.

வேலை முடிந்து சரியாக ஐந்து மணிக்கு வந்த திவ்யா, "என்ன இளம்பலாமா... உங்க பின் சீட்ல தொத்திக்கிறேன்" என்றாள்.

திவ்யா என் கீழ் வேலைக்குச் சேர்ந்து ஒருவருடம் கூட ஆகியிருக்கவில்லை. அதனால்தான் அவளுக்கு என் பின்சீட் விவகாரம் தெரியவில்லையோ!

பன்னிரண்டு வருடங்களுக்கு முன்பு நாங்கள் சிங்கப்பூரில் நான்கு வருடங்கள் வாழ்ந்தோம். அப்பா ஷிப்யார்டில், ஷிப் ரிப்பேர் மானேஜராகப் பணிபுரிந்தார்.

அப்போது நான் ஆறாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். மற்ற பாடங்களில் குறைவதும் கூடுவதுமாய் இருந்த என் மதிப்பெண்கள், தமிழில் மட்டும் நிலையாயிருந்தது. பெரும்பாலும் முதல் மதிப்பெண் என்னுடையதாகவேயிருந்தது. இருந்தாலும், தமிழ் வகுப்பில் எனக்கு ஒரு போட்டி மெல்ல உருவானது. வேறு பள்ளியிலிருந்து எங்கள் பள்ளிக்கு இரண்டாம் காலாண்டில் வந்திருந்த தீபா, முதல் இடத்தைப் பிடித்தாள். அது என்னைப் பாதிக்கவில்லை. ஆனால், அரையாண்டுத் தேர்வில் எதிர்பாராதவிதமாய், ஒரே ஒரு மதிப்பெண் வித்தியாசத்தில் நான் முதலிடம்! இரண்டாம் இடத்துக்குப் போன தீபா கொதித்தாள். வழக்கம்போல பேப்பரை வைத்துக் கொண்டு, ஆசிரியர் திருத்தியதில் ஏதேனும் தவறு இருக்குமா என்று தேடித் தேடிப் பார்த்தாள். ஆனால், அவளால் கண்டுபிடிக்க முடியவில்லை. தான் முதல் மதிப்பெண் வாங்கவில்லை என்பதைவிட, அது எனக்குக் கிடைத்தது அவளை மிகவும் ஆத்திரப்படுத்தியது.

மரத்தடியில் இருந்த பெஞ்சில் உட்கார்ந்து வீட்டுக்குப் புறப்படும் முன் என் பேப்பரைச் சரிபார்த்தேன். எனக்கு ஒரு கேள்விக்கு மூன்று மதிப்பெண்கள் கொடுக்கப்படவில்லை. ஆசிரியர் தவறுதலாய்க் கொடுக்காமல் விட்டிருந்தார். நண்பனிடம் சொல்லிவிட்டு, பேப்பரை எடுத்துக் கொண்டு நான் ஸ்டாஃப் ரூமுக்குக் கிளம்பும் போது, நான் பேசியதையெல்லாம் ஒட்டுக்கேட்டபடியிருந்த தீபா, சுற்றுமுற்றும் பார்த்தபடி என் வழியில் குறுக்கே வந்து நின்றாள். "ஏய், கார்த்திக், நீ இப்ப ஸ்டாஃப் ரூம் போகக் கூடாது" என்றாள் தோரணையுடன். "ஏன், நா போவேன். ஒனக்கென்ன?" என்று நான் சொல்லிக்கொண்டே முன்னேற முயல, "இங்க பாருடா, நீ மட்டும் இப்பப் போனேன்னு

வையேன், நீ என்னைய 'மொலெஸ்ட்' (molest) பண்ணிட்டன்னு போய் 'ஃபார்ம் டீச்சர்'கிட்ட சொல்லிடுவேன். உன்னோட வாழ்க்கையே அத்தோட க்ளோஸ். ஜாக்ரத" என்று மிரட்டலாகச் சொன்னான். தூரத்தில் அவன் பார்வை குத்திட்டு நிற்க, பார்த்தால் தமிழாசிரியர் காரில் ஏறிக் கொண்டிருந்தார். அதற்காகவே காத்திருந்தவள் போல, "நாளைக்கும் நீ மார்க் கேக்கக் கூடாது. கேட்ட...!" என்றபடி பையை எடுத்துக் கொண்டு பறந்தாள்.

தீபா சொன்னதன் பொருள் எனக்கு அப்போது துளிக்கூடப் புரியவில்லை. நேராக வீட்டுக்குப் போனதும், அம்மாவிடம் நடந்ததை நடந்தபடியே சொன்னேன். அம்மாவுக்கு இலேசாகப் புரிந்ததால், முகத்தில் கவலைக்கோடுகள் விழுந்தன. அப்பாவுடன் மாலையில் பேசும்போது, சீரியஸாக முகத்தை வைத்துக் கொண்டு அழுதுவிடும் தொனியில் பேசியது, எனக்குக் குழப்பமாக இருந்தது. அப்பா மௌனமாகி விட்டார். தீபா வார்த்தைகளின் தீவிரத்தை அப்போது செய்தித்தாள்களில் வந்த சில செய்திகள் உறுதிப்படுத்தின. சிங்கப்பூரின் மற்ற எல்லா இனிய நினைவுகளையும் சேர்த்துக்கட்டிக் காலடியில் போட்டு, நசுக்கி அழிக்கக் கூடியதாய் அமைந்துவிட்டிருந்தது, என் வரையில் அந்த ஒரே சம்பவம்.

அம்மா அடுத்த நாள் ஸ்கூலுக்குப் போக வேண்டாம் என்று சொல்லிவிட்டு யோசித்தபடியேயிருந்தாள். பிறகு, "கார்த்திக், இந்த மார்க்ஸ் போட்டியெல்லாம் வேண்டாண்டா கண்ணா. தீபா வேற ஏதும் சொன்னா எங்கிட்டச் சொல்லு. நா அவம்மாகிட்டப் பார்த்துப் பேச ட்ரை பண்றேன், இல்ல, ஸ்கூல் பிரின்ஸிபால் கிட்ட வேணாலும் பேசலாம்" என்றாள்.

அந்தச் சம்பவத்திற்குப் பிறகு நான் தீபாவை மிரட்சியுடன் பார்க்க ஆரம்பித்தேன். அன்று வரை வகுப்புத் தோழிகளாய் இருந்த அத்தனை பெண்களும், என்னுள் நம்பத்தகாத கிராதகிகளாயினர். அம்மா மட்டுமே நான் நம்பும் பெண்ணாகிப்போனாள்.

அதற்குப் பிறகு, இரண்டு வருடங்களிலேயே இந்தியாவுக்குத் திரும்பினோம். கோவையில் ஒன்பது முதல் ப்ளஸ் டூ வரை முடித்து, அண்ணாமலையில் என்ஜினீயரிங் முடித்து, இரண்டு வருடமாய் கை நிறைய சம்பாத்தியம் கொடுக்கும் வேலையில், என்னைச் சுற்றியிருக்கும் பெண்களிடம் தேவையென்றால் மட்டுமே பேசுவது என்று பழகியிருந்தேன். ஆனால், நான் யாரையும் பைக்கில் ஏற்றுவதில்லை என்பதால், ஆபீஸில் வேலை பார்க்கும் பெண்களிடையே நான் 'பயங்கர கர்வி.' பெண்கள் கூட்டம் சிரித்துக் கிண்டலடிக்கும்.

திவ்யாவும் நானும் கிளம்பினோம். எப்படிக் கழட்டி விடுவது என்று யோசித்தபடியே அவளுடன் படிகளில் இறங்கினேன். என்னை விட்டு விலக மாட்டாள் என்று தோன்றவே, பைக் தவிர்த்துவிட்டு ஆட்டோ பிடித்தேன். ஆட்டோவில் செல்லும்போது, "ம்... உன்னோட கஸின் எப்படி?" என்று பேச்சை ஆரம்பித்தேன். முகத்தில் பறந்த முடியைச் சரி செய்து கொண்டே, "ம்... ரொம்ப நல்ல டைப். திறமைசாலி. பார்க்கவும் படு ஸ்மார்ட். தொடர்ந்து மூணு வருஷமா கம்பெனியோட பெஸ்ட் எம்ப்ளாயி அவார்ட் வாங்கியிருக்கா. மூணு மாசத்துக்கு ஒரு தடவ ப்ளட் டொனேட் பண்ணிடுவா. யோகா க்ளாஸ் நடத்தறா வீக்கெண்ட்ல. பழகறதுக்கு இனிமையானவள்" என்று அடுக்கியதை, எதிர்ப்புறம் சாலையையே பார்த்தபடி கேட்டேன்.

"தென்கச்சி சுவாமிநாதன், இந்து முன்னணித் தலைவர் இராம.கோபாலனைப் பற்றிக் கட்டுரை எழுதினால் என்ன பேர் வைப்பார்?"

" 'இந்து ஒரு தகவல்'ன்னுதான்!"

- நாமக்கல் தங்கமணி

கோயில். அம்மா வாயெல்லாம் பல்லாகப் பேசிக் கொண்டிருந்தது தூரத்திலிருந்தே தெரிந்தது. அம்மாவின் வலது புறமிருந்த பெண், "ஹாய் திவ்யா" என்று கூவினாள். "கார்த்திக், இதுதான் என்னோட கஸின், தீபா" என்றாள் திவ்யா, என்னைத் திரும்பிப் பார்த்து.

தீபா! அதே சிங்கப்பூர் தீபா! பல

ஆண்டுகளுக்கு முன் சில தடவை மட்டுமே பார்த்திருந்த அம்மாவுக்கு, அந்த மேடிட்ட நெற்றியும், வலது காதருகில் இருந்த மிளகளவு மச்சமும் மறந்து போனதோ! தினந்தோறும் கொஞ்சம் மிரட்சியுடனேயே பார்த்து வந்த எனக்கு ஞாபகம் இருந்த அளவுக்கு, அம்மாவுக்கு நினைவிருக்க வழியில்லை.

அண்ணா என்னிடம் வந்தான். என்னை மெதுவாகத் தனியே தள்ளிக் கொண்டு போனான். அம்மாவைப் போலவே, அவன் முகத்திலும் மகிழ்ச்சி அப்பட்டமாய் அப்பியிருந்தது. "டேய் கார்த்திக், எங்களுக்கெல்லாம் ஓகே. நீயும் ஒபீனியன் சொல்லிட்டேன்னா..." என்றபடி குழப்பத்தில் இருந்த என் முகத்தைப் பார்த்தான்.



மன்னியாக வீட்டுக்குள் வந்தால் இவள் என்னைத் தனக்குப் போட்டியாகவும் எதிரியாகவும் நினைப்பாளோ! அதுகூடப் பரவாயில்லையே. எதிலும் ஜெயிக்க வேண்டுமென்ற வெறியில், அபாண்டங்கள் சொல்லிக் குடும்பத்தை ரெண்டாக்கினால்! ஏனோ உடனடியாக பெண் வீட்டாரிடம் சம்மதம் சொல்லிவிடக் கூடாது என்று தோன்றியது. "அப்பா, அம்மாவக் கூப்டுங்கோ. நாம கௌம்பலாம். ரெண்டு நாள்ள பதில் சொல்றோம்னு சொல்லிட்டுக் கிளம்புங்கோ. போலாம்" உணர்ச்சியை மறைத்துக் கொண்டு எல்லோரையும் கிளப்பினேன். "ஏண்டா கார்த்திக்?" என்ற அம்மாவை அலட்சியப்படுத்திவிட்டு, "திவ்யா, ஒன்னோட கொஞ்சம் பேசணும், வா, பேசாம ஆபீஸுக்கே போயிடுவோம்" என்றேன். என் முகத்தில் இருந்த குழப்பத்தையும் தீவிரத்தையும் பார்த்ததுமே பேசாமல் என் பின்னால் வந்தான்.

ஆட்டோவிலிருந்து இறங்கி, அலுவலகத்தின் ஆளரவமற்ற மரத்தடியில் நின்று பேச ஆரம்பித்தேன்.

நான் அறிந்திருந்த தீபாவைப் பற்றி திவ்யாவிடம் முழுவதும் சொன்னேன்-என்னுடைய பைக் பின்சீட் விவகாரத்தை மட்டும் கவனமாக மறைத்து. பொறுமையாக ஆனால், கொஞ்சம் ஆச்சரியத்துடன் துப்பட்டாவின் நுனியை விரலால் சேஷ்டை செய்தபடியே கேட்டான். "கார்த்திக், பன்னெண்டு வருஷத்துக்கு முன்னால் நடந்த அந்தச் சம்பவத்தை, தீபாவுக்கு நினைவுபடுத்தினாதான் உண்டு. ஏன்னா, அவ மறந்திருப்பா. கேட்டாலும் சிரிச்சுட்டு விட்டுடுவா. உனக்குத்தான் அப்ப ஒண்ணும் புரியவேயில்லன்னு சொல்றியே. உன்னோட பேசின ஒங்கம்மா, உன் மனசுல பயம் மட்டுமே வரும்படி பேசியிருக்காங்க. இதே தீபா சின்ன வயசுல எங்க மாமாவைத் தான் கல்யாணம் பண்ணிப்பேன்னா. அவகிட்ட இப்பச் சொன்னா சிரிக்கிறா. சின்ன வயசுல நீ கூட ஒணான் அடிச்சிருப்ப. இப்ப ஒன்ன 'சாடிஸ்ட்'னு முடிவு பண்ணிடலாமா?

சின்ன வயசுல என்னென்னவோ பேசறோம். எல்லாமே நாலே வருஷத்துல கொழந்தத்தனமா நமக்கே படறதில்ல...? தீபா மாதிரி ஒரு நல்ல பொண்ண பாக்கறதே அபூர்வம். அவளோட ஆபீஸ்ல பலருக்கு நிறைய உதவிகள் செய்திருக்கா. ஒனக்கு பயம் அதிகமாக, அப்ப நீங்க இருந்த சூழல் கூடக் காரணமாயிருந்திருக்கலாம். நெறைய நியூஸ் பேப்பர்ல 'மொலெஸ்டேஷன்' பத்தின செய்திகள் வந்ததுன்னு சொல்றியே, அதான். சின்ன வயசுல சொல்லப்படற செய்தி, மனசுல தப்பாக்கூட பதிஞ்சுடும்னுதான் நான் சொல்ல வரேன். நீ யார்கிட்டயாவது மனசத் தெறந்து பேசியிருக்கியா?" - படபடவென்று பேசின திவ்யா, சட்டென்று அமைதியாகி என்னை யோசிக்க விட்டாள். சற்று நேரம் எங்களிடையே கனத்த மௌனம்.

திடீரென்று திவ்யாவின் செல்பேசி சிணுங்கியது. "தீபாதான். ஒன்னோட பேசணுமாம்" என்று வலுக்கட்டாயமாக என் கையில் திணித்தாள். "ஹலோ" வென்று சொல்லிவிட்டு, தீபா பேசுவதைக் கேட்க ஆரம்பித்தேன். "ஹலோ, கார்த்திக்! எனக்கு உன்ன அடையாளமே தெரியல.

ஒங்கப்பா சொன்னதும்தான் நாம க்ளாஸ்மேட்ஸ்னே புரிஞ்சுது. ஹௌ இன்ட்ரெஸ்டிங்க்! என்னால நம்பவே முடியல. ஹௌ நைஸ்! நாம ஒரு நாள் ஒக்காந்து பேசணும் கார்த்திக், பழைய கதையெல்லாம்...'' கல்யாணப் பேச்சைத் தவிர்த்துவிட்டு, உற்சாகமாக ஏதேதோ பேசிக்கொண்டே போனான். நான் 'உம்' மட்டும் கொட்டிக்கொண்டேயிருந்தேன். போனைத் துண்டித்ததும், தீபாவின் குரலையும் சொற்களையும் அசைபோட்டேன். அதில் கபடின் சுவட்டைத் தேடி தேடித் தோற்றேன்.

தேவைக்கதிகமாக பயந்து எதிர்மறையாகவே யோசித்து வந்திருந்திருக்கிறேன் என்ற உண்மை முகத்தில் முதன் முறையாக அறைந்தது. தீபாவின் திருமணம் கூடி வர வேண்டும் என்ற அக்கறை இருந்தாலும் கூட, அதை முதன்மைப்படுத்தாமல் எதார்த்தத்தை எனக்குப் புரிய வைத்திருந்த திவ்யா, எனக்குத் தன்னையறியாமலேயே பெரும் உதவி செய்திருந்தாள். எனக்குள் கொணர்ந்திருந்த மாற்றத்தை அறியாமல் நிச்சலனமாய் பெஞ்சில் உட்கார்ந்திருந்தாள். "ம்... திவ்யா, வா போகலாம். சொல்லு, ஒன்ன எங்க ட்ராப் பண்ணட்டும்?" என்றபடியே, பைக்கையடைந்து உதைத்துக் கிளம்பிய என் முகத்தையே திவ்யா தன் புருவத்தை யுயர்த்திக் குறும்புடன் ஆழமாகப் பார்த்தாள். ●



வலைபாயுதே



தமிழ்நாட்டில் காகிதங்களின்றிச் செயல்படும் முதல் அரசு அலுவலகம் எது தெரியுமா? தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்தான். அதன் இணைய முகவரி tamilnaduwomen.org. இது எதற்காகச் செயல்படுகிறதென விளக்க வேண்டியதில்லை. உங்களுக்கே தெரியும். திட்டங்கள், அறிக்கைகள், அறிவிப்புகள் எல்லாம் தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன (ஆங்கிலத்தில்தான்!). சிலவற்றைத் தமிழிலும் கொடுக்கலாமே! (அதெல்லாம் சரி! ஹோம் பேஜ்ல அம்மா படம் இல்லாதது உறுத்தலா இருக்குதுங்கோ?)

சானியா மிர்ஸா போல செம ஆக்டிவா இயங்குகிற பெண்களுக்கான தளம் என feminist.com-ஐ சொல்லலாம். 'விழிப்புணர்வு, கல்வி, அதிகாரம், செயல்பாடு' என்ற கொள்கையுடன் செயல்படும் இத்தளத்திற்கு வயது 10. பெண்களுக்கெதிரான வன்முறை, சட்டதிட்டங்கள், எதிர்கொள்வது எப்படி என எக்கச்சக்க விளக்கங்கள். உலக அளவில் நடக்கப் போகும் பெண்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளின் பட்டியல்கள் கிடைக்கின்றன. உலக அளவில் பெண்களுக்காக செயல்படும் அமைப்புகளின் லிங்க்-களும் கிடைக்கின்றன. வெளிநாட்டில் இருந்து இயங்குகிற தளம். இருந்தாலென்ன, உருப்படியான விஷயங்கள் கொட்டிக் கிடக்குதே!

ஆஸ்கார் பேபி



'திஜங்கிள் புக்' தெரியும்... அதன் வீரச் சிறுவன் கேரக்டர் 'மௌக்லி' தெரியும்... ஹாலிவுட்டில் அந்த கேரக்டரில் தன் ஒன்பதாவது வயதில் நடித்த ஹிலாரி அன் சுவாங்க்கைத் தெரியுமா? அவர் இவ்வருட சிறந்த நடிகைக்கான ஆஸ்கார் விருதைப் பெற்றிருக்கிறார். (படம்: மில்லியன் டாலர் பேபி) இதற்கு முன் Boys Don't Cry படத்தில் சிறந்த நடிகைக்காக ஆஸ்காரை அள்ளியிருக்கிறார். மில்லியன் டாலர் பேபியில் இவர் பாக்சராக நடித்திருக்கிறார். ஆனால் உண்மையில் சிறு வயதில் இவர் ஜூனியர் ஒலிம்பிக்ஸில் நீச்சல் சாம்பியனாம். ஜிம்னாஸ்டிக்கில் ஐந்தாவது இடமாம். சொல்கிறது imdb.com (உண்மையிலேயே ஹிலாரி, மில்லியன் டாலர் பேபிதான்!)

— ப்ரௌஸர்

சின்னான் செய்திகள்





"டிவிங்கிள் டிவிங்கிள் லிட்டில் ஸ்டார்
ஹவ் ஐ வொன்டர் வாட் யூ ஆர்..."

ஒண்ணுமில்லீங்கோ! லாலு ரயில்வே பட்ஜெட்-ல 'கட்ட' கவித சொல்றாரு! சிதம்பரம் பட்ஜெட்ல 'குறள்' சொல்றாரு! அதான் சின்னான் - இந்த சின்ன பட்ஜெட்ல ரைம்ஸ் சொல்றேன்! ஹா..ஹா..ஹா..!

புது டெல்லியில, பா.ஜ.க ஆட்சியில இருந்தப்போ, தலைமை அலுவலகத்துல உள்ள ஸ்டால்கள்ல, வாஜ்பாய், அத்வானி போஸ்டர், கேசட், புக்-னு வியாபாரம் களை கட்டுமாம். ஆட்சி மாற்றத்தால வியாபாரம் டௌனாம். அதனால 'பிரகிருதி பாரதி'-ங்கிற ஆர்.எஸ்.எஸ் தொண்டு நிறுவனம், பசுவோட கோமியம், சாணி, பால், இதையெல்லாம் வைச்சு சோப் முதல் கொசுவத்தி வரை விதவிதமா தயாரிச்சு விற்க ஆரம்பிக்க, இப்ப வியாபாரம் செம முட்டு முட்டுதாம்! என்னோட சந்தேகம் என்னன்னா, நம்ம பசுநேசன், அதாங்க நடிகர் ராமராஜன், இதுல பிஸினெஸ் பார்ட்னரா இருப்பாரோ?

நாமளும் அரசு பொதுத் தேர்வு எல்லாம் கடந்துதான் வந்திருக்கோம். ஆனா இப்ப கொஞ்ச வருஷமா பப்ளிக் எக்ஸாமைக் கூட விட்டு வைக்காம, இந்த மீடியாக்கள் வியாபாரமாக்கிக்கிட்டு வர்றாங்க. நடுப்பக்கம் நமீதா 'ஒரு மாதிரி' நிற்கிற ஸ்டில்லைப் போட்டுட்டு, இலவச இணைப்பா 'மாதிரி' வினாத்தாளையும் அள்ளி வழங்குறாங்க! விட்டா.... போகப் போக, நியூஸ் சேனல்களில், 'பத்தாம் வகுப்பு கணிதத் தேர்வு' நேரடி ஒளிபரப்பின் இந்தப் பகுதியை வழங்குவோர்...'னு ஆரம்பிச்சிருவாங்க போல!

"சார், நான் ஆண்டிப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில இருந்து நிருபர் பேசறேன். இப்ப இங்க எக்ஸாம் நல்ல படியா போயிட்டிருக்கு. ஒரு பையன் மட்டும் பிட் அடிச்சு மாட்டிருக்கான்"'னு மைக் பிடிச்சு லைவ்வா கூவ ஆரம்பிச்சிடாதீங்க சாமி!

சென்னை பாரிமுனையில குமரய்யா, தங்கசென்ட்-னு ரெண்டு போலீஸ் 'மப்டி'ல ரோந்து போயிருக்காங்க. உதயான்னு ஒருத்தன் அவங்களைப் பார்த்ததும் ஓட ஆரம்பிச்சிருக்கான். அவனைத் துரத்திப் பிடிச்சு கும்மியிருக்காங்க. அதைப் பார்த்த, சதீஷ்குமார்ங்கிற போலீஸ்காரர், அப்பாவியை ரெண்டு பேர் அடிக்கிறதா நினைச்சு தட்டிக் கேட்டிருக்காரு. 'நாங்களும் போலீஸ் தான்'னு அவங்க சொன்னதை நம்பாம, அவங்க 'போலி'ஸ்னு நினைச்சு, ஓங்கிக் குத்து விட்டு வாய்க்கு இரத்தத்தால 'பாலிஷ்' போட்டு விட்டுட்டாராம். போலீஸை போலீஸே தாக்கின விஷயம், போலீஸ் கேஸாயிருக்கு. அப்படிப் போடு!

'நேற்றைய வல்லரசு! இன்றைய பேரரசு! நாளைய தமிழக அரசு!'ன்னு அரசியலை உரசி -'புரட்சிதீபம்' ஏத்தப் போறதா, கேப்டன் 'தீபம்' திருவண்ணாமலையில குரல் விட்டுருக்காரு! 'இரு காலையும் அரசியல்ல வைச்சுட்டேன். இனி ஒருக் காலும் பின் வாங்க மாட்டேன்'னு நறுக்குன்னு சொல்லிட்டாரு. அதெல்லாம் சரி! 'நமக்கென்று ஒரு இடம்(!) உண்டு'ன்னு சொன்னாரு. அது எந்த இடம்னுதான் எனக்குப் புரியல! உங்களுக்குப் புரியுதா?

கல்கி சதாசிவம் நினைவு அறக்கட்டளை



கல்கி சதாசிவம் நினைவு விருது வழங்கும் விழா
&
கல்கி சதாசிவம் நினைவுச் சொற்பொழிவு

- 2004ம் ஆண்டில் தமிழ் இதழ்களில் வெளியான கலை நயமும், சமுதாய நோக்கும் இணைந்த தலை சிறந்த விளம்பரத்துக்கான விருது வழங்குதல்
- படிப்பில் சிறந்த, பொருளாதாரத்தில் பின் தங்கிய இதழியல் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல்

சொற்பொழிவு :

திரு. **பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர்**

தலைப்பு :

நவீன சமுதாயத்தில் மீடியாவின் பங்கு

சிறப்பு நிகழ்ச்சி :

'A GIFT OF THE GODS'

(இசைக் குயில் எம்.எஸ். சுப்புலட்சுமி பற்றிய செய்திப்படம்)

தயாரிப்பு :

ஒளிப்பட நிபுணர் அவினாஷ் பஸ்ரிசா

நாள் : 12, மார்ச் 2005, சனிக்கிழமை
நேரம் : மாலை 6.00 மணி
இடம் : பாரதிய வித்யாபவன் அரங்கம்,
சென்னை - 600 004.

அனைவரும் வருக!

உலகமே இவர்களை ஆர்வத்தோடு

1947. பாக்.பிரிவினை. பஞ்சாபில் கலவரம். உயிருக்குப் பயந்து தப்பி ஓடும் சீக்கியப் பெண் ஆயிஷாவுக்கு வாழ்வளிக்கிறார் பாகிஸ்தானியர் ஒருவர். அவர் 50 வயதில் இறந்து விட, அவர்களின் மகன் இஸ்லாமியத் தீவிரவாதிகளால் ஈர்க்கப்பட்டு அவனும் தீவிரவாதியாக மாறுகிறான். 1979ல் தன் அக்காவான ஆயிஷாவைத் தேடி பாகிஸ்தானுக்கு வருகிறார் ஒரு சீக்கியர். உண்மையை அறிந்து தன் தாயையே



• எலீனா

எலீனா இசின்பயேவா என்ற இந்த ரஷ்ய போல் வால்ட் வீராங்கனைக்கு மிக உயரமான லட்சியம். பிரான்சில் இவர், 4.89 மீ (16அடி, அரை இஞ்ச்) உயரே எம்பி (உள்ளரங்கில்) உலக சாதனை படைத்திருக்கிறார். இதற்கு முந்தைய சாதனை அளவு 4.87மீ. அந்த ரெக்கார்டையும் பிப்ரவரியில இவர் தான் நிகழ்த்தியிருக்கிறார். வெளி அரங்கில் எலீனாவின் சாதனை அளவு, 4.92மீ. '5 மீட்டர் தாண்டுவதே அடுத்த இலக்கு' என்று கூறும் இவரின் வயது அதிகமில்லை... இருபத்தியிரண்டுதான்!

இந்த பத்து வயது பாண்டிச்சேரி பெண்ணை தற்போது இந்தியாவே உச்சி முகர்கிறது. ஆயிஷா... 'ப்ளாக்' என்ற தற்போதைய பாலிவுட் ப்ளாக் பஸ்டர் மூவியில், ராணி முகர்ஜியின் சிறு வயது கேரக்டரில் வாழ்ந்திருக்கிறாள். காது கேட்காத, வாய் பேச முடியாத, பார்வையற்ற பெண் குழந்தையாய்! "ஆயிஷாவை நடிக்க வைப்பதில் முதலில் எனக்கு விருப்பமில்லை. ஆனால் இப்படி ஒரு கேரக்டரில்

அசத்துறாங்க!


திரும்பிப் பார்க்கிறது. யார் இவர்கள்?



• சபியா சுமர்

வெறுக்க ஆரம்பிக்கிறான் மகன். எதிர்பாராத முடிவுடன் முடிகிறது 'காமோஷ் பானி' (அமைதியான நீரோட்டம்) இந்தித் திரைப்படம். இயக்குநர் சபியா சுமர் (45), பாகிஸ்தானியப் பெண். படம் 'Golden Leopard' உட்பட 14 உலக விருதுகளைத் தட்டியுள்ளது. பாகிஸ்தானை, முஸ்லிம் பெண்களைப் பின்னணியாகக் கொண்டு மூன்று டாகுமெண்ட்ரிகளை எடுத்திருக்கும் இவரது இந்தப் படத்தில், ஆயிஷாவாக நடித்திருப்பது கிரோன் கெர் என்ற இந்திய நடிகை. உண்மையாகச் சொல்வதென்றால், சபியாவும் தீவிரவாதிதான்... உணர்வுகளைப் படமெடுப்பதில் தீவிரவாதி!

ஜப்பானில் காலம் காலமாக பின்பற்றப்படும் அரசியல் சட்டத்தையே மாற்றப்போகிறாள் இந்த மூன்று வயது குட்டி இளவரசி அய்கோ. ஜப்பான் அரச குடும்பத்தில் ஆண் வாரிசுகளே முடிசூடும் உரிமையுடையவர்கள். ஆனால் 1965ல் தற்போதைய மன்னரான நருஹிடோ (Naruhito)வின் இளைய சகோதரர் அகிசைனோ பிறந்தார். அதற்குப் பிறகு ஆண் வாரிசுகளே இல்லை. அதனால் நருஹிடோவின் மூன்று வயது மகள் அய்கோதான் அடுத்து முடி சூடத் தகுதி



• அய்கோ



யுடையவர் என்று சட்டத்தையே மாற்றியமைக்கப் போகிறார்களாம். ஆஹா... குட்டி இளவரசி தன் பிஞ்சுக் கைகளால் சரித்திரத்தையே புரட்டிவிட்டாள்!

நடித்து. வேறு யாராவது பெரிய ஆளாக வரும்போது, பெரியவளான பின் ஆயிஷா வருத்தப்பட்டிருப்பாள்" என்கிறார் அவரது தந்தை திலீப் கபூர். சென்ற வாரம் ஒரு பிரஸ் மீட். முடியும்போது தன் தந்தையின் தோளில் சாய்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள் ஆயிஷா...!



• ஆயிஷா

- ஷிவ்

கோடியில் நன்கொடை! கிராமத்துப் பெண்படை!

அக்கரைக்கோரி. சுனாமி, கருணையின்றி தன் கைவரிசையைக் காட்டிய கடலூர் கிராமம். இங்கே நிவாரணப் பொருள்களோடு உள்ளே நுழைகிறது ஒரு லாரி. உடுத்திய உடைகளும், உயிரையும் மட்டுமே மிச்சமாய் வைத்திருக்கும் கிராமத்து மக்கள், அடித்துப் பிடித்துக் கொண்டு ஓடி, ஆண்கள் தனியாகவும், பெண்கள் தனியாகவும் லாரியின் அருகே அணிவகுத்து நிற்கிறார்கள். பெண்கள் வரிசையில் திடீர் சலசலப்பு! "ஏய்! இங்க பாருங்கடி! நிவாரணம் கொடுக்க வந்திருக்க ஆளுங்க அத்தனையும் கிராமத்துப் பொம்பளைங்க! இவங்களுக்கு ஏதுப்பா இத்தனை பணம்!" ஆச்சர்யமாய் வாய் பிளந்து கொண்டிருக்கும்போதே, இரண்டு மாத காலத்துக்குத் தேவையான உப்பு, புளி, மிளகாயிலிருந்து, அரிசி வரைக்குமான அத்தனை மளிகை சாமான்கள்,



பாத்திரங்கள், டிரங்குப் பெட்டிகள் என்று தருகிறார்கள். அங்கேயே அலுவலகம் அமைத்து, தற்காலிக வீடுகளையும் அமைத்துக் கொடுக்கிறது நிவாரணக் குழு. அந்தக் குழுவை வழி நடத்திக் கொண்டிருக்கிறார் ஒரு பெண்மணி.

ஐந்தாண்டுகளுக்கு முன்பாக பிரதமர் வாஜ்பாயால் கௌரவிக்கப்பட்டவர். அனிச்சையாய் அரங்கேறிய அந்த ஒரு நிமிட நிகழ்வுக்குப் பின்னர், அகில இந்தியாவின் பார்வையையும் ஒருகணம் தம் மீது நிலைக்கச் செய்த பெண்மணி. பள்ளிக்கூடப் படிகள் எதிலும் தம் பாதம் பதிந்திடாத பாமர மங்கை. தலித் குடும்பத்தில் பிறந்த, பில்லுச்சேரி கிராமத்தின் எழிலரசி, சின்னப் பிள்ளைதான் அந்தப் பெரிய மனுஷி!

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பாக மதுரை கிழக்கு பஞ்சாயத்து அப்பன் திருப்பதி கிராமம் அருகே, பில்லுச்சேரி கிராமத்தில் சின்னப் பிள்ளையின் முயற்சியால் உருவானது 'களஞ்சியம் மகளிர் சுய உதவிக் குழு.' இன்று அதுவே ஒரு பேரியக்கமாக உருமாறி, பிரமிக்க வைக்கும் அளவுக்கு உயர்ந்து நிற்கின்றது. தமிழகத்தில் மதுரை, தேனி, திண்டுக்கல், இராமநாதபுரம், சேலம், தஞ்சாவூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், விருதுநகர் போன்ற மாவட்டங்களில், பத்தாயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் ஒரு லட்சத்துப் பத்தாயிரம் கிராமத்துப் பெண்கள் அங்கம் வகிக்கிறார்கள். களஞ்சியம் இயக்கத்தின் முதல் நிலைத் தலைவியாகச் செயல்பட்டு வருகிறார் பில்லுச்சேரி சின்னப்பிள்ளை. இவரது கூட்டமைப்பின் மொத்த சேமிப்பு ஐம்பத்து இரண்டு கோடி. இவர்களுக்கு வங்கிகள் வழங்கியிருக்கும் கடனுதவி அறுபது கோடி. இந்தக் கூட்டு முயற்சி ஒரு குக்கிராமத்து சின்னப் பிள்ளைக்கு எப்படிக் கை கூடி வந்தது!

"அப்பல்லாம் ஆம்பளை ஆளுங்களுக்குத் தர்றதை விட பொம்மனாட்டி சனங்களுக்கு மூணுலே ஒரு பங்கு கம்மியாத்தான் கூலி அளந்து வுடுவாங்க. அதானாலே நான்

அப்பவே பத்து இருவது பொம்பளை சனங்களைச் சேர்த்துகிட்டு, வயலு வேலைகளை ஏக்கரா கணக்குலெ மொத்தமா கூலிக்குப் பேசிக்கிட்டு எறங்கிடுவோம். அப்பல்லாம் என்னெய கொத்து ஆளும்பாங்க. அதுக்கப்புறம்தான் வயக்காட்டு வேலையிலெ எங்களுக்கு நல்ல கூலி கெடைச்சதுங்க. அந்தச் சமயத்துலதான் பொம்பளைங்க சுய உதவிக் குழுன்னு அங்கொண்ணும் இங்கொண்ணுமா ஆரம்பிச்சிட்டு இருந்தாங்க. சரி, அதுல நுழைஞ்சா கிராமத்துப் பொண்டுகளுக்கு, அதுங்களெ அமுக்கிக்கிட்டு இருக்கற எல்லாச் சுமைகளலேந்தும் விடுவிச்சிடலாம்ன்னு தோணிச்சு. அப்ப 1990ல உருவானதுதான் களஞ்சியம் மகளிர் சுய உதவிக் குழு.”



* நிவாரண உதவி

களஞ்சியம் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தாய் வீடாக விளங்கி வருகிறது தானம் அறக்கட்டளை. தானம் அறக்கட்டளையின் வழி காட்டுதலில், தென்னிந்தியா முழுமைக்குமாக நூற்றி முப்பது வட்டாரக் கூட்டமைப்புகள் இயங்கி வருகின்றன. மாதம் பத்து ரூபாய் சேமிப்பில், ஒரு குக்கிராமத்தில் துவங்கப்பட்ட களஞ்சியம் மகளிர் சுய உதவிக் குழு, இன்று பதினைந்து ஆண்டுகளில் பல்கிப் பெருகி, சமீபத்தில் நிகழ்ந்த சுனாமிப் பேரழிவிலிருந்து கடற்கரையோர மக்களை மீட்டெடுக்க வேண்டி, சுமார் ஒரு கோடி ரூபாய் வரையிலான நிவாரணப் பொருள்களை வழங்கியுள்ளது என்றால் நம்ப முடிகிறதா?

கடந்த இரண்டு மாதங்களாக கடலூர், நாகை, பாண்டி, திருக்கழுக்குன்றம் போன்ற இடங்களில் களஞ்சியம் இயக்கத்தினரும், தானம் அறக்கட்டளையினரும் நிவாரணப் பணிகளில் சுறாவளியாகச் சுழல்கிறார்கள். பில்லுச்சேரி சின்னப்பிள்ளையின் தலைமையில், பாதிக்கப்பட்ட பகுதிகளில் போய்த் தங்கியிருப்பது, மீனவக் குடும்பங்களில் கலந்து பேசுவது, வேறு எங்கிருந்தும் அவர்களுக்குக் கிட்டியிராத அவசியத் தேவைகளுக்கு பணமாக, அல்லது பொருள்களாகவே அவர்களுக்குத் தந்து வருவது இவர்களின் ஸ்டைல். ஆனால் இதற்கென எவரிடமும் நன்கொடை வசூலிக்கவில்லை இவர்கள். அந்த ஒரு கோடி ரூபாயும் களஞ்சியம் மகளிர் சுய உதவிக் குழுவினரின் சேமிப்பிலிருந்து தரப்பட்டுள்ளது என்பதுதான் இவர்களின் தனிச்சிறப்பு. நிவாரணப் பணிகளை இத்துடன் நிறுத்தி விடாமல், மீனவர்களின் மறுவாழ்வுக்காக, தொடர்ந்து வரும் இரண்டு வருடங்களில் ஏறத்தாழ ஐம்பது கோடி ரூபாய் வரையிலான புனர் நிர்மாணப் பணிகளை செய்யப் போகிறதாம் சின்னப்பிள்ளையின் களஞ்சியம்.



* சின்னப்பிள்ளை

விவேக் ஓபராயின் சேவையை தலைப்புச் செய்தியாக்கிய மீடியா, சின்னப்பிள்ளையின் களஞ்சியம், ஆற்றி வரும் சுனாமி நிவாரணப் பணியைப் பற்றி, பத்திச் செய்திகூட வெளியிடாதது கொடுமையிலும் கொடுமை!

- இருள்நீக்கியான்

கே.கே.நகர் காவல் நிலையத்தின் எதிரே இருக்கிறது அந்த ஆட்டோ நிறுத்தம். ஆட்டோக்கள் அணி வகுத்து நிற்கும் அங்கேதான் அபியின் ஜாகை. முழுப் பெயர் அபிபுன்னிசா. பருவச் சிட்டாக கனவுகளோடு சிறகடித்துப் பறக்க வேண்டிய பதினெட்டு வயதில், ஆட்டோ ஓட்ட வந்து விட்டது இந்த இஸ்லாமியப் பெண்மை. அபி ஆட்டோ என்றால் அந்தப் பகுதி முழுவதும் பிரபலம். பள்ளிப் பிள்ளைகளிடமோ, அபி சொல்லும் அரபு நாட்டுக் கதைகள் மகாபிரபலம். கட்டுப்பாடுகள் நிறைந்த இஸ்லாமிய சமுதாயத்திலிருந்து அபி எப்படி ஆட்டோ ஓட்டுனராக முடிந்தது?

''அதை விபத்துன்னுதான் சொல்லணும். என் தம்பி அப்துல் ரஸாக் ஆட்டோ டிரைவர். அப்பா டீக் கடைத் தொழிலாளி. இரண்டு பேரின் வருமானத்திலும் பட்டினி இல்லாமல் சாப்பிட முடிஞ்சுது. திடீர்னு அம்மாவுக்கு பைபாஸ் ஆபரேஷன். நிறைய மருந்து மாத்திரை வாங்க வேண்டியிருந்துச்சு. நானும் ஆட்டோ ஓட்டுறேன்னு தம்பிகிட்டே சொன்னேன். அதெல்லாம் நடக்குற காரியம் இல்லேன்னான். நான் விடலே. மூணு மணி நேரத்துலே ஆட்டோ ஓட்டக்கத்துக்கிட்டேன். மறுநாளே வாடகை ஆட்டோ எடுத்துகிட்டு சவாரிக்குக் கிளம்பிட்டேன். படிப்பைப் பாதியிலே விட்டுட்டோம்கிற வருத்தம் இருந்தாலும், அம்மாவை சந்தோஷமா வெச்சுகிறோம்கிற திருப்தி இருக்கு.

''அம்மா ஆட்சியிலே எந்த பயமும்







பூவல்ல... புயல்!

இல்லாமல் இரவு பதினொரு மணிவரை ஆட்டோ ஓட்டு றேன். சொந்தமா ஒரு ஆட்டோ இருந்தா, என் குடும் பத்தோட தலையெழுத்தையே மாத்திடுவேன்'' என்று சொல்லும் அபிபுன்னிசா அதி.மு.க. கட்சி உறுப்பினர். ''போலீஸ்காரங்கன்னா எல்லோரும் தப்பாப் பேசுறோம். என் விஷயத்துலே கே.கே.நகர் காவல்துறை எனக்கு நிறைய உதவிகள் செஞ்சிருக்கு. எந்தப் போலீசும் என் வண்டியிலே ஓசிச் சவாரி வந்ததில்லே'' என்கிறார். இவரது அனு பவத்தில் கண்ட கசப்பான உண்மை; பெண்கள் இவரது ஆட்டோவில் ஏறத் தயங்கு கிறார்களாம். "பல பெண் கள், ஒழுங்கா ஓட் டத் தெரியுமா என்று நேரடி யாகவே கேட் டுத் தன்னம்பிக் கையைக் குறைக் கிறாங்க" என்கிறார்.

வியாசர்பாடியிலிருந்து புறப்பட்டு பாரிமுனை பூக்கடையை நோக்கி வந்து கொண்டிருக்கிறது முப்பது மூன்று எண்கொண்ட மாநகரப்பேருந்து. பள்ளிக்கூட, அலுவலகப் பர பரப்பில் பிதுங்கி வழியும் பேருந் துக்குள்ளிருந்து ''பிராட்வே யெல்லாம் இறங்கு!'' என்ற கனீர் பெண் குரல். திபுதிபுவென்று கூட்டம் இறங்கி கலைந்து போன தும், பார்வையை பேருந்தின்

உள்ளே செலுத்தினால், கைவிரல்களின் இடுக்கில் ரூபாய் நோட்டுகளும், கண்களில் ஒளிரும் கடமையுமாக "டிக்கெட்! டிக்கெட்!" என்று நகரும் பேருந்தில் வேகமாக நகர்கிறார் நாற்பது வயது சாந்தி. தமிழகத்தின் பெண் நடத்துநர்களில் ஒருவர்.

"பத்தாங்கிளாஸ் படிச்சப்போ பஸ்லே தான் பள்ளிக்கூடத்துக்குப் போய் வருவேன். பஸ்லே ஏறும் அத்தனை பேரும், கண்டக்டருக்குத் தர்ற மரியாதை என்னை கவர்ந்துச்சு. நாலு பேர் மதிக்கிற இந்த வேலைக்கு நாமளும் ஏன் வரக் கூடாதுன்னு தோணிச்சு! படிப்பு முடிஞ்சதும் பர்மிட் எடுத்து பதிவு பண்ணி வெச்சேன். நம்பவே முடியலே, எம்.ஜி.ஆர். ஆட்சியிலே வேலை கிடைச்சுது. இருபத்தஞ்சு வருஷம் ஓடியே போச்சு" எனும் சாந்தியின் கணவரும் ஒரு நடத்துநர்.

"கூட்ட நெரிசல்ங்கிறது இப்போ ஒரு பத்து வருஷமாத்தான் அதிகம். அதுவும் பழகிப்போச்சு. எல்லாம் தினசரி பார்த்துப் பழகின முகங்கள். பகல் ஷிப்டுக்குப் போக அதிகாலை மூணு மணிக்கு எழுந்து வீட்டு வேலை முடிச்சுட்டு, ஆறுமணிக்கெல்லாம் டெப்போவிலே இருக்கணும். இதுதான் பெரிய அவஸ்தை" என்றவர், "என்னோடு பணிக்கு வரும் ஓட்டுநர்களை இஷ்டத்துக்கு மிரட்டுவேன். அவங்களும் மனசுலே ஏதும் வெச்சுக்க மாட்டாங்க. ஈகோ பார்க்க மாட்டாங்க" என்கிறார்.

முப்பது வயது வசந்திக்கு செங்கல்லும், சிமெண்ட் கலவையும் சுமக்கும் சித்தாள் வாழ்க்கை. "பேருதாங்க வசந்தி. ஆனால் வெயில், மழைன்னு கெடந்து காயறேன். கைநிறைய சம்பாதிக்கிற கொத்தனார் புருஷனுக்கு வாக்கப்படுறோம்ன்னு சந்தோஷமா கழுத்தை நீட்டினேன். வாழ்க்கை நல்லாத்தான் ஆரம்பிச்சுது. திடீர்னு கட்டுமானம் சரிஞ்சு, கைமுறிஞ்சு வீட்டுக்குக் கூட்டியாந்தாங்க. வந்தவங்க... அன்னக்கி சம்பளம் நூறு ரூபான்னு குடுத்துட்டுப் போயிட்டாங்க. அடுத்த நாள் அவரை எப்படி கவனிச்சுக்கறது? வேற வழியில்லாம தலையிலே சும்மாடு கட்டி, செங்கல் தூக்க வந்துட்டேன். நல்லவேளையா 'கைமுறிஞ்சவன் பொண்டாட்டி, வேலை குடுங்கப்பா'ன்னு பரிதாபப்பட்டு சேர்த்து இட்டாங்க. அப்போ நாலு மாசம் முழுகாம இருந்தேன்.

"சரி, நாமதான் மண்ணும் கல்லும் சுமக்க வந்தோம். நம்ம பிள்ளைகளை யாவது நல்ல படிப்பு படிக்க வைக்கலாம்ன்னு இங்கிலீஷ் மீடியத்துலே சேர்த்தேன். ஆனா வருஷத்துக்கு பதினைஞ்சாயிரம் கட்ட முடியாம, இப்போது அரசாங்கப் பள்ளிக் கூடத்துலே படிக்குதுங்க" என்று கலங்கிய வசந்திக்கு லட்சியம் இருக்கிறது.

"யார் யாரோ கட்டுற வீட்டுக்கெல்லாம் வேலை செய்யறோம். என் பிள்ளைகள் தலையெடுத்து, சொந்தமா வீடு கட்டும்போது, அதுக்கு கல் சுமக்கணும்ங்க. அப்போதான் பொறந்த பொறப்புக்கு அர்த்தம் இருக்கும்."



திருவல்லிக்கேணியை ஒட்டிய நடுக்குப்பம் மீன் சந்தையில் கடை பரப்பியிருக்கிறார் நாகவள்ளி. "கடலை நம்பி வாழறோம். ஊட்டுகாரரு கடலுக்குப் போயி கூலியா கிடைக்கிற மீனை எங்கிட்டே கொடுப்பார். நான் இங்கே கடைபோடுவேன். சுனாமி வந்து எங்க வாழ்க்கையவே சுருட்டிப் போட்டுருச்சு. ஜனங்க மீன் திங்க பயந்து போயி கெடக்காங்க. இப்போதான் ரெண்டு நாளா கடைபோட்டிருக்கேன். அரை வயிறு நிறையுது.

விக்காத மீனையெல்லாம் நாங்கதான் சமைச்சுத் திங்குறோம்.

சரளா - வைஷ்ணவின்னு எங்களுக்கு ரெண்டு பொண்ணுங்க! எப்பாடு பட்டாவது, இந்த நாறுன பொளப்பு பக்கம் அந்தப் பிள்ளைகள வர வுடாம பண்ணிடணும்ங்க" சொல்லிக் கொண்டே, வந்த வாடிக்கையாளரிடம், "கூறு இருபத்தஞ்சு ரூபா சார்" என்கிறார், வந்தவரோ பேரம் பேசாமல், முப்பது ரூபாயைக் கொடுத்துவிட்டு "மீதிய வெச்சுக்கம்மா" என்கிறார். நாகவள்ளியின் கண்கள் கலங்குகின்றன.



வடபழனி முருகன் கோவில் ராஜ கோபுர வாசல். முகம் நிறைய புன்னகைப் பூக்கள்! தட்டு நிறைய மல்லிகைப் பூக்கள். "சார்! இங்கே வாங்க சார்! முழம் நாலு ரூபா! விட்டு அறுக்கிறேன்" என்று கூவி அழைக்கிறார் பரமேஸ்வரி. இங்கே எல்லோரும் இவரை "ஏ! புயல்!" என்று அழைக்கிறார்கள். சைரன் ஒலிகளோடும், இறுக்கமான போலீஸ் பாதுகாப்பு வாகனங்களோடும் வடபழனி முருகன் கோவிலுக்கு வரும் விஐபிக்கள், போலீஸ் அதிகாரிகளின் வாகனங்களை, துளிக்கூட பயமில்லாமல் நெருங்கி, பூ விற்று விடுவதில் கில்லாடியாம் இந்த பரமேஸ்வரி. சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி சுபாஷன் ரெட்டி, டிஜிபி, மாநில அமைச்சர்கள் என்று விஐபி கார்களைப் பார்த்தால் விடமாட்டார் என்கிறார்கள். தேவயானி இவரைப் பார்த்து 'சீரியல்லே நடிக்கிறியா?' என்று கேட்டிருக்கிறார்.

"வீட்டுக்காரரும் பூ வேலைதான் செய்றார். ஆனால் ஒருத்தர் சம்பாதிச்சு குடும்பத்தை ஓட்ட முடியலீங்க. விஐபிங்க கார் வரும்போது, போலீஸ்காரங்க வந்து துரத்தி விடுறாங்க. விஐபி வர்றதே விசேஷ நான்தான். அப்போதான் பத்து ரூபாய் அதிகமா கிடைக்கும். அதுலே மண்ணை அள்ளிப் போடலாமா? அடிபட்டாலும் பரவாயில்லைன்னு நான் துணிச்சலா வியாபாரம் பண்றேன். இந்த வடபழநி ஆண்டவன்தான் காப்பாத்தணும். நம்மளை மனித வெடிகுண்டுன்னு நெனைக்காம இருந்தால் சரி" என்று துடுக்காகப் பேசும் பரமேஸ்வரிக்கு ஓர் ஆசை.

"தனியா ஒரு பூக்கடை வெச்சு நாலு பேருக்கு வேலை கொடுக்கணும்."

கட்டுரை, உள்படங்கள்: **ஜெய்**

அட்டை வண்ணப்படம்: **ஸ்ரீஹரி**

"ஜெயிலுக்குப் போயிட்டு வந்தது லேர்ந்து தலைவருக்கு எட்டுக்கு மேல எண்ணத் தெரியலையாமே...ஏன்?"

"அவர் செல்லுல அவ்வளவு கம்பிகள்தான் இருந்துச்சாம்!"

- எம்.ஆர்.மூர்த்தி



33

சிலையாக்கிய சிலை



'உயிர்களுக்கும் கதிரவனுக்கும் என்ன தொடர்பு? எத்தனையோ சக்திகள் உலகில் இருந்தாலும், உயிர்களைத் தட்டி எழுப்பவும், தான் மறையும்போது உயிர்களை அடங்கி உறங்கச் செய்யவும் கூடிய சக்தியை மட்டும் கதிரவன் ஏன் ஏற்றுக் கொள்ள வேண்டும்? மற்ற சக்திகளுக்கு ஏன் இந்தச் சக்தி இல்லை?' - சற்று நேரம் பஞ்சணையில் கிடந்தபடியே சிந்தித்த பராந்தகன், அருகில் பகதத்தன் இல்லாததைக் கவனித்து "எங்கே சென்றான் இவன்? கதிரவன் உதித்து ஒரு ஜாம நேரம் ஓடியிருக்கும் போலிருக்கிறதே" என்று எண்ணியபடியே சாளரத்தை அடைந்து வெளியே நோக்கினான்.

அவன் கண்ணெதிரே விரிந்த காட்சி அவன் சிந்தனைகளைப் பட்டென்று அறுத்து பிரமிப்பை ஊட்டியது.

ஊர்த் தலைவரின் இல்லத்துக்கெதிரே அந்த வீதி சோழர் படை வீரர்களால் நிறைந்து கிடந்தது. வீதியைத் தாண்டியும் வீரர்களின் அணிவகுப்பு நீண்டிருந்தது. வாட்களும், வேல்களும், அம்புகளும் விற்களும் கதிரொளியில் பளபளத்தன. வீதியின் முனையில் போர்ப் புரவிகளின் வரிசையும், போர் ரதங்களும் தெரிந்தன. வீரர்களின் கவசங்களும், மார்பில் இருப்பு வலைகளும் மின்னின. ஏதோ புத்துணர்வும், புதிய ரத்தமும் உடலெங்கும் பாய்வதாக உணர்ந்தான் பராந்தகன். செங்கட்சோழரின் மறைவுக்குப் பின் நசித்துவிட்டதாக அவன் அறிந்திருந்த சோழர் படையை இந்த அளவுக்கு உருவாக்கவும், பயிற்சியளிக்கவும் விக்கிரமவரையர் என்ன பாடுபட்டிருக்கிறார் என்பதை அந்தக் காட்சி உணர்த்தியது. இனி சோழ நாடு எந்த எதிர்ப்பையும் எதிர்நோக்கவல்ல வலிமையான நாடாக உருவாகத் தொடங்கிவிட்டது என்பதை அந்தப் படை உணர்த்தியது. சோழ

விஷ்வக்ஸேனன்

நாட்டின் விடுதலைக்காக எத்தனை சோழ வாலிபர்கள் போராடப் புறப் பட்டிருக்கிறார்கள் என்பதை அந்த வீரர்களின் முகங்கள் உணர்த்தின.

பராந்தகனை அந்த பிரமிப்பிலிருந்து மீட்க பின்னாலிருந்து "பிரபு, பிரபு" என்று அழைத்தது ஒரு குரல்.

பராந்தகன் திரும்பினான்.

எதிரில் நின்ற சோழ வீரன் தலை வணங்கினான். "பிரபு, தாங்கள் விழித்ததும் ஸ்நானாதிபாதிகளை விரைவில் முடித்துக் கொண்டு உடனே அழைத்து வர நம் படைத்தலைவர் உத்தரவு" என்றான் அவன்.

"என்ன, படைத்தலைவர் குடந்தைக்கு வந்துவிட்டாரா? ஏன் எனக்கு உடனே தெரிவிக்கப்படவில்லை? எப்போது வந்தார்?" பராந்தகனது கேள்வியில் வியப்பும், இலேசான பதற்றமும்கூட தொனித்தது.

"தாங்கள் உறங்கச் சென்ற இரு நாழிகைக்கெல்லாம் நம் படைத் தலைவர் வந்துவிட்டார். வந்தவுடன் ஊர்த் தலைவரை விசாரித்தவர், தங்களை எழுப்ப வேண்டாமெனவும், விழித்த பின்பே அழைத்து வரவும் உத்தரவிட்டார்."

துரிதமாகச் சென்று ஸ்நானத்தையும், உணவையும் முடித்துக்கொண்ட பராந்தகன் "வீரனே, பகதத்தன் எங்கே?" என்றான்.

"அவர் மந்திராலோசனை சபையில் இருக்கிறார் பிரபு" பணிவுடன் வந்தது வீரனின் பதில். வேறொன்றும் கேளாமல் வீதியின் மறுகோடியில் கம்பீரமாக எழுந்து நின்ற ஆராவமுதன் ஆலயத்தின் மண்டபத்தில், மந்திராலோசனை சபை கூடியிருப்பாகத் தெரிவித்த வீரனுடன் நடந்தான் பராந்தகன். ஆலயத்துக்குச் செல்பவர்களுக்கு இடையூறு இல்லாமல் அணிவகுத்திருந்த அணிவகுப்பினூடே நடந்தவன், மண்டபத்தினுள் சோழர் படையின் உப தலைவர்கள் அனைவரும் அமர்ந்திருப்பதையும், தான் உள்ளே நுழைந்ததும் விக்கிரமவரையரைத் தவிர அனைவருமே எழுந்து நின்று வரவேற்றதையும் கண்டு ஒருகணம் திகைத்தான். அவனது நடை தயங்கியதையும், அவன் விழிகளில் படர்ந்த பிரமிப்பையும் கவனித்த விக்கிரமவரையரின் முகத்தில், அதற்கான காரணத்தை ஊகித்துவிட்டதால் முறுவலொன்று விரிந்தது.

மகுட வைரம்

படைத்தலைவரை நெருங்கி வணங்கிய பராந்தகன், "படைத் தலைவரே, இங்கிருக்கும் உபதலைவர்கள் பல போர்க்களங்களைக் கண்டவர்கள். தங்கள் வீரத்தையும், திறமையையும் போர்களில் பலமுறை நிரூபித்தவர்கள். நான் பெயருக்குக்கூட சோழ நாட்டுக்காக ஒரு போரையும் கண்டிராதவன். இவர்கள் எழுந்து நின்று என்னை வரவேற்பது முறையா தலைவரே? இத்தனைக்கு நான் தகுதியானவனல்ல" என்றான் சங்கடம் தொனித்த குரலில்.

விக்கிரமவரையரின் பதில் நிதானமாக வந்தது. "பராந்தகா, இத்தனை வீரர்கள் இரு தலைமுறைகளாக சாதிக்க இயலாததை நீ சாதித்திருக்கிறாய். வாளைப் பிடிக்கவும் அறியாத நீ, ராஷ்டிரகூடருக்கு நடுவில் போராடி உக்ரோதயத்தை மீட்டதே உன் தகுதியை நிரூபிக்கப் போதுமானது. பாண்

டிய நாட்டில் நீ சாதித்திருக்கும் காரியங்களால் பாண்டிய வரகுணர் நமக்கு உதவவும், சோழ நாடு விடுதலை பெற்றபின் எந்தத் தலையீடும் இன்றி நம்மிடம் சோழ நாட்டின் நிர்வாகத்தை ஒப்படைக்கவும் ஒப்புக் கொண்டிருக்கிறார். சோழர் படையில் எனக்கடுத்த உபதலைவன் பதவியை உனக்களிக்கவும், இந்தச் சபை ஒருமித்துத் தீர்மானித்திருக்கிறது. ஆனால் நீ எந்தப் பதவியையும் விரும்பாதவனென்பதையும் அறிவேன். இந்தப் போர் முடிந்தபின் உப தலைவனாகத் தொடர்வது உன் விருப்பம். இது என் உத்தரவு" என்றவர் திரும்பி, "இனி சபை துவங்கலாம்" என்றார்.

புரவிப் படைத் தலைவரும், மற்றவர்களைவிட மூத்தவருமான உபதலைவர் எழுந்தார். "படைத் தலைவரே, இறுதியாக நாம் அறிந்த செய்திகளின்படி காஞ்சியிலிருந்து வெளியேறிய துருவனைத் தொடர்ந்து ஆறாயிரம் ராஷ்டிரகூட வீரர்களே சென்றிருக்கிறார்கள். காஞ்சியிலிருக்கும் மீதிப்படை, மல்லைத் துறைமுகத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. அதுவுமன்றி பல்லவ மன்னர் முன்பு அனுப்பிய ஓலையின்படி, சோழ நாட்டின் பல ஊர்களிலிருமிருக்கும் ராஷ்டிரகூடர்கள் காஞ்சிக்குத் திரும்பவில்லை. இதன் பொருள் விளங்கவில்லை."

அடுத்திருந்த உபதலைவர் தொடர்ந்தார், "அது மட்டுமல்ல படைத் தலைவரே, சோழ நாட்டின் ஊர்களிலிருக்கும் ராஷ்டிரகூடர்கள் அந்தந்த ஊர்களிலிருந்து புறப்பட்டார்களேயொழிய, அவர்கள் காஞ்சியை நோக்கிச் செல்லவில்லை. மாறாக, சோழ நாட்டுக்குள்ளேயே சோழர் கடற்கரையை ஒட்டியுள்ள பகுதிகளை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்று மாலைக்குள் அனைத்து ராஷ்டிரகூடர்களும் ஏறக்குறைய நாகையை ஒட்டிச் செல்லும் பாதையை அடைந்து விடுவார்கள்"

விக்கிரமவரையரின் கூர் விழிகள் பராந்தகன் மீது பதிந்தன. "பராந்தகா, ராஷ்டிரகூடர் படைகள் இப்படி மூன்று திசைகளில் நகர்வதற்குத் தகுந்த காரணம் இருக்க வேண்டும். பல்லவ மன்னர் முன்பு தெரிவித்திருந்த திட்டத்திற்கு மாறாக இது நடந்து கொண்டிருக்கிறது. காஞ்சியை விட்டு இறுதியாக வந்தவன் நீதான். இதற்குரிய காரணம் என்னவென்பதை உன்னால் ஊகிக்க முடிகிறதா?"

பராந்தகன் ஒருகணம் விழிகளை மூடினான். அவன் மனதில் காஞ்சியின் வைகுந்தன் ஆலயத்து கோபுரம் வெகு கம்பீரமாக எழுந்தது. ஆலயத்தின் பிராகாரத்தில் பல்லவ மன்னன் நந்திவர்மனை தான் இறுதியாகச் சந்தித்த காட்சியும் எழுந்தது. நந்திவர்மன் கூறியவற்றை ஒருகணம் எண்ணியவன், மீண்டும் விழிகளைத் திறந்து படைத் தலைவரை நோக்கினான்.

"படைத் தலைவரே, பல்லவ மன்னர் என்னிடம் தெரிவித்த விவரங்களின்படி, மகாராணியார் அவர் எதிர்பார்த்ததைவிட வேகமாகச் செயல்பட்டிருக்க வேண்டும். மகாராணியார் ஏற்கெனவே துருவன் வருகையை அறிந்ததும் மகாராஜா கோவிந்தருக்கு ஓலையனுப்பிவிட்டார். துருவன் காஞ்சியிலிருந்து தப்பியபின்பு தொடர்ந்து செல்ல ஆறாயிரம் வீரர்களே சென்றிருக்கிறார்கள் என்றால், போதுமான படையை கோவிந்தர் ராஷ்டிரகூடத்திலிருந்து துருவனை எதிர்கொள்ள அனுப்பியிருக்கிறார் என்று பொருள்."

"அப்படித்தானிருக்க வேண்டும். மேலே சொல்."

"பல்லவ மன்னர் துருவனுக்கு உதவ தம் நண்பர் உதயசந்திரனுக்கு உத்தரவிட்டிருக்கிறார். துருவனது படைப் பிரிவும் ஏற்கெனவே வடமேற்கு எல்லையில் பாசறை அமைத்திருக்கிறது. எனவே காஞ்சியிலிருந்து சென்ற ஆறாயிரம் வீரர்களைக் குறித்தோ, துருவனைக் குறித்தோ நாம் கவலைப்படத் தேவையில்லை. காஞ்சியின் மற்ற வீரர்கள் மல்லைத் துறையை நாடிச் செல்வதும், இங்கிருக்கும் ராஷ்டிரகூடர்கள் சோழர் கடற்கரைப் பாதையை அடைந்து நாகையை நோக்கி நகர்வதும்தான் நாம் கவனிக்க வேண்டியவை. மல்லைத் துறையில் பல்லவர் போர்க்கலங்கள் நிற்கின்றன. காஞ்சியின் ராஷ்டிரகூட வீரர்கள் அந்தக் கலங்களை அடைந்தால், நேராக நாகையை ஒரே நாளில் வந்தடையலாம். இங்கிருக்கும்

"என்னய்யா... ஜனங்களெல்லாம் பயந்து அலறி ஓடிக்கிட்டிருக்காங்க. பூகம்பம் எதுவும் வந்திருச்சா?"

"நம்ம ஹீரோயின் முகத்தை மேக்-அப் இல்லாம பார்த்துட்டாங்க சார்..."

- தஞ்சை அனார்கலி



ராஷ்டிரகூடர்கள் நாகையை அடைந்தால், வரும் கலங்களிலிருக்கும் வீரர்களுடன் இணைந்து, பெரும்படை ஒன்று உருவாகும். தஞ்சையையும், அங்கிருக்கும் பாண்டிய மன்னரையும் தாக்குவதாக அவர்கள் திட்டம் இருக்கலாம்'' என்ற பராந்தகன் தான் கூறியவை உபதலைவர்கள் புத்தியில் உறைய சற்று அவகாசம் கொடுத்தான்.

உள்ள நிலைக்கு பராந்தகன் கூறிய விளக்கம் மிகப் பொருத்தமாகவே இருப்பதாகத் தோன்றியது படைத் தலைவருக்கும். உபதலைவர்களுக்கும்.

''பராந்தகா, நாம் அடுத்து என்ன செய்யலாமென்று எண்ணுகிறாய்?''

''படைத்தலைவரே, பல்லவ மன்னரின் நோக்கமும், நமது நோக்கமும் ஒரே பாதையில்தான் இருக்கின்றன. எனவே அவரது திட்டங்களில் மாற்றமேதும் இருந்தால், கண்டிப்பாய் நமக்குத் தெரிவிப்பார். அதுவரை நாம் பொறுமையாக இருப்பதே நலம். போரைச் சந்தித்தபின் சந்தர்ப்பங்களுக்கேற்ப திட்டம் வகுப்பதைவிட, சரியான திட்டத்துடன் போரை எதிர்கொள்வது எளிதான, நிச்சயமான வெற்றியைப் பெற்றுத் தரும் என்பது தாங்கள் அறியாததல்ல. நமது படைபலம் ராஷ்டிரகூடர் படைக்குச் சமமாக அல்லது குறைவாக இருக்கிறது என்பதுதான் என் யூகம். எனவே சரியான திட்டத்துடன் போரை எதிர்கொள்வதே சிறந்தது'' என்றான் பராந்தகன்.

''பராந்தகன் கூறுவதில் பொருளிருக்கிறது. திருவெள்ளறையிலிருந்து ராஜசிம்மன் புரவிப்படையுடன் வந்து கொண்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறான். அவன் வந்து சேரவும் அவகாசம் தேவை. எனவே பல்லவ மன்னரிடமிருந்து ஓலையேதும் வருகிறதா என்பதை இரு தினங்களுக்குப் பொறுத்துப் பார்க்கலாம். சபை நாளை மீண்டும் கூடலாம்'' என்றார் விக்கிரமவரையர்.

பராந்தகன், அவரிடம் விடைபெற்று பகதத்தனுடன் ஆலயத்தினுள் நடந்தான். பிரும்மாண்டமான தேர் ஒன்று பூமியிலிறங்கி நிற்பதைப் போல அமைந்திருந்த ஆராவமுதனின் சன்னிதியையும், சார்ங்கம், சக்கரம், கதை, சங்கு என ஆயுதபாணியாய், அபயஹஸ்தம் உயர்த்தி ஸேவை சாதிக்கும் அழகையும், திருமங்கை மன்னன் அளித்த சித்திரத் தேரையும் கண்டு பிரமித்து வெகுநேரம் நின்றான்.

மெல்ல வெளியே வந்தவனை திருமாமணி மண்டபத்தின் வடக்கே இருந்த மற்றொரு மண்டபம் ஈர்த்தது. ஒவ்வொரு தூணிலும் பழைமையான பல்லவரின் சின்னமான சிம்மம் பொறிக்கப்பட்ட அந்த மண்டபத்தை நோக்கி அவன் கால்கள் நடந்தன. மண்டபத்தின் இடதுகோடியை அடைந்த பராந்தகன் சட்டென்று நின்றான். எதிரிலிருந்த தூணை வெறித்தன அவன் விழிகள்.

''இதுதான் பராந்தகா அந்தச் சிற்பம்'' அருகிலிருந்த பகதத்தனின் குரல் என்றுமில்லாதபடி குழைந்து கிடந்தது.

பராந்தகன் பதிலேதும் கூறவில்லை.

அந்தத் தூணின் அடிப்புறத்தில் உயரமும், மல்லனின் இடமான உடலமைப்புடனும் வெகு கம்பீரமாக நின்றிருந்தார் பல்லவச் சக்கரவர்த்தி நரசிம்மவர்மர். உருவிப் பிடித்திருந்த அவரது வாளின் பிடியில் பல்லவச் சின்னம் தெளிவாகத் தெரிய, அதை அடுத்து ஒரு மலர் மாலை அதிலிருந்து தொங்கியது. அது கல்லில் வடித்த மாலையென்பதை தொட்டுப் பார்த்தே உணர வேண்டும் என்பதை அதன் வேலைப்பாடுகள் தெரிவிக்க, அந்த மாலையைச் சூட்டி விட்டு, நாணத்தில் தலை குனிந்து வெகு ஒயிலாக நின்றாள் ஓர் அழகி.

நரசிம்மரின் பார்வை மட்டுமல்ல, பராந்தகனின் பார்வையும் அந்த அழகியின் மீது வெகு நேரம் பதிந்து கிடந்தது.

(தொடரும்)



மைக்ரோவேவ் மாமி

ஹாய்! போன வாரம் நான் பண்ணின பப்பாளி பால் அல்வாவை சாப்பிட்டுட்டு உங்க குழந்தேள்லாம் ரொம்ப எனர்ஜடிக்கா படிச்சிண்டிருக்காளா...? நேக்கு எப்படித் தெரியும்னு பார்க்கறேளா... எல்லாத்தையும் தான் நம்ம கும்மிடிப்பூண்டி வனஜா, திருப்பூர் தேவகி மாதிரி என்னோட ரசிகாஸ் போட்ட லெட்டர்ஸ் சொல்றதே... சரி மேட்டருக்கு வருவோம். இந்த வீக் சொல்லித் தரப்போற ஐட்டம் கொஞ்சம் ரிச்சான சூப்.

இதுக்கு என்னென்ன தேவைப்படறது தெரியுமோ! ஒரு பாக்கெட் நூடுல்ஸ், நாலு டேபிள் ஸ்பூன் முந்திரி, அரை டேபிள் ஸ்பூன் சீரகப்பொடி. அப்புறம் இரண்டு தக்காளியை நன்னா பிழிஞ்சி சாறெடுத்து வச்சிக்கோங்கோ...



ரிச்சி சூப்!

அத்தோட பொடியா நறுக்கின சீஸ் (அதாங்க பாலாடைக்கட்டி) நாலு டேபிள் ஸ்பூன், கொஞ்சூண்டு உப்பு, அவ்ளோதான்.

இப்போ ஒரு பாத்திரத்துல ஒண்ணரை கப் ஜலத்தை விட்டு, அதுல நூடுல்ஸ், முந்திரி, தக்காளி, சாறு, சீரகப்பொடி நாலையும் கலந்து ஒரு மூணு நிமிஷத்துக்குக் கொதிக்க விடுங்கோ. நன்னா கொதிச்சுடுத்துன்னா, அதன் மேல பொடியா நறுக்கின சீஸை மேலோட்டமா தூவி விட்டா... சூப் ரெடி. கால்ல ரெக்கையை கட்டிண்டு ஆஃபீஸுக்குப் பறக்கறவாளுக்காகவே ஸ்பெஷலா சொல்லித் தரணும்னு நினைச்சி, எட்டே நிமிஷத்துல தயார் பண்ணினேன். ஸோ... நீங்களும் டிரை பண்ணுங்கோ. முக்கியமான விஷயம்... இப்போ நான் சொல்லித் தந்தது ரெண்டு பேர் சாப்பிடறதுக்குத் தேவையான அளவு. உங்க வீட்ல எத்தனை பேர் இருக்காளோ, அதுக்கேத்த மாதிரி ரேஷியோவை மாத்திக்கோங்கோ!

9.3.2005 முதல் 15.3.2005 வரை



கும்ப ராசி நடிகை கோபிகாவுக்கு அனுகூலமான திருப்பங்கள் காத்திருக்கு.

மேஷம்: வாழ்க்கையில் புதிய திருப்பங்கள், புது அறிமுகங்கள்னு உற்சாகமான வாரங்க இது. சரளமான பண வசதி இன்னும் தெம்பூட்டும். ஆபீஸ்ல கடினமான வேலைகளை திறமை காட்டி முடிக்க வேண்டி வரும். வெற்றியும் பாராட்டும் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில வர வேண்டிய பாக்கி வந்து சேரும். குடும்பத்தில ஒற்றுமை பலப்படும். குருபலனால சுப காரியங்கள் ஈடேறி மகிழ்ச்சி கூடும். பெண்களுக்கு உற்சாகமான, ஆரோக்கியமான வாரம்.

ரிஷபம்: தெய்வ பலமும், தெய்வீக ஈடுபாடும் கூடி வெற்றிகரமா எல்லாக் காரியத்தையும் முடிச்சு வைக்கும். துணிவு, தன்னம்பிக்கை கூடும். ஆபீஸ்ல புதிய திருப்பங்கள் சிலது காத்திருக்கு. தொழில், வியாபாரத்தில திருப்தியான சூழ்நிலை உருவாகும். சுபகாரியங்கள் ஈடேறும். திருமணம், பிள்ளைப் பேறு என்று காத்திருப்பவர்களுக்கு சுபவேளை கூடி வரும்.

மிதுனம்: இதுவரை தாமதம், தடங்கல், எதிர்ப்பு என்று தள்ளிப் போன காரியங்கள், தடைகள் விலகி முன்னேறத் துவங்கும். கல்வி, விஞ்ஞானம் என்று இருப்பவர்கள் சாதனை புரியும் நேரம் இது. ஆபீஸில் இதுவரை தாமதமான உங்கள் கோரிக்கைகள் நிறைவேறும். தொழில், வியாபாரம்னு இருக்கிறவங்களுக்கு கொடுக்கல் - வாங்கல் கை கொடுக்கும். குடும்பத்தில மகிழ்ச்சி நிலவும். பெண்களுக்கு எண்ணம் போல எல்லாம் நடக்கும்.

கடகம்: துணிவும், நம்பிக்கையும் சேர்ந்து உங்களை வழி நடத்தும் வாரம் இது. சிறு தடைகள், குறுக்கீடு என வந்தாலும் உடனே நிவாரணம் ஏற்படும். எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். ஆபீஸில் சிலருக்குப் பதவி உயர்வு, இடமாற்றம் ஏற்படலாம். தொழில், வியாபாரம் கொஞ்சம் எச்சரிக்கையா செய்வது நல்லது. குறிப்பா, குடும்பத்தில செலவுகள் கொஞ்சம் காத்திருக்கு, உஷாரா இருங்க. பெண்களுக்கு அனுகூலங்கள் கூடும்.

சிம்மம்: திட்டம் போட்டபடி எல்லாக் காரியங்களும் நிறைவேறும். சகலவிதங்களிலும் முன்னேற்றமான வாரம். மறைமுக, நேர்முக எதிர்ப்புகள் மறையும். ஆபீஸ்ல புதுப் பதவி, இடமாற்றம் சிலருக்குக் கிடைக்கும். தொழில், வியாபாரம் செழிக்கும். குடும்பத்தில் பொருளாதார சிரமம் நீங்கி சுபிட்சம் உண்டாகும். பெண்களுக்கு ஆரோக்கிய மேன்மை, தெய்வீக ஈடுபாடு, உற்சாக மனநிலை ஏற்

நடக்குமென்பார்; நடக்கும்!

அக்னிசர்மா

படும்.

கன்னி: கல்வி, விஞ்ஞானம், ஆராய்ச்சி என்று இருப்பவர்களுக்கு ஏற்ற மான வாரம். தெய்வீக ஈடுபாடு, புதிய வர்கள் அறிமுகம், பண வசதி அனைத் தும் கிடைத்து உற்சாகமான, தெளிவான மனநிலையைத் தரும். ஆபீஸில் சுமுக மாகவும், நிதானமாகவும் பழகி வருவது நல்லது. தொழில், வியாபாரம் செய்பவர் களுக்கு சாதாரணப் பலன்கள் கிட்டும். செலவினம் சற்று கூடும். குடும்பத்தில் இருந்த சங்கடங்கள் விலகத் தொடங்கி, மகிழ்ச்சி கூடும். ஆரோக்கியத்தில் அக் கறை செலுத்துவது நல்லது. பெண்களுக்கு உற்சாகமான வாரம்.

துலாம்: தெளிவான சிந்தனையும், தெய்வீக ஈடுபாடும் கை கொடுக்கும் வாரம். தேவைக்கேற்ற பண வசதியும், முக்கியமானவர்கள் ஆதரவும் தெம்பு தரும். ஆபீஸில் அனுகூலமான திருப்பங் கள் சில காத்திருக்கு. சரியாகப் பயன்படுத் தினால் நல்ல முன்னேற்றம் காணலாம். தொழில், வியாபாரம் முன்னேற்றம் காணும். குடும்பத்தில் அமைதி நிலவும். மக்களால் மகிழ்ச்சி பெருகும். புது வீடு, வாகனம், சொத்து சேர்க்கை உண்டாகும். பெண்களுக்கு ஆடை, ஆபரணச் சேர்க்கையால் மகிழ்ச்சி கூடும்.

விருச்சிகம்: துணிவும், தன்னம்பிக் கையும் அனுகூலமான பலன்களைத் தர்ற வாரங்க இது. தெய்வ பலமும் சேர்ந்தா இன்னும் நன்மைகள் கூடும். தாராளமான பண நடமாட்டமும், விஐபிக்கள் ஆதர வும் கை கொடுக்கும். தொழில், வியா பாரம்னு இருக்கிறவங்களுக்கு அபிவிருத்தி ஏற்படும். வெளிநாட்டுத் தொடர்பு அதிக அனுகூலம் தரும். குடும்பத்தில் சுபச் செலவுகள் சில ஏற்படும். பிரிந்தவர்கள் ஒன்று சேருவார்கள். குல தெய்வப் பிரார்த்தனை, வழிபாடு அதிக அனுகூலம் தரும். சுபகாரிய முயற்சிகள் ஈடேறும். பெண்கள் ஆரோக்கிய மேன்மையும், உற்சாக மனநிலையும் பெறுவார்கள்.

தனுசு: தாமதம், தடைகள், சிறு பிரச் னைகள்னு எல்லாக் காரியங்களும் தடைப்பட்டாலும், இறுதியில் சாத கமாகவே முடியும். தெய்வ பலத்தை அபி விருத்தி செய்து கொள்வது நல்லது. புதிய வர்களிடம் பழகும்போது அதிக எச்சரிக் கையுடன் பழக வேண்டும். ஆபீஸில் வழக்கமான பலன்கள் தடைப்படாது. உழைப்புக்கேற்ற பலனும், சிலருக்கு இட மாற்றமும் உண்டாகும். தொழில், வியா பாரத்தில் பொருளாதார சிரமம் ஏற்

பரிகாரம்

தன்னிடம் இருப்பதையே வெளியில் தேடுவதுதான் மனித சுபாவம். அறிவு, ஞானம், அமைதி எல்லாம் இதே வகைதான். பணம், பொருள், வீடு, குடும்பம், உறவுகள் எல்லாம் தேடித்தேடி, பாதி வாழ்க்கை போன பிறகுதான் மனிதன் நிம்மதி யைத் தேட ஆரம்பிக்கிறான். ஆனால் அது கிடைப் பதற்குள் வாழ்க்கையே முடியும் காலம் வந்துவிடும். எல்லாம் இருந்தும் வாழ்வில் நிம்மதி இல்லையே என்று தேடியலைபவர்களுக்கு ஞானமும், அமை தியும் தர அருவமாகக் காத்திருக்கிறார் ஆவுடையார் கோயில் ஆத்மநாத சுவாமி. ஞானத்தின் வடிவம் எது என்பது இந்தக் கோயிலுக்கு வந்தால் தெரியும். மனம் தெளியும். நிம்மதி நிச்சயம் கிடைக்கும். மயிலாடுதுறை - காரைக்குடி ரயில் மார்க்கத்தில், அறந்தாங்கிக்கு அருகே இருக்கிறது இந்த ஆத்ம நாத சுவாமி திருக்கோயில்.



- வி



பட்டு மறையும். கவனம் தேவை. குடும்பத்தில உற்சாகம், ஒற்றுமை கூடி மகிழ்வு தரும். சுப மங்கள காரியங்கள் ஈடேறும். பெண்களுக்கு அனுகூலமான வாரம். தெய்வீகப் பிரார்த்தனை, புனித ஸ்தலப் பயணம் ஏற்படும்.

மகரம்: இதுவரை இருந்த தடைகள், குறுக்கீடுகள் எல்லாம் விலகி தெளிவான, உறுதியான முன்னேற்றம் சகல காரியங்களிலும் உண்டாகும். எதிர்ப்புகள் தன்னால விலகிப் போகும். தாராளமான பண வசதி ஏற்படும். ஆபீஸ்லயும் அதிர்ஷ்டமான திருப்பங்கள் சில காத்திருக்கு. தொழில் வியாபாரம்னு இருக்கிறவங்களுக்கு அனுகூலமான நேரம். பழைய கடன்கள் மறையும். வங்கி, அரசு உதவிகள் வந்து சேரும். புதிய தொழில் முயற்சி வெற்றி பெறும். குடும்பத்தில் சொத்து, வீடு, வாகனம் சேர்க்கையும், சுப காரிய முயற்சிகளும் குதூகலம் கூட்டும். பெண்கள், விருந்து, கேளிக்கை, உபசாரம் என்று சந்தோஷம் காண்பார்கள்.

கும்பம்: கடினமான காரியங்களையும், திறமையுடன் முடித்து பாராட்டும், மதிப்பும் உயரப் பெறும் வாரம் இது. பொருளாதார நெருக்கடி கொஞ்சம் சிரமப் படுத்தினாலும், எச்சரிக்கையா இருந்தா சமாளிச்சுடலாம். ஆபீஸ்ல சிறப்பான வாரம் இது. உயரதிகாரிகள், சக ஊழியர்கள் என்று அனைவர் ஆதரவும் கிட்டும். சிலருக்கு இடமாற்றம், வெளியூர்ப் பயணம் நேரிடும். தொழில், வியாபாரம்னு இருக்கிறவங்களுக்கு கொஞ்சம் பொருளாதார சிரமம் ஏற்படும். அரசு, வங்கி உதவிகள் வந்து கை கொடுக்கும். குடும்பத்தில சுபச் செய்திகள் எதிர்பார்த்தபடி வந்து சேரும். பெண்களுக்கு எண்ணம் ஈடேறும்.

மீனம்: இதுவரை பொருளாதார நெருக்கடிகள் கொடுத்த சிரமங்கள் மெல்ல மறைஞ்சு, தாராளமான பண நடமாட்டம் ஏற்படும். எதிர்ப்புகள் மறையும். தடைப்பட்டு நின்று போன காரியங்கள் திட்டமிட்டபடி முன்னேற்றம் காணும். ஆபீஸ்லயும் நேர்முக, மறைமுக எதிர்ப்புகள் மறைஞ்சு அனுகூல பலன்கள் சேரும். நிறைவேறாமல் இருந்த கோரிக்கைகள் ஈடேறும். தொழில், வியாபாரத்தில் நிம்மதியான சூழ்நிலை நிலவும். கூட்டுத் தொழில் முன்னேற்றம் காணும். குடும்பத்தில் குருபலம் நிறைந்திருப்பதால் சொத்து, வீடு, வாகனம் என்று பொருள் சேர்க்கையும், சுப காரிய முயற்சிகளில் வெற்றியும் கிட்டும். உடன் பிறந்தவர்கள் ஆதரவு கை கொடுக்கும். பெண்களுக்கு ஆரோக்கிய மேன்மை, உறவினர் வருகை மகிழ்ச்சி கூட்டும். ○



• ஆட்ட நாயகர்!

இது... எளிய மக்களின் உணர்வுபூர்வமான கவனத்தை, போனஸ் பாயின்டாகப் பெற்றுத் தரவும் செய்கிறது.

• ரா. சாலமோன், ஆலங்குளம்

? சோனியா - மன்மோகன் இடையே கருத்து வேறுபாடு நிலவுவதாகச் செய்தி வெளியாகியுள்ளதே...?

! அது நமது பத்திரிகைகளுடைய 'அபிலாஷை'யின் வெளிப்பாடு. அமெரிக்கப் பத்திரிகை நியூஸ் வீக், மன்மோகன்-சோனியா சிறந்த ஒத்திசைவுடன் இயங்குவதாக அட்டைப்படக் கட்டுரை வெளியிட்டிருக்கிறதே!

• எஸ்.சுப்பிரமணியன், கும்பகோணம்

? தமிழக முதல்வருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கியுள்ளதே சர்வதேச ரோட்டரி சங்கம்?

! வயது 57தானே ஆகிறது. விருதுக்குத் தகுதியுடையவராக உயர இன்னும் நிறைய காலம் இருக்கிறது.

• நா.பத்மா, ஜோலார்பேட்டை.

? தொகுதிகள் அதிகரிக்கப்படுகிறதாமே... நாட்டுக்குப் பலன் ஏற்படுமா?

! நிர்வாக ரீதியாகச் சிறிய அளவில் பலன் இருக்கும். ஆனால் நிர்வாகச் செலவு அதிகரிக்கும். தொகுதி நிதி ஒதுக்கீடு கணிசமாக அதிகரிக்கும் (பல கோடிகள்!). அதைப் பயன்படுத்துவதில் உள்ள ஊழல் அதிகரிக்கும். எல்லாவற்றுக்கும் மக்கள் கூடுதல் வரிப்பணம் அழுதாக வேண்டும்.

• ஆர்.கே. லிங்கேசன்
மேலகிருஷ்ணன்புதூர்

? "கூட்டணி ஆட்சி பற்றி நான் பேசியது தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுவிட்டது'' என்கிறாரே இளங்கோவன்?

! கூட்டணிக்காரர்கள் (எக்கட்சியினராகயிருந்தாலும் சரி) தவறு புரிந்துவிட்டு, அதன் விளைவாக எழுகிற சூறாவளியைச் சமாளிக்க தவறாமல் கூறும் நொண்டிச் சமாதானம்.

• எச். ஆண்டனி தமிழரசன், மும்பை - 17

? ஜெயலலிதா பிறந்த நாளுக்குத் தீச்சட்டி ஏந்தியும், தங்கத்தேர் இழுத்தும், மண் சோறு சாப்பிட்டும் அமைச்சர்கள் கொண்டாடியது பற்றி...?

! கடவுளுக்குச் செலுத்தப்படும் நேர்த்திக்கடன் என்பதைவிட, பதவியளித்த தேவதைக்குச் செலுத்தப்படும் நன்றிக்கடன்தான்

• வேறுபடும்...



• ...பத்திரிகைகள்!



• சீர்காழி சாமு, தென்பாதி

? சங்கரராமன் கொலை வழக்கில் குற்றப் பத்திரிகை நகலைத் தராமல், காஞ்சி மடாதிபதிகளை நீதிமன்றத்துக்கு அலைக்கழிப்பது குறித்து...?

! காவல் துறையின் பலவீனத்தையே உணர்த்துகிறது. 'காஞ்சிபுரம் வழக்கறிஞர்கள் ரவிசுப்ரமண்யத்தை மிரட்டியதாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்ற வேண்டும்' என்று சென்னை உயர்நீதி மன்றத்தில் ஒரு மனுவை வழக்கறிஞர் ஏ.ஷண்முகம் தாக்கல் செய்ய, அரசிடம் நீதி மன்றம் இதுகுறித்து விளக்கம் கேட்டிருப்பதும்

குறிப்பிடத்தக்கது.

● பத்மா சுப்பிரமணி,
சென்னை -11

? தமது இரண்டாவது பட்ஜெட்டிலும் கட்டணங்களை உயர்த்தாமல் பயணிகளைத் திருப்திபடுத்தியுள்ளாரே லல்லு?

! வரவு - செலவு கணக்கைப் பொறுத்தவரை, ரயில்வே பட்ஜெட்டில் அதிகக் குறைபாடு இல்லாவிட்டாலும் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்குச் சிறப்புக் கவனம் தரப்படாதது கவலைக்குரிய விஷயம். ரயில் பாதைகளின் நீளமும், ரயில்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்படுகிற அளவுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகளும் அதிகரிக்கப்பட வேண்டும்; நவீனப் படுத்தப்பட வேண்டும்.



* எழுத்துலக... * ...யோக்யதை!

சீரியல் பிடியிலிருந்து பெண்கள் எப்போது விடுபடுவார்கள்?





* துறந்த பாதை!

● வே.ந.கதிர்வேல், வேலூர்

? குருவாயூர் கோயிலில் நடந்த யானைகள் ஓட்டப் பந்தயத்தில், ஜெயலலிதா வழங்கிய யானை முதலிடம் பெற்றதே?

! ஆமாம். எல்லாச் செய்தித்தாள்களிலும் தொலைக்காட்சியிலும் கூட வெளியான செய்திதானே... என்ன, சன் டி.வி மட்டும் மூன்று நிமிடம் யானை ஓட்டப் பந்தயத்தைக் காட்டினாலும், வெற்றி பெற்ற யானை யார் வழங்கியது என்பதை மட்டும் ஞாபகமாகச் சொல்ல மறந்தது.

● ஆ.து.சினிவாசன்,
மணவாளநகர்


? சாதியைக் கடந்து தமிழ் தேசியம் பேசும் திருமாவளவன், ராமதாசு, சேதுராமன் போன்றவர்கள் தீண்டாமையை ஒழிக்க தாழ்த்தப்பட்டோர் பாதுகாப்பு இயக்கம் ஆரம்பிப்பார்களா...?

! சாதி, வர்க்க பேத ஒழிப்பை அரசியல் அதிகாரம் பெறுவதன் மூலம்தான் நடைமுறைப் படுத்த முடியும் என்று புறப்பட்டுவிட்ட பிறகு, அரசியல் கலப்பற்ற சமூக நோக்குக்குத் திரும்புவது இயலாத காரியம். அரசியல் அதிகாரத்தின் ஈர்ப்பு அப்படிப்பட்டது.


● ராமு, கோவை

? தமது பெண்கள் என்று டி.வி சீரியலின் பிடியிலிருந்து விடுபடுவார்கள்?

! அவற்றைப் பார்ப்பதை அவர்கள்



• 'புரிந்த' தவறு!



• பாதுகாப்பற்ற பட்ஜெட்!

நிறுத்தும்போது!

● இலஷூரியன், திருவண்ணாமலை

? சாகித்ய அகாதமி விருதுக்குரிய ஈரோடு தமிழன்பனின் கவிதைகளை, படுமோசமாக விமர்சித்துள்ளாரே ஜெயமோகன்?

! எந்தப் படைப்புமே விமர்சனத்துக்கு அப்பாற்பட்டதல்ல. ஆனால் பரிசு வழங்கப்பட்ட கையோடு, ஒரு படைப்பையும் அதன் படைப்பாளியையும் அத்துமீறி விமர்சிப்பது, பண்பாட்டுக் குறைவான செயல். சமீப காலங்களில் சாஹித்ய அகாடமி பரிசு பெற்ற எந்தப் படைப்பும் இந்த அநாகரிகத்திலிருந்து தப்பவில்லை என்பது, நமது எழுத்துலகின் யோக்கியதையையே பறைசாற்றுகிறது!

● ப. காளிதாசன் நீர்விளங்குளம்

? ஜெயலட்சுமி தமது பிறந்தநாளன்று கண்தானம் செய்துள்ளாரே...?

! கண் தானம் செய்ததை மனப்பூர்வமாக வரவேற்கலாம். அதற்கு எந்நாளும் நன்னாளே! பிறந்த நாளன்று, செய்தியாக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் செய்யப்பட்டால் ஒரு நல்ல காரியம் மலினப்பட்டுப் போகிறது.

● விமலா வரதராஜன்,

ஹைதராபாத் - 47

? டெண்டுல்கர், கிரிக்கெட் - எதை ரசிகர்கள் அதிகம் விரும்புகிறார்கள்?

! டெண்டுல்கருக்காக கிரிக்கெட்டை ரசிப்பவர்கள்தான் அதிகம்.

● க.வேடியப்பன்,

கும்மிடிப்பூண்டி

? தமிழகத்தில் அடுத்து கூட்டணி ஆட்சிதான் அமையும்போல் உள்ளதே?

! போதுமடா சாமி! கூட்டணி ஆட்சி பற்றிய பேச்சு எழுந்ததற்கே இத்தனை குடுமிப்பிடி சண்டை! இன்னும் கூ.ஆட்சியே வந்துவிட்டால்... நினைத்தாலே கதி கலங்குகிறது!

● வி.என்.கோபால், சென்னை - 91. ❐

? ராஜாஜி, காமராஜர், பக்தவத்சலம், அண்ணா, கருணாநிதி போன்றவர்கள் தமிழக முதல்வர்களாக இருந்தபோது, அவர்களது அமைச்சரவையில் நிர்வாகத்தில் பெயரெடுத்த நல்லமைச்சர்கள் பலர் இருந்தனர். இன்றைய ஜெயலலிதா அமைச்சரவையில் அப்படி ஒருவர் கூட இல்லையே, இந்த நிலைமை அவருக்குப் பெருமையா?

! நிச்சயமாகப் பெருமையில்லை. ஆனால் தமக்கு பாதுகாப்பான நிலைமை என்பதாக முதல்வர் ஒருக்கால் எண்ணியிருந்தால் அதுவும் தப்புக் கணக்கு! அதனினும் கொடுமை, இந்நிலைமை தமிழ்நாட்டுக்குத் துளியும் நல்லதல்ல என்பதுதான்.

● பொன்விழி, அன்னூர்

? சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் இப்போது எப்படி இருக்கிறார்கள்?

! மூன்று கும்பல்களால் முற்றுகையிடப்பட்டிருக்கிறார்கள்.

1. ஆளுங்கட்சி கும்பல் 2. எதிர்கட்சி கும்பல் 3. மதமாற்ற கும்பல். ○

❐ ரூ. 100/- பரிசு பெறுபவர்:

வி.என்.கோபால்
14 (புதிய எண் 2),
முதல் குறுக்குத் தெரு,
பாரத் நகர், மடிப்பாக்கம்,
சென்னை - 600 091.

✱ ரூ. 50/- பரிசு பெறுபவர்:

நா. பத்மா,
6, முனுசாமி நாயுடு தெரு,
சந்தைக்கோடியூர்,
ஜோலார்பேட்டை - 635 851

பளிச் பட்ஜெட்!



நிதியமைச்சர் ப. சிதம்பரம் பட்ஜெட் உரை ஆற்றினார். அப்போது அவர் அறிவித்த பல வரிச் சலுகைகளில் கம்பெனி களின் மீதான வருமான வரியை 35 சதவிகிதத்தி லிருந்து 30 சதவிகித மாகக் குறைத்ததும் ஒன்று. ஆனால் surcharge எனப்படும் உபரி வரியை 10 சதவிகிதமாக உயர்த்துவதாகவும் அறிவித்தார். மொத் தத்தில் கம்பெனிகள் செலுத்த வேண்டிய வரிவிகிதம், சுமார் 3½ சதவிகிதம் குறைந் தது. இந்த அறிவிப்பைத் தொடர்ந்து பங்குகளின் விலை ஏறத் தொடங்கின. நிதி மந்திரி வங்கித் துறையில், ரிஸர்வ் வங்கி பல சீர்திருத்தங்களைக் கொண்டு வரவிருப்பதாகச் சொன்னார். அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு அரசுடமையாக்கப்பட்ட வங்கிகளுக்கு அவர்களின் செயல்பாட்டில் அதிக சுதந்திரம் வழங்கப்படும் என்றும் அறி வித்திருந்தார். நிதி மந்திரி தமது பட்ஜெட் உரையில் 'வங்கிகள் preference shares எனப்படும் டிவிடெண்டில் முன்னுரிமை பெறும் பங்குகளை வெளியிட அனுமதிக் கப்படும்' என்றும் கூறினார். இதைத் தொடர்ந்து வங்கிகளின் பங்குகளின் விலைகள் ஏறத் தொடங்கின.

ஆனால் மார்ச் 1ம் தேதி கிடுகிடு வென்று ஏறிய பல பங்குகளின் விலைகள், கொஞ்சம் கொஞ்சமாக இறங்கத் தொடங்கிவிட்டன. இதற்கு ஒரு முக்கியக் காரணம், கம்பெனிகள் தங்களது லாபத்தில் தேய்மான அளவை (Depreciation) 15 சதவிகிதமாகக் குறைத் ததுதான். இதனால் கம்பெனிகள் வரி செலுத்த வேண்டிய லாபத் தொகை (Taxable Income) கூடும். கம்பெனிகள் அதிக வரி செலுத்த வேண்டி இருக்கும். மேலும் பங்கு மார்க்கெட்டில் பரி வர்த்தனை வரியும் (Transactions Tax) 0.015 சதவிகிதத்திலிருந்து 0.020 சதவிகிதமாக உயர்த்தப் பட்டது. இந்தக் காரணங் களினால், பங்குகளின் விலைகள் ஓரளவுக்கு குறையத் தொடங்கின.

மொத்தத்தில் பங்கு மார்க்கெட் தரகர்கள் எல்லோரும் மிகுந்த மகிழ்ச்சியுடனே இருக் கின்றனர். வரும் நிதி ஆண்டில் பொருளாதார வளர்ச்சி மிகவும் பிரகாச மாக இருக்கும் என்றும், கம் பெனிகளின் செயல்பாடும், அவர்கள் ஈட்டும் லாபமும் நன்றாக இருக் கும் என்றும் எதிர்பார்க்கிறார்கள்.

இந்த எதிர்பார்ப்புக்கு ஒரு காரணம் நிதி மந்திரியின் பட்ஜெட் அம்சங்கள். அடுத்த நிதி ஆண்டில் கம்பெனிகளி டமிருந்து வசூலிக்கப்படும் வரி, சுமார் ரூபாய் 110573 கோடியாக இருக்கும் என்பதுதான். இது தற்போதைய நிதி ஆண்டின் கம்பெனி வரி வசூலை விட, சுமார் ரூபாய் 27000 கோடிக்கும் அதிகம்.

நிதி மந்திரி அடுத்த நிதி ஆண்டில் இந்தியாவிலுள்ள கம்பெனிகள் சுமார் 3½ லட்சம் கோடிக்கும் அதிகமாக லாபம் ஈட்டும் என்று எதிர்பார்க்கிறார்.

டிப்ஸ்: வங்கித் துறையில் அறிவிக்கப்பட்ட சில சீர்திருத்தங்களைத் தொடர்ந்து, அரசுடைமையாக்கப்பட்ட பல வங்கிகளின் பங்குகள் விலை ஏறி இருக்கின்றன. இவற்றில் முக்கியமாக பரோடா வங்கி, அலகாபாத் வங்கி, பாங்க் ஆஃப் இந்தியா, பஞ்சாப் நேஷனல் வங்கி இவற்றின் பங்குகளை வாங்கலாம்.

பங்குச்சந்தை —— வி. கோபாலன்



மும்பை நடிகைகளின் தப்புக் கணக்கு!

திரைத்துறையில் பல தலைமுறைகளைக் கடந்து, தமது நவரச நடிப்பால் இன்னும் தமிழ் ரசிகர்களை ஆட்சி செய்து கொண்டிருக்கும் ஆச்சி மனோரமா, இப்போது ஆயிரத்து முந்நூற்று அறுபதாவது படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார். உழைக்கும் பெண்கள் சிறப்பிதழுக்காக அவரைச் சந்தித்தபோது, அவரது முகத்திலும், பேச்சிலும் உழைத்த களைப்பே துளிக்கூட இல்லை... ஆச்சி இன்னும் துடிப்பான தமிழச்சிதான்...

தமிழ்ப் படங்களில் உங்களை அதிகம் பார்க்க முடியவில்லை. நடிப்பதை நீங்களே குறைத்து விட்டீர்களா?

"நடிப்பது எனக்கு மூச்சு விடுவது மாதிரி. நானே நினைத்தாலும் அதை நிறுத்த முடியாது. தெலுங்குப் படங்களில் அதிகம் நடித்துக் கொண்டிருக்கிறேன். இங்கே கொஞ்சம் மாற்றம் இருக்கட்டுமே என்று நினைக்கிறார்கள் போல. அதை நான் தப்பாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆயிரமிருந்தாலும் தாய் மொழியில் பேசி நடிக்கும்போது கிடைக்கும் சுகமே தனி. இப்போது தம்பி ஆர்.வி. உதயகுமாரின் இயக்கத்தில் 'கற்க கசடற' படத்தில் லொடுக்குப் பாட்டி மாதிரி ஒரு பாத்திரத்தில் நடித்திருக்கிறேன். நீண்ட நாட்களுக்குப் பிறகு நறுக்கென்று ஒரு கேரக்டர்."

நீங்கள் சினிமாவில் நுழைந்த காலகட்டத்தில், திறமையிருந்தால்தான் வாய்ப்புக் கிடைத்தது. இப்போது நிலைமை தலைகீழாக இருப்பதை நினைத்து வருந்தியதுண்டா?

"நிறைய. டீவியில் 'ஓ ரசிக்கும் சீமானே' என்ற பழைய பாடல் ஓடிக் கொண்டிருந்தது. நானும் எனது பேத்தியும் அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்தோம். "அந்தக் கால சினிமாவில் இதுதானம்மா

கவர்ச்சி நடனம்" என்றேன். ஆனால் அவன் நம்பவில்லை. "என்ன பாட்டி பொய் சொல்றே! கவர்ச்சி நடனம்னா இந்த மாதிரி உடம்பு முழுக்க டிரஸ் பண்ணிக்கிட்டா ஆடுவாங்க" என்றான். எனக்கு ஒரு பக்கம் அதிர்ச்சி. இன்னொரு பக்கம் இத்தனை மோசமாக மாற்றங்கள் வந்துவிட்டதே! இது பல தலைமுறைக்கு மனத்தில் நஞ்சை விதைக்குமே என்று உள்ளூர வருந்திக் கொண்டே இருக்கிறேன். முக்கியமாக மும்பையிலிருந்தும், வடமாநிலங்களில் இருந்தும் வரும் பெண்கள், என்ன வேண்டுமானாலும் பண்ணலாம், எப்படி வேண்டுமானாலும் நடிக்கலாம் என்று தரம் தாழ்ந்து போய்விட்டார்கள். குஷ்பு, சிம்ரன், ஜோதிகா மாதிரி ஆபாசம் இல்லாமல் கவர்ச்சியோடு நிறுத்திக் கொள்கிறவர்கள் ரொம்பக் குறைவுதான். இப்போது ரொம்பவும் வல்கராக உடலைக் காட்டுகிறார்கள். இப்படிச் செய்தால்தான் சினிமாவில் நிலைத்து நிற்க முடியும் என்று நினைக்கிறார்கள். இது ரொம்பத் தவறு. தப்புக் கணக்கு."

வடமாநிலத்திலிருந்து வருபவர்களோடு நாம் போட்டி போட முடியாது என்பதால்தான், தமிழ்ப் பெண்கள் சினிமாவைப் புறக்கணிக்கிறார்களா?

"தமிழ்ப் பெண்களால் அவர்கள் அளவுக்கு இறங்கி வர முடியாது என்பதுதான் உண்மை. மானம், கட்டுப்பாடு, கலாசாரம், பண்பாடு இதெல்லாம் நமக்கு இரத்தத்தில் ஊறிப் போன விஷயங்கள். இதையெல்லாம் அவ்வளவு சீக்கிரம் நமது பெண்கள் உதறி விட மாட்டார்கள்."

ஆபாசக் காட்சிகளை விட, ஆபாசமான பாடல்கள் அதிகமாய்ப் போய்விட்டதில்லையா?

"அய்யோ காதே கூசுதுப்பா! பேப்பர்லே படிச்சேன். கவிஞர் அறிவுமதின்னு ஒரு தம்பி நல்லா பாட்டெழுதுமாம். இவ்ளோ ஆபாசமா எழுதுறாங்க. நான் இனிமே பாட்டே எழுத மாட்டேன்னு சொல்லிடுச்சாம். எவ்வளவு வேதனை இருந்தா அந்தப் பிள்ளை அப்படிச் சொல்லியிருக்கும். இவரையெல்லாம் கூப்பிட்டு ஏதாவது செய்யணும்! 'கல்யாணம்தான் கட்டிக்கிட்டு ஓடிப் . போலாமா? இல்லே ஓடிப்போயி கல்யாணம்தான் பண்ணிக்கலாமா'ன்னு எழுதுறாங்க. இதைக்கூட மன்னிச்சிடலாம். 'புள்ளைகுட்டி பெத்துக்கிட்டு கட்டிக்கலாமா'ன்னு எழுதறது சின்னப்பசங்க மனசுலே நஞ்சை அள்ளிப் போடுற வார்த்தைங்க இல்லையா! இதை விடக் கொடுமை, பள்ளிக்கூட ஆண்டு விழாக்கள்ல இது மாதிரி பாடல்களைப் போட்டு பிள்ளைகளை ஆடவிடுறாங்க. ஆசிரியர்களுக்கு இப்போ பொறுப்பு அதிகம். இதை



–மனம் திறக்கிறார் மனோரமா!

யெல்லாம் அவங்க கவனிக்கணும்.''

இன்றைய இளையதலைமுறைக் கலைஞர்களிடம் எதைக் கண்டு வியந்து போகிறீர்கள்?

''திறமைதான்! என்னமா நடிக்கிறாங்க. என்னமா டான்ஸ் ஆடறாங்க. ரொம்பவும் நட்பாகவும் இருக்கிறார்கள். 'ஹாய்', 'ஹலோ' என்று சொல்லிக் கொண்டு, தோள்ல கைபோட்டுக் கொண்டு, வேலையில் கண்ணும் கருத்துமாய் இருக்கிறார்கள். நாங்கள் அந்தக் காலம் முதல் இந்தக் காலம் வரை, கலை என்றால் பயபக்தியோடு செய்கிறோம். இவர்களிடம் பக்தி இருக்கிறதோ இல்லையோ, சின்சியாரிட்டி இருக்கிறது. வேகம் இருக்கிறது. அதுதானே வேண்டும்!''



உங்கள் பேரன், பேத்திகள் உங்களை எப்படி விமர்சிக்கிறார்கள்?

''எனது பழைய படங்களையெல்லாம் பார்க்கிறபோது ''பாட்டி, இதெல்லாம் நீங்கதானா?'' என்று கிண்டல் செய்வார்கள். என்னை பாட்டி மாதிரி நடத்த மாட்டார்கள். நான் அவர்களுக்கு ஃப்ரெண்ட். எனது பெரிய பேத்தி அபிராமி, சின்ன பேத்தியிடம் சொல்லுவாள்... ''மீனா, நாம எவ்வளவு புண்ணியம் பண்ணியிருக்கணும் பாருடி! ஆத்தாவுக்கு வந்து நாம பேத்திகளா பொறந்திருக்கோம்!'' இப்படிக் கேட்கும்போது எனக்குக் கண்ணீரே வந்துவிடும்.''

ஒரு நல்ல அம்மாவாக உங்களால் இருக்க முடிந்திருக்கிறதா?

''இருக்க முடியவில்லைதான். என் தாயார்தான் பிள்ளையை வளர்த்தார்கள். ஒரு கட்டத்துக்குப் பிறகு பிள்ளையைப் படப்பிடிப்புக்குக் கூட்டிக் கொண்டு போக ஆரம்பித்துவிட்டேன். இப்போது நல்ல அம்மா மட்டுமல்ல, நல்ல பாட்டியாகவும் இருக்கிறேன்.''

பத்து வருடங்களுக்கு முன்பு பார்த்தது போலவே இன்னும் இருக்கிறீர்கள்! உங்கள் இளமையின் ரகசியத்தைச் சொல்லுங்களேன்...?

''அரிசிச் சோறு சாப்பிடுவதை அடியோடு நிறுத்தி விட்டேன். கோதுமையை சோறு போல நீராவியில் அவித்துச் சாப்பிடுவதை வழக்கமாக்கி விட்டேன். எண்ணெயே கிடையாது. வாக்கிங், கொஞ்சம் யோகா, இதைவிட மனதை எப்போதும் காலியாக வைத்திருக்கப் பழகிக் கொண்டு விட்டேன். எனக்குக் கோபமே வராதா என்று கேட்பார்கள். கோபப்படுவதால் எதையும் சாதித்துவிட முடியாது. சமீபத்தில் ஒரு தெலுங்கு படப்பிடிப்பு. காலை ஒன்பது மணிக்கு படப்பிடிப்புக்குப் போனேன்...மாலை ஆறு மணி வரை எனக்கு ஷாட் எதுவும் வைக்கவில்லை. உதவி இயக்குனர்கள் வந்து பயந்து கொண்டே ''அம்மா மன்னிச்சுடுங்க, இன்று ஷாட் இல்லை'' என்றார்கள். 'ஓகே' என்று ஹோட்டலுக்கு வந்து விட்டேன். நான் கூலாக எடுத்துக் கொண்டதை அவர்களால் நம்ப முடியவில்லை. சினிமாவில் காத்திருக்க வேண்டும் என்பதை நான் நம்புகிறேன். பிறகு ஏன் கோபப்பட வேண்டும்!''

சந்திப்பு: **ஜெயந்தன்**
படங்கள்: **ஸ்ரீஹரி**

'அழகு ஸ்பெஷல்' கல்கி இதழின் அட்டையை அலங்கரித்த அந்த முகம் என் மனதை விட்டு நீங்க மறுக்கிறது.
மொரட்டுப்பாளையம், கு.நா.இராஜேஸ்வரன்

சங்கரராமன் கொலை வழக்கில் தமிழக காவல் துறையின் செயல்பாடு கவலையளிக்கும் விதத்தில் உள்ளது என்பதையும், அரசின் கைப்பாவையாக மாறிவிட்ட காவல்துறையின் கையாலாகாத் தனத்தையும் வெளிப்படுத்திய தலையங்கம் அருமை!
ஈரோடு - 1, கன்னி. சுப்பிரமணியன்

''சமூக அவலங்களைச் சுட்டிக் காட்டி படம் எடுப்பதற்காக காவல் துறையினரின் தொந்தரவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கிறது'' என்ற இயக்குனர் முருகதாஸின் வார்த்தைகள் வேதனையை ஏற்படுத்தின.
நெய்வேலி - 7, எஸ். கண்ணன்

'குற்றப்பத்திரிகையை கோயிலில் வைத்து வழிபடுவது எப்படித் தவறாகும்?' என்ற கேள்விக்கு தராசு அளித்த பதில் கல்கியின் நடுநிலைமையை உணர்த்தியது.
மேட்டுத்திருக்காம்புலியூர், க.குழந்தைவேல்


பால்தாக்கரே பற்றி கிண்டல் பதில் எழுதுவது நமக்கு மகா சுலபம். காரணம் பம்பாய் போல பாக். தீவிரவாதிகளால் நாம் எங்கே பாதிக்கப்பட்டோம்! பால் தாக்கரேயின் பிரதேசப் பற்றை புரிந்து கொள்ள முயல்வோம்.
சிறுகமலை, என். பாலு

'காதல் நிரந்தரமல்ல' என்று வாணி கணபதி தம் அனுபவத்தை வைத்து இளைஞர்களுக்கு ஒரு நல்ல அறிவுரையை வழங்கியுள்ளார்.
லால்குடி, எம். இராஜேந்திரன்

வட்டமேஜை

பின்னிரவில் 'ஏ' படங்களை அனுமதிக்கக் கூடாது என்று தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சருக்கு ஆசிரியர் வழங்கிய ஆலோசனை பாராட்டப்பட வேண்டியது.
கல்பூண்டி, பூ. சீனிவாசன்

நடுப்பக்கத்தில் வெளியான ஸ்ரீஹரியின் ஒளியழகு, கொள்ளையோ கொள்ளை!
மயிலாடுதுறை, கு.இராஜசேகரன்



இதயக் கதவை தட்டும்!

பயிரை மேயும் வேலியாகச் செயற்படும் தமிழகக் காவல்துறையின் முரணான போக்கைக் கண்டும், காணாமலும் முதல்வர் ஜெயலலிதா மேலும் கொம்பு சீவி விடுவது பற்றிக் கவலைப்பட்டு, மக்களைக் காவல் துறையிடமிருந்து காப்பாற்றக் கோரும் தங்கள் தலையங்கம், சம்பந்தப்பட்டோர் இதயக் கதவை நிச்சயம் தட்டுமென்பது உறுதி.
குருமலை, ஆதிகேசவன்

தங்கள் கவலைகளையெல்லாம் மறந்து, ஒருவருக்கொருவர் ஒத்தாசையாக இருந்து, நிம்மதியாக வாழும் முதியோர் இல்லத்து பாட்டிகளைப் பேட்டி கண்டு வெளியிட்டது அழகு.
வேலூர் - 6, வே.நகதிர்வேல்

“கிரிக்கெட்டுக்... மாறிட்டன்!”

நீச்சல் விளையாட்டின் இந்திய மாஸ்டர் பிளாஸ்டர் குற்றாலீஸ்வரன். மாஸ்டர் டிகிரி படிக்க அமெரிக்கா சென்றிருப்பவரிடம் பேசினோம்.

முன்புபோல தற்போது நம் இளைஞர்கள் நீச்சல் விளையாட்டில் ஆர்வம் காட்டுவதில்லையே...?

“பத்து வருஷத்துக்கு முன்னால பார்த்தீங்கன்னா, ஸ்விம்மிங்ல இளைஞர்கள் அதிகமா ஆர்வம் காட்டல. ஆனா இப்போ இந்த ஆர்வம் ரொம்பவும் ஆச்சர்யப்படற அளவுக்கு வளர்ந்திருக்கு.

இன்னும் சொல்லப் போனா, வெறும் பொழுதுபோக்கா இருந்த நீச்சல், இன்னிக்கு கிரிக்கெட் மாதிரியான பிரபல விளையாட்டாவும் மாறியிருக்கு.”

அதற்கான வாய்ப்பு வசதிகளும், சூழ்நிலையும் தற்போது இந்தியாவில் இருக்கிறதா?

“முழுக்க முழுக்க எல்லா வசதிகளும்

மணிரத்னத்தின் படங்களை டி.வி.டி (DVD)களாக வெளியிட்டுள்ளது ஏ.பி. இண்டர்நேஷனல் நிறுவனம். சென்னை, லேண்ட்மார்க்கில் நடந்த இதன் விழாவிலிருந்து சில க்ளிப்பிங்க்ஸ்...

அலைபாயுதே

மணிரத்னத்தை திரையுலகினராலே நெருக்கமாகப் பார்க்க முடியாத நிலையில் புத்தகங்கள், சி.டிக்கள் நிறைந்த லேண்ட் மார்க் ஹாலில், பொது மக்கள் மத்தியில் டி.வி.டி வெளியீட்டு விழா நடந்தது. இளைஞர்களை வெகுவாகவே ஈர்த்தது. மணிரத்னம் விழா என்பதால் அவரது ஸ்மார்ட்டான கதாநாயகர்கள் நிச்சயம் வருவார்கள் என்கிற சரியான கணிப்பில், நவீன இளைஞிகளின் கூட்டம் அலைபாய்ந்தது.




• கீர்த்தனா

வெஸ்டன் தீர்யா!


மௌன ராகம்

இதுவரை நிருபர்களின் கேள்விகளுக்கு மட்டுமே பதிலளித்திருந்த மணிரத்னம், அன்று தனது டீன் ஏஜ் ரசிகர்களின் அழகான கேள்விகளில் லயித்துப் போனார். “பகல் நிலவு,



ஆய்த எழுத்து ஹீரோக்களின் கோபத்தில் கம்யூனிசம் தெரி

இளமை கல்கி



• குற்றாலீஸ்வரன்

இருக்கறதா சொல்ல முடியாது. ஆனா 90கள்ல இருந்ததைவிட, இப்போ வசதி வாய்ப்புகள் கணிசமான அளவுல அதிகரிச்சிருக்கு. உதாரணமா நான் இங்க (இந்தியா) பிராக்டீஸ் பண்ணினப்போ குறைந்த அளவுலதான் நீச்சல் குளங்கள், எக்யூப்மென்ட்ஸ் எல்லாம் இருந்தது. ஆனா இப்போ ஏகப்பட்ட எக்யூப்மென்ட்ஸ் வெளிநாட்டுல இருந்து இம்போர்ட் ஆகி இங்க வந்தாச்சு... ஆனா வசதிகள் இன்னும் அதிகரிக்க வேண்டியிருக்கு."

"அமெரிக்க வாழ்க்கை...?

"ரொம்பவும் பிஸியா போயிட்டிருக்கு... இப்போதைக்கு என் கவனம் படிப்புலதான் இருக்கு. விடுமுறை நாட்கள்ல கிரிக்கெட் விளையாட ஆரம்பிச்சிருக்கேன். டெக்ஸாஸ்ல இருக்குற ப்ரீமியர் லீக்-ங்கற டீம்ல விளையாடிட்டு இருக்கேன். அதைத் தவிர நண்பர்களோட 'chat' பண்றதுன்னா ரொம்ப இஷ்டம்."

ஸ்விம்மிங்..?

"இப்போ அதுக்கு அதிகமா நேரம் கிடைக்கறதில்ல. நேரம் கிடைச்சா அப்பப்போ நீச்சல் பிராக்டீஸ் பண்றதுண்டு."

எதிர்காலக் கனவு...?

"எப்படியும் இன்னும் பத்து வருஷத்துல என் மூலமா இந்தியாவுல ஒரு ஸ்போர்ட்ஸ் அகாடமி உருவாவது நிச்சயம். அதுக்கு முன்னால என்னை படிப்பு ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பலப்படுத்திக்கணும்.

- முத்து

கிறதே" என்றதற்கு, "அரசியல் எனது சொந்த விருப்பம். படத்தில் எதற்காகக் காண்பிக்க வேண்டும்?" என்றார். பின்பு "எனது ப்ரேக்கின் முடிவில் இருக்கிறேன்" என்று மணிரத்னம் சொன்னாலும் புதுப் படத்தின் இறுதிநாள் ஷூட்டிங் வரை அது பற்றி மூச்சு விடுவாரா என்ன?

அக்னி நட்சத்திரம்

"கமர்ஷியல் விஷயங்கள் தேவையா?" என்றதற்கு, "இது ஒன்றும் கெட்ட வார்த்தையல்ல. பாடல்கள் இல்லாத படங்களெல்லாம் நல்ல படங்கள் என்று அர்த்தமல்ல" என்று கோபித்தார் மணிரத்னம். "ஏன் நம்மூர் மாதவன், சூர்யாவை ஹிந்தியில் நுழைக்கக் கூடாது?" என்றதற்கு, "அப்படியா, சூர்யா உன் ஹிந்தி எப்படி?" என்று சம்பந்தமில்லாமல் கேள்வியிலேயே பதில் சொல்லி சமாளித்தார். அதுசரி, மோகன்லால், சிம்ரனெல்லாம் நன்னனிடம் தமிழ் கற்றுக் கொண்டா இங்கு நடித்தார்கள்?



அஞ்சலி

ஒரு தமிழ் இயக்குனரின் தமிழ்ப் படங்கள் முதன்முறையாக டி.வி.டியாக வெளியிடப்பட்ட இந்நிகழ்ச்சியில், ஒருவரின் பேச்சும் தமிழில் இல்லாமல் ஆங்கிலத்திலேயே 'தஸ்புஸ்' என்றிருக்க, (பேபி கீர்த்தனா உட்பட) ஒரு மூலையில் அழுது கொண்டிருந்த தமிழை மேடையேற்றி கூச்சப் படாமல் தமிழில் பேசியது சிவகுமாரின் மைந்தனான சூர்யாதான்.

- ச.ந.

படங்கள் : பப்பி

அட... இதென்ன கூத்து?



• நாடகக் காட்சி...

“என் புத்தகத்துல இனி உங்களுக்கு இடமில்லை. நீங்க ஆறு பேரும் கிளம்பலாம் டாடா, பை” என்று ஒரு கதாசிரியர் கழற்றிவிட்டவுடன் ‘ஐயோ பாவமான’ ஆறு கதாபாத்திரங்கள் என்ன செய்வது என்று புரியாமல் தவிக்கின்றன. பிறகு ஒரு நாடக ஒத்திகை நடந்து கொண்டிருக்கும்பொழுது, அங்கே திடீரென்று நுழைகின்றன. குழப்ப மடைந்த டைரக்டர் “நீங்களெல்லாம் யார்?” என்று கேட்க, “நாங்கள் கதாபாத்திரங்கள். எங்களுக்கு ஒரு ஆசிரியர் தேவை” என்கிறார்கள்.

டைரக்டருக்குக் குழப்பம். இதுவரை ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்த நடிகர்களுக்குக் குழப்பம். அதெப்படி கதாபாத்திரங்கள் புத்தகங்களை விட்டு வெளியே வரும்? இதென்ன புதுக் கூத்து?

“சரி உங்கள் கதைதான் என்ன, அதைச் சொல்லுங்களேன்” என்று டைரக்டர் கேட்டதும், அந்தக் கதாபாத்திரங்கள் பேசத் தொடங்குகின்றன. ‘அட, இது நம்ம நாடகத்தைவிடப் புதுசாயிருக்கே’ என்று அந்த டைரக்டர் தமது ஒத்திகையை ஒதுக்கி வைத்துவிட்டு, இவர்களது நாடகத்தை கவனிக்கத் தொடங்குகிறார்.

இப்படியாக ஒரு நாடகத்துக்குள்ளே இன்னொரு நாடகம் தொடங்குகிறது. அதில் நடிகர்களோடு ஆறு கதாபாத்திரங்கள் இணைந்து கொள்கின்றன. ஒரே மேடையில், ஒரே சமயத்தில் நிஜமும், கதையும் கைகோத்துக் கொள்ள, சிறிது நேரத்தில் இதுதான் நிஜம், இதுதான் கதை என்று பிரிக்க முடியாத ஒரு சுவாரஸ்யமான நிலைக்கு நாடகம் முன்னேறிச் செல்கிறது.

இந் நாடகத்தின் கதையமைப்பில் மட்டுமல்ல, நாடக அரங்கேற்றத்திலும்

தமிழ் வாசகர்களுக்கு அறிமுகமான பட்டுக்கோட்டை பிரபாகர், பாலகுமாரன், சுபா போன்றவர்கள் ஏற்கெனவே சினிமாவில் புகுந்து கலக்கிவிட்டார்கள். ஆனால், பெண் எழுத்தாளர்கள் யாரும் கதை எழுத முன்வரவில்லை. இப்போது ஆர்.மணிமாலா அந்தக் குறையை நிவர்த்தி செய்திருக்கிறார். இயக்குனர் எழில் இயக்கும் ‘அமுதே’ படத்துக்கு கதை எழுதியிருக்கும் மணிமாலா, ‘திருமணத்துக்குப் பிறகு ஒருவனின் வாழ்க்கையில் காதல் தொடர்ந்தால் என்னவாகும்?’ என்ற சிக்கலான விஷயத்தை, சூப்பர் திருப்பங்களோடு தந்திருக்கிறாராம். மணிமாலா தவிர, அறிமுக இசையமைப்பாளர் எஸ். சுனில், அனைத்துப் பாடல்களையும் எழுதியிருக்கும் பாடலாசிரியர் தமிழ் அமுதன் ஆகியோர் கூடுதல் அறிமுகங்கள்.

- ஸ்ரீ

இளமை கல்கி



குறிப்பிடத்தக்க நிறைய வித்தியாசங்கள், ரசிக்கும்படியாக நிறைய புதுமைகள். ஏதோ நாடகம் பார்த்தோம், வந்தோம் என்றில்லாமல், பார்வையாளர்களான நாமும் நாடகத்தின் ஒரு அங்கமாக, நம்மையறியாமல் மாறிப் போகிறோம். உதாரணத்துக்கு, ஒரு சம்பவம். ஒரு காட்சி முடிகிறது. 'சரி அடுத்த காட்சி இனி தோட்டத்துலதான்' என்று டைரக்டர் சொன்னதும், நாற்காலியைத் தூக்கிக்கொண்டு அந்தக் கதாபாத்திரங்களோடு சேர்ந்து நாமும் அவசர அவசரமாக தோட்டத்துக்கு நகர்கிறோம்.

இந்த சுவாரஸ்யமான கூத்தை அரங்கேற்றியிருப்பவர்கள், கூத்துப்பட்டறை குழுவினர். பெயர் "ஆறு பாத்திரங்கள் ஒரு நாடக ஆசிரியனைத் தேடுகின்றன." இதை எழுதியவர் நோபல் பரிசு பெற்ற, உலகப் புகழ்பெற்ற சிசிலிய எழுத்தாளர் லூயிஜி பிரான்டல்லோ. இவருடைய பெரும்பான்மையான நாடகங்கள் இப்படித்தான். யதார்த்தமான உலகிற்கும் கற்பனை உலகிற்கும் முடிச்சுப் போடுபவை. இயக்குனர், கில் ஆலன். இவர் ஒரு ஜென் குரு. நாடகத்தின் ஒரு சிறு பகுதியில் இவர் தோன்றுவார்.

சீரியல் பார்த்துப் பார்த்து சிவந்த விழிகளுக்கு, மார்ச் 11 முதல் மார்ச் 20 வரை ஓர் இனிமையான விருந்தை கூத்துப்பட்டறை இளைஞர்கள் தரக் காத்திருக்கிறார்கள்!

- மருதன்

படம் : **முகில்**

கோலிவுட்டில் பெண் கதாசிரியர்!



• 'அழகே' படத்திலிருந்து...

கல்கி கையில் கிடைத்த வுடன் நான் முதலில் படிப்பது தைரியமாக எழுதப்படும் நடு நிலைமையான தலையங்கத் தைத்தான். "இப்படி பயப்படா மல் எழுதுகிறீர்களே, அரசியல் வாதிகளைக் கண்டு பயமில் லையா" என்று ஒருமுறை கல்கி ஆசிரியரிடம் கேட்டதற்கு, "அதற்காக நம் கொள்கையை விடமுடியுமா?" என்றார் பளிச் என்று. இதுதான் கல்கியின் பலம், எப்பொழுதும்.

சிறுவயதில் கல்கி வந்தவு டன் எங்கள் வீட்டில் யார் படிப்பது என்று ஒரு போட்டியே நடக்கும். கல்கியில் வெளிவந்த அத்தனை தொடர் களையும் சேகரித்து பைண்ட் செய்து மீண்டும் மீண்டும் படித்து மகிழ்கிறேன்.

- எழுத்தாளர்
ரமணி சந்திரன்
படம் : **ஸ்ரீஹரி**

தைரிய பலம்!



Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka